Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஜன.23-29, 2000

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 341

அற்புதன்... குமார்... அடுத்தது?

## தலைநகரில் முளைவிடும் அபாயம்




சூடு சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## ஆபத்தான காலத்தின் உதயம்!

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

எமக்கான புத்தாயிரமாமாண்டோ
அதற்கான பிரார்த்தனைப் பூஜையை
ஒலிபரப்பச் சென்றவரை
வவுனியாத் தேவாலய வளவுக்குள்ளேயே
படு கொலை செய்த நிகழ்வோடுதான்
பிறந்தது.

இவ் விரண்டாயிரமாம் ஆண்டு
உதயமாகி அடுத்த
ஒரு வாரத்துக்குள்ளேயே
இரண்டு முக்கிய
படுகொலைச் சம்பவங்கள்
அரங்கேறிவிட்டன.

ஒன்று அரசின்
உயர் தலைவர்களில்
யாரோ ஒருவருக்குக்
குறிவைத்து நிகழ்ந்த
தற்கொலைத் தாக்குதல்.
அது தவறிவிட்டது.
ஆனால் அத்தவறு
பல அப்பாவி உயிர்களைப்
பலிகொண்டு ஓய்ந்தது.

அடுத்தது
அரசாங்கத்தை
அப்பட்டமாக எதிர்த்தபடி
புலிகளின் கொள்கைகளை
முழுமையாய் ஏற்றுக் கொண்டவரெனப்
பகிரங்கமாய் பறைசாற்றிய
குமார் பொன்னம்பலத்தை
மௌனமாக்கிவைத்த
மர்மக் கொலை.

இரண்டாயிரமாம் ஆண்டானது
வன்முறைகளை
இரட்டிப்பாக்கி விட்டதைத்தவிர
வேறு எதையும் எமக்குப்
புதிதாகத் தரவில்லை.

இரட்டிப்பு என்பதைவிட
இரண்டாவது வகையான
ஒரு வன்முறைச்
செயற்பாடொன்றை
ஆரம்பித்து வைத்துள்ளதா,
என்ற விடயம்தான்
இங்கு
அச்சத்துக்குரிய
நிலைமையொன்றைத்
தோற்றுவித்துள்ளது.

முன்னொரு காலத்தில்
கொழும்பில் இருந்த தமிழர்கள்
அதிகம் பேசத்
திராணியற்றவர்களாக
இருந்தார்கள்.

'83 கலவரங்களின் பின்னர்
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்
வலிய கரங்கள்
அவர்களின்
வாயை அடைத்திருந்தன.

எனினும்
இன்று வரையிலான
17 வருட காலத்தில்
நிலைமை படிப்படியாக
மாற்றமடைந்து வந்திருந்தது.

மனித உரிமைகள்,
ஜனநாயகம்,
பத்திரிகைச் சுதந்திரம்
என்பவை பற்றிய
பொதுவான அழுத்தங்கள்
ஏற்படுத்திய மாற்றத்தோடு
தமிழர்களின் குரல்களும்
தலைநகரில் ஒலிக்கத்
தலைப்பட்டன.

தனியார் ஊடகங்கள்
உருவானதோடல்லாமல்
துணிச்சலான சில
பத்திரிகைகள் தோன்றி
உரிமைக் குரலுக்கு
வழிகாட்டி நின்றன.

அதனைத் தொடர்ந்து
ஏனைய சில தமிழ்த்
தேசியப் பத்திரிகைகளிலும்.
பல்வேறு நபர்கள்
அரசுக் கெதிராகவும்
போராட்டத்தை ஆதரித்தும்
நேரடியாகக் கூட
எழுத முன்வந்தனர்.

இவ்வாறாக
மாறிவந்த சூழலுக்கு
புலிகளின் செயற்பாடும்
வகைசெய்வதாய் இருந்தது.

தலைநகரையும் பல குண்டு
வெடிப்புகளுக்கு
இலக்காக்கியது.
அதன் வீச்சலை
ஜனாதிபதிகள் வரை
உயர்ந்து சென்றது.

இவ்வாறு
நிலமையைக்
கட்டுக்குள் அடக்க முடியாத
திண்டாட்டத்தின் மத்தியில்தான்
வித்தியாசமான வகைப்பட்ட
கொலைச் சம்பவங்கள்
நிறைவேறத் தொடங்கியுள்ளன.

அவை
புலிகளுக்கு ஆதரவாகக்
கருத்து வெளியிடுவோர் மீது
கைவைக்கும் வகையில்
அமைந்திருந்தன.

அற்புதனின் கொலை
இந்த வகையில் நிகழ்ந்த
முதலாவது கொலை.

இப்போது நிகழ்ந்துள்ள
குமாரின் கொலை
புதிய கேள்விகளை
எழுப்பிவிட்டுள்ளது.

துணிச்சலாகச் செயற்படவும்
எழுதவும் முன்வந்திருந்த
தமிழர்கள் சிலர்
அனாமதேயத் துப்பாக்கி ஒன்றிடம்
பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளனரா?

இப்படியான
மாற்று ஒழுங்கொன்று
எங்காவதோரிடத்தில்
திட்டமிடப்பட்டிருந்தால்,
மிக ஆபத்தான காலமொன்றுக்கு
கட்டியம் கூறும் நிகழ்வுகளாகவே
இந்தக் கொலைகள்
சுட்டிக்காட்டி நிற்கின்றன.

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,**
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## பரம் விரும்பும் பக்தி மார்க்கம்

**ப**ரம் பொருள் அம்சமான கண்ண பரமாத்மா 'பக்தி' மார்க்கத்தைப் பற்றி அர்ச்சுனனுக்கு இவ்வாறு கூறுகின்றார்:

"குந்தி மைந்தனே! பிற தெய்வங்களை நம்பிக்கையோடு வழிபடும் பக்தர்களும் என்னையேதான் வழிபடுகின்றனர். அவர்கள், என்மீது செலுத்தும் பக்தியால், நான் யாவன்.எத்தகையவன்? என்பதை உண்மையாகவே அறிகின்றார்கள். அங்ஙனம், என்னை உண்மையாகக் கண்டபின் விரைவில் என்னிடம் புகுந்து விடுகின்றனர்.

என்னை அடைவதற்கு பல வழிகள் உள்ளன. அவ்வனைத்திலும் பக்தி நெறியே உயர்வற உயர்ந்த நெறியென்று நான் உறுதியாகக் கூறுவேன். பக்தி வேறு அனைத்தையும் மறக்கச் செய்கின்றது. பக்தி என்னுடன் பக்தனை ஒன்று படுத்துகிறது.

நன்கு கொளுத்தப்பட்ட தீ, கட்டைகளை எரித்துச் சாம்பலாக்கி விடுவது போல என்பால் கொள்ளும் பக்தி, பாவங்களையெல்லாம் முற்று முழுதாக எரித்து விடும். பக்தர்கட்குப் பிரியமான பரமாத்மாவாகிய என்னை அன்பாலும் பக்தியாலுமே அடையக்கூடும்...


என்மீதுள்ள பக்தியால் கறைபட்டோரிலும், தூய்மையடைகின்றனர். யோகமோ, ஞானமோ, கல்வியோ, தவமோ, துறவோ என்மீது கொள்ளும் முதிர்ந்த பக்தியைப் போன்று வேறு எதுவும் என்னை வசப்படுத்தாது.

நல்லோர்க்கும் பிரிய ஆத்மாவாயுள்ள என்னை, சிரத்தையால், விளையும் பக்தியொன்றால்தான் அடைய முடியும். என்மீது செய்யும் பக்தி சண்டாளனது பிறவி மாசையும் போக்கித் தூய்மையாக்கும்.

ஆதலால் கனவையோ; கற்பனையையோ விடுவது போன்று பொய் பொருள்களின் மீதுள்ள சிந்தனையை துறந்து, என்மீதுள்ள பக்தியால் தெளிந்த மனதை என்னிடம் குவியச் செய்க...!"

இந்த மெய்மொழிகளை எமக்கே அர்ச்சுனன் வாயிலாக பரமாத்மா நவின்றுள்ளான் எனக் கொள்வோமாக.

தொகுப்பு: கொஸ்லாந்தையூர்-அஞ்சன்.



## ஒரு நாள் உணவு மறுநாள் பட்டினி

**"ப**சியென்னும் கரத்தால் சொர்க்கத்தின் கதவை திறக்கும்படி தட்டிக் கொண்டு இருங்கள்!" என்று அருமைப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

*(அல்ஹதீஸ்)*

நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்: "இறைவன் என்மீது அருள்புரிந்து, உமக்காக மக்காவிலுள்ள இந்த மலைகளைப் பொன்னாக்கித் தரட்டுமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு நான் "யா அல்லாஹ், நான் அதை விரும்பவில்லை ஒரு நாள் வயிறு நிறைய சாப்பிட்டால் மறுநாள் பட்டினியாகவே இருக்க விரும்புகிறேன். பசியோடு இருந்தால்தான் மனமுருகி உணர்ச்சியோடு உன்னை தியானிப்பதற்கு முடிகிறது. பிறகு உணவு கிடைத்து வயிறு நிறைந்ததும் உன்னை ஞாபகம் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே உன்னைப் போற்றிப் புகழ்கிறேன்!" என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

*(புஹாரி)*

"இரணம் குறைவாகக் கொடுக்கப்பட்டு அதைக்கொண்டு போதுமாக்கிக் கொள்ளும் முஸ்லிமே! நிச்சயமாக வெற்றி பெற்றவராவார்!" என அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) அவர்கள் நபி (ஸல்) நவின்றதாக கூறினார்கள்.

*(அல்ஹதீஸ்)*

தொகுப்பு: என்.எம்.புஹாரிஷாத், ஒட்டமாவடி-01.

# கவிதைப் போட்டி இல.338



## பரிசுக்குரிய கவிதை

### எப்போது பூக்கும்?

புத்தாயிரத்தாண்டில்
புத்தாடை அணிந்து
புதுமைகள் கண்டு
பூரிக்க இருந்தும்
புன்னகை கிடைக்கவில்லை...
எம்மைப் புதுப்பிக்க
இன்னுமொரு புத்தாண்டு
எப்போது பூக்கும்?

வீ.ஜீவன்-குருக்கள் வீதி,
அக்கரைப்பற்று-07.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### தேடல்!

அப்பாவைத்தேடி
அம்மாபோனா.....
அவர்களைத் தேடி
நாங்கள் போகிறோம்....
எங்களைத் தேட
யாரும் இல்லை!

கயல்வண்ணன்-வவுனியா.

### திரும்பிப்பாரடி

இடுப்பிலே
இளசைச் சுமந்து,
இருபத்தோராம்
நூற்றாண்டிலே
அடி எடுத்து வைத்து
பயணத்தைத் தொடரும்
இளம்பிள்ளாய்.....
கடந்து வந்த பாதையையும்
சற்றே திரும்பிப்பாரடி.

சரவணமுத்து நவேந்திரன்-
வெல்லாவெளி(கி.மா)

### அநாதைகள்

'ஜயசிக்குறு'வில் தந்தையை
இழந்தோம்,
சூரிய கதிரில் தாயை இழந்தோம்,
இப்போது எங்களுக்கு மிஞ்சியது
அநாதைகள் என்ற பட்டம்!

மு.உமாகாந்த்-மட்டக்களப்பு.

### யார் காரணம்?

கொஞ்சு தமிழை
பஞ்சமின்றி
கற்கவேண்டிய
பிஞ்சு வயதில்
பிள்ளையைச் சுமந்து
நீ செல்ல
யார் காரணம்?

அ.யாழினி-மட்டக்களப்பு.

### காணாமல் போனவை

சொந்தங்களை காணோம்
சுதந்திரத்தையும் காணோம்
தொலைந்து விட்ட
சமாதானமாவது கிடைக்குமா?
என்று
தேடிப்பார்க்கலாம் வா தம்பி!

நஜிமுன்நிஸா ஏ.ஹசன்-பாலையூற்று.

### சுமை!

ஆட்சிக்குச் சுமை என்று
அப்பாவை அனுப்பினர் வெளிக்கடைக்கு
நாட்டுக்குச் சுமை என்று
அம்மாவை அனுப்பினர் செம்மணிக்கு!
இதனால் உன்னைச் சுமக்கும்
என்னையும் எங்கோ அனுப்பப்போகிறார்கள்!
வீதிக்கு சுமை என்று.
நாளை நீயும்..?

எஸ்.ஏ.கே.எம்.ஹசீர்-கல்-எளிய.

### வன்னியில்

பாழ்ப்பட்ட
போக்குந்த
சீர் கெட்ட
வாழ்வா இது?

சோ.சங்கரலிங்கம்-
திருப்பழுகாமம்-02

### முரண்கள்

மிலேனியத்தின்
முதல் குழந்தைக்கு
உலகெல்லாம் விளம்பரம்!
வன்னிப்புதல்வனே!
உனக்கில்லையே ஒரு
வாழ்விடம்!

க.விஜயகுமார்-கலஹா.

### துளிர்சுமக்கும் தளிர்

'துள்ளித்திரிந்து
பள்ளிச் செல்லும்
வயதில்,
தளிரொன்று
அள்ளித் திரிகிறது
(தன்) அன்பு
சோதரத்தை

கே.சுப்ரமணியம்-
ஹேவாஎட்டை.

### உதவுவீர்களா?

என் சொந்த உறவுகளை
என் சொந்த மண்ணிலேயே புதைத்து விட்டு
என்னையும் என் எஞ்சிய உறவையும்
என் நெஞ்சிலே சுமக்கிறேன்!
என்னால் முடியவில்லை
ஒரு கைகொடுத்து உதவுங்கள்.

ந.நகுலேஸ்வரன்-செங்கலடி.

### சவாரி

அரசு மக்களில் சமாதி,
அம்மி அக்காவில் சவாரி,
அம்மையப்பன் புதைகுழியுள் சமாதி!

எஸ்.ஞானராசா-வாழைச்சேனை.

### தொடர்கதை(யா?)

புது நூற்றாண்டிலும்
இருக்க இடமின்றி....;
உடுக்க உடையின்றி.....;
உண்ண உணவின்றி....
இருவரும் அலைகிறோம்!

ந.மதி- மோதர.

### உடன்பிறப்புக்கள்

புதிய சகாப்தத்தில்
புதுமை படைக்கப்
புறப்பட்டுவிட்ட
அனாதைகளான
உடன்பிறப்புக்கள்!

சரஸ்வதி மயில்வாகனம்-
ஆரையம்பதி.

# கவிதைப் போட்டி இல.341



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 29.01.2000

கவிதைப் போட்டி இல.341
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## பேரிழப்புக்கள்

*அன்பின் முரசே!*

இந்நாட்டின் தமிழ்த் தலைவர்கள் ஒவ்வொருவராக ஒழிந்தும் ஒழிக்கப்பட்டும் வருகின்றனர்.

கலாநிதி நீலன் திருச்செல்வம் குண்டுக்குப் பலியானார். அவரை ஒழித்துக் கட்டியவர்கள், நீலனைத் 'துரோகி' என்று பட்டம் சூட்டியிருக்கலாம். ஆனால் அவர் ஒரு ஆற்றலுள்ள தமிழ்த் தலைவர் என்பதை மறுக்க முடியாது.

அவரைத் தொடர்ந்து தலைவர் தொண்டமான் இயற்கை எய்தினார். அவர் மறைவு ஈழத்தமிழினத்துக்குப் பேரிழப்பு. அவர் உயிர் துறந்த அதே காலகட்டத்தில் இந்நாட்டின் தலை சிறந்த-துணிச்சல் மிக்க ஓர் எழுத்தாளர் அற்புதராஜா துப்பாக்கி ரவைகளுக்கு இரையாக்கப்பட்டார். அன்னாருடைய கூர் மழுங்காப் பேனா முனையினால் வதைக்கப்பட்ட யாரோதான் அவரை உயிரிழக்கச் செய்திருக்க வேண்டும். இது உண்மையில் ஒரு கோழைத்தனமான செயல். பேனாவால் தாக்கியவரை, வேறொரு பேனாவால் தாக்க வலுவற்றவர்கள் இக்கொலையினைப்புரிந்துள்ளனர்.

ஈழத்தமிழன் தன்மானமுள்ளவன்; 'அஞ்சா நெஞ்சன், எவர்க்கும் அடி பணிய மாட்டான்' என்று உலகறியப் பறைசாற்றிய வீரத்தமிழன் குமார் பொன்னம்பலம்.

இவர்கள் ஒருவர் பின் ஒருவராக எம்மை விட்டுப் பிரிந்த கொடுமை தமிழர் நெஞ்சங்களை என்றும் வாட்டி வதைக்கவே செய்யும்!

செ.ஆனந்தகிருஷ்ணன், திருமலை.



*அன்பின் முரசே!*

ஆசிரியரின் இழப்பிற்குப் பின் இப்பத்திரிகை தரமிழக்கலாம் எனும் ஐயங்களை முறியடிக்கும் பொருட்டு பத்திரிகை மீண்டும் மாறாப் பொலிவுடன் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வு கொள்கிறோம். என்றும் தினமுரசுப் பத்திரிகை எம் இதயங்களில் நீங்கா இடம்பெறவும் மேலும் மேலும் பொலிவடையவும் உண்மை விளம்பியாக திகழவும் பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.

ஆர்.பிரான்சிஸ், (சில்லையூர்)

❀❀

*அன்பின் முரசே!...*

உலகெங்கும் ஒலிக்கும் வகையில் முரசொலிக்கின்றாய். அது உன் சிறப்பு. எம் ஒத்துழைப்பு. அது சரி 'தானும் சீரழிந்து மக்களையும் சீரழிக்கும் சினிமா'வுக்கு ஏன் இவ்வளவு பெரிய பகுதி ஒதுக்கியுள்ளீர்கள்? புவனா தரும் 'மோனிக்கா என் மோனிக்கா' எம் நாட்டிற்கு அவசியமானதா? வாசிக்கவே அருவருப்பாக உள்ளது. சினிமாப்பகுதியை தயவு செய்து குறையுங்கள்.

யாழ். இளைய பத்மநாதன், வவுனியா.

## தாமதமின்றி

*முரசே!*

கடந்த சில வாரங்களாக முரசு கால தாமதமாகியே சந்தைக்கு வருகிறது. இதனால் முரசை எதிர் பார்த்துக் காத்துக்கிடப்போர் ஏமாற்றமடைய நேரிடுகிறது.

தாமதத்துக்கான வலுவான காரணம் இல்லாமலிருக்காது என்று என்போன்ற வாசகர்களுக்கு உண்டு. இருப்பினும் எத்தனையோ அபிமான வாசகர்கள் அத்தகைய காரணங்களை அலசிப் பார்க்கும் பொறுமையற்றவர்கள். எப்படியும் குறித்த தினத்தில் முரசை எம் கைகளில் தவள விட வேண்டிய பொறுப்பு முரசு நிர்வாகம் மற்றும் ஊழியர்களிடம்தான் தங்கியுள்ளது.

சீ.அமரசிங்கம், கொழும்பு-09.

*முத்தான முரசே!*

தெளிவான உரைநடையிலும், தெவிட்டாத தேன்மொழியிலும் நீ தரும் 'எக்ஸ்ரே ரிப்போட்', 'அலசுவது இராஜதந்திரி', மற்றும் முக்கிய குறிப்புகளால் எனதுள்ளம் களிப்படைகின்றது. உண்மைகளை உரிய வேளையில் உலகறியச் செய்யும் உனக்கு, எனது புதுவருட வாழ்த்துக்கள்.

ஜெபநாயகம் சர்வானந்தன், ஏறாவூர்-05.

❀❀

வாரம் தோறும் வெற்றி நடை போடும் என் இனிய முரசே! மறுபடி உன் வருகைக்கு மிக்க நன்றி. வரும் 21ம் நூற்றாண்டில் உன் வெற்றி நடை தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ரமீஸா கமர்தீன், மடவளை பசார்.

---

தினமுரசு மீண்டும் பவனி வரக் கண்டே(ம்)ன். களிகொண்டே(ம்)ன். நன்றி, எங்கே நீயும் இருட்டறைக்குள் இறுக்கப்பட்டு விடுவாயோவென்று ஏங்கியிருந்தோம். ஏனெனில் இந்நாட்டிலே சுதந்திரமான சிந்தனைக்கு செயலுக்கு, சேவைக்கு இடமில்லையென்பதை இரும்புக்கரம் கொண்டு இயக்கும் இதயமற்ற மனிதர்கள் என்ற உருவத்தையுடைய உலுத்தர்களின் செயல்களே சாட்சியாக அமைந்துப் போனதால்;

வாரமொரு முறையென்ன நாளொரு இதழ் வந்தாலும் எம் ஆவல் அடங்காது. உன்னைக் காக்க நாமுள்ளோம். நம் முன் இன்னும் எத்தனையோ கேள்விகளும்-வேள்விகளுமுண்டு. தோல்வி என்பதுவும் எமக்கு வெற்றிக்கான விதையென எண்ணுவோம். விடுபட்ட இடத்தை நிரப்புவோம். விண் எட்ட முரசு கொட்டுவோம்.

கே.சுப்ரமணியம், ஹேவாஎட்ட.

## நல் வாழ்த்துக்கள்

பல பத்திரிகைகள் வந்தாலும், எனது முரசுக்கு நிகராக ஒன்றும் இல்லை. அவ்வாறான எனது முரசுக்கு நிகழ்ந்த சம்பவத்தைக் கேட்டு நான் மிகவும் கவலையடைந்தேன். ஆனாலும் எமது இறைவனின் கருணையினால் அவற்றுக்கு முகம் கொடுத்து மீண்டும் நடை போட ஆரம்பித்துவிட்டது எனது இனியமுரசு! அதற்கு நான் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்!

சி.பிறேம்தாஸ்,மட்டக்களப்பு.

**மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266**

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

# "போர் உடன் நிறுத்தப்பட வேண்டும்!"

# தவறினால் நாடு சுடுகாடாகும்!

## –முரசு வாசகர்கள் கருத்து–

**"நாட்டில் பெருகிவரும் குண்டுத் தாக்குதல்கள், தற்கொலைதாரிகளின் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள், யுத்தமுனை எறிகணை மற்றும் குண்டு வீச்சு போன்றவற்றால் தினசரி இந்நாட்டுக் குடிமக்களின் உயிர்களும் உடமைகளும் நாசமாகிப் போகின்றன. சின்னஞ்சிறு நாடான இலங்கையில் இத்தகைய சூழ்நிலை தொடருமானால் வெகுவிரைவில் இந்நாடு சுடுகாடாகிவிடும்" என்று முரசு வாசகர்களிடம் திரட்டிய தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இந்நாட்டில் இனப்பூசல்கள் எல்லாம் மறைந்து, அமைதி திரும்ப வேண்டும் என்பதில் சகல மக்களும் ஒரே மனப்பான்மையில்தானிருக்கிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அரசியல்வாதிகள்கூட மேடைக்கு மேடை இதனையே கூறி வருகிறார்கள். ஆனால் உண்மையான சமாதானம் நிலைபெற வேண்டும் என்பதற்கான உருப்படியான நடவடிக்கையில் எவரும் திரிகரண சுத்தியுடன் ஈடுபட்டதாகத் தெரியவில்லை என்று திருவாளர் பொதுஜனம் கவலை தெரிவிக்கிறார்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்நாட்டைத் தமது தாய் நாடாகக் கொண்ட சகல பிரிவாரும் இந்நாட்டில் அமைதி திரும்பி, சகல மக்களும் சகோதரர்களாக வாழவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறார்கள். ஆயுதப் போர் மூலம்தான் நாட்டில் அமைதியை நிலை நாட்ட முடியும் என்று கருதுபவர்கள், இப்போரினால் தனிப்பட்ட வகையில் பயன்பெறும் ஒருசில ராகத்தான் இருக்க முடியும்.

துப்பாக்கிகளாலும், பீரங்கிக் குண்டுகளாலும், மோட்டார்களினாலும் அன்றாடம் இரத்தம் சிந்துபவர்கள் வேற்று நாட்டவர்களல்ல; இந்த நாட்டில் பிறந்தவர்கள்தான். ஆயுதப் பிரயோகங்களினால் கையிழந்து, காலிழந்து இரத்தம் சிந்தி முடமாகித் துன்புறுபவர்களும் இந்த நாட்டுச் சொந்தக்காரர்கள்தான். ஏதோ ஒரு சிலரின் சொந்த அபிலாசைகளுக்காக பல்லாயிரக் கணக்கான இந்நாட்டு மக்கள் ஏன் மாண்டு மடிய வேண்டும்? அன்றாடம் நாசமாகும் இந்நாட்டுக்குரிய சொத்துக்களைக் கணக்கிடத்தான் முடியுமா?

யுத்தம் தொடருமானால் வெகுவிரைவில் இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவருமே கொன்றொழிக்கப்பட்டுவிடுவார்கள். விளைபொருட்கள், உற்பத்திகள் ஆகியன யாவும் சின்னாபின்னப்பட்டுச் சீரழிந்து போகும். இதன் பின்னர் இந்த நாட்டில் வெறும் சாம்பல்தான் மிஞ்சும்.

நாட்டில் எங்கு திரும்பினாலும் குண்டு வெடிப்புகளும் துப்பாக்கி வேட்டுகளும் ஒலித்த வண்ணமே உள்ளன. எப்போது எவர் தலையில் குண்டு விழுமோ என்ற அச்சமே சகலரையும் பீடித்துள்ளது. பாதுகாப்பான இடம் என்று எந்தவோரிடத்தையும் எவரும் தேடிக்கண்டு பிடிக்கமுடியாத அளவுக்கு நிலமை படுமோசமடைந்துவிட்டது.

ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களானாலும் விடுதலைப் புலிகளானாலும் ஏதாவதொரு வழி முறையைக் கையாண்டு, போரை நிறுத்தி, சமாதானத்துக்கு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டிலுள்ள சகல இன-மத-மொழி சார் பொதுமக்களிடம் சாதாரணமாக வாய்மொழிமூலம் 'முரசு' சேர்த்தெடுத்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட கருத்தையே இங்கு தந்திருக்கிறோம்.

# "செய்தி ஊடகங்களைச் சாட வேண்டாம்!"

## செய்தியாளர் சங்கம் அறைகூவல்

ஜனநாயக ஆட்சி முறை எந்த நாட்டிலாவது சிறப்புற வேண்டுமானால், ஆட்சி பீடமேறிய ஆட்சியாளர்களின் பொதுத் தொடர்புகள் பற்றிய ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு இடமிருக்க வேண்டும்.

ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் என்பதனால் அவர்கள் தவறுவிடமாட்டார்கள் என்று கூறிவிட முடியாது. அவர்கள் விடும் தப்புக்களும் தவறுகளும் சுட்டிக் காட்டப்பட்டால்தான் திருத்தங்கள் இடம்பெற முடியும். இவ்வாறு தவறைத் தவறு என்று சுட்டிக் காட்டும் துணிவு ஆட்சிபீடத்திலுள்ளவர்களுக்கோ, அவர்களுக்கு ஆதரவு வழங்கும் அரச ஊடகங்களுக்கோ இருக்கப்போவதில்லை. ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் உதிர்க்கும் ஒவ்வொரு வாக்கும் அவர்களுக்குத் தேவ வாக்காகவே கருதப்படும்.

தனியார் ஊடகங்கள் மட்டும்தான் ஆட்சியிலுள்ளவர்களின் தப்புத் தண்டாக்களைத் துணிவாக எடுத்துக்கூறும் வல்லமை பெற்றவை. எனவே அரசின் போக்கை விமர்சிக்கும் தனியார் ஊடகங்களைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது நியாயமாகாது.

நாட்டு மக்களுக்கு புத்தாயிரமாமாண்டு தொடக்கத்தை ஒட்டி ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா விடுத்த செய்தியில், இங்குள்ள தனியார் ஊடகங்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிட்டே கண்டித்துள்ளார். ஊடகங்கள் மட்டுமல்லாமல் சில தனியார் வர்த்தக நிறுவனங்களும் அவற்றின் உரிமையாளர்களும் பெயர் குறிப்பிடப்பட்டே ஜனாதிபதியால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

'பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்,' ஜனாதிபதி அவர்கள் தனியார் ஊடகத்துறையைத் தமது உரையில், குற்றவாளிகளாக குறிப்பிட்டதை ஆட்சேபித்த அறிக்கை ஒன்றை விடுத்திருகிறது. முன்னர் இருந்த அடக்கு முறையைத் தளர்த்தி, ஊடகங்கள் சுதந்திரமாக இயங்குவதற்கு தான் ஜனாதிபதி பதவி ஏற்றபோதே வழி ஏற்படுத்தப்பட்டது என்று கூறிய ஜனாதிபதி சந்திரிக்காவே, அத்தகைய ஊடகங்களைச் சாடுவது முறையாகுமா? என்றும் வினா எழுப்பப்பட்டுள்ளது.

# இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சியில் கிராமிய இளைஞர்கள்!

சிறீலங்கா இராணுவத்தின் உயர் பதவிகளை, வருங்காலத்தில் தென் இலங்கையிலுள்ள கிராமப்புற இளைஞர்களே கைப்பற்றுவார்களென மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

முன்பெல்லாம் ஆயுதப்படைகளின் உயர்தர அதிகாரிகள் பதவிகளுக்கு கொழும்பு, கண்டி போன்ற பெரு நகரப் பாடசாலைகளில் பயிலும்-சற்று வசதிபடைத்த மாணவர்களே விண்ணப்பிப்பார்கள். அவர்களே இப்பதவிகளுக்கு நியமனம் பெறுவார்கள். ஆனால் இப்போதெல்லாம் வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்த எவரும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்பெல்லாம் கொழும்பு, கண்டி போன்ற நகரங்களிலுள்ள உயர்தரப் பாடசாலைகளில் 'கடேற்' என்றதொரு பிரிவில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்படுவதுண்டு. இவ் வகுப்புகளிலும் மேல் மட்டக் குடும்பப் பிள்ளைகளே பெரிதும் சேர்வதுண்டு. இவர்கள் பின்னர் படைப்பிரிவுகளின் அதிகாரிகள் வரிசையில் சுலபமாகச் சேர்வதற்கு வாய்ப்புகளுண்டு.

இப்பொழுதெல்லாம் இராணுவ அதிகாரிகளாக எதிர்காலத்தில் பணிபுரிவதற்கென்றே இராணுவ ரீதியாக 'கடேற்' பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு சேர்க்கப்படுபவர்களுக்கு தியத்தலாவை முகாமில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

அண்மையில் இப்பயிற்சிக்காக 81 இளைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரேயொரு முஸ்லிம் இளைஞரும் அடங்குகிறார். கண்டி, குருநாகல், அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள கிராமப்புற இளைஞர்களே இணைந்துள்ளனர் என்று அறியப்படுகிறது. பொதுவாக முக்கியமான நகரங்களிலுள்ள பிரதான கல்லூரிகளிலிருந்தே, அதிகாரிகளுக்கான பயிற்சிக்கு ஆட்கள் சேர்க்கப்படுவதை இராணுவ உயர் பீடம் விரும்புவதாகத் தெரிகிறது.

ஞாயிறு தோறும் வெளிவரும் 'சண்டே ஐலண்ட்' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

# ஆசிரியர் இடமாற்றம்

## இரத்தாக வழியுண்டு!

ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து கல்முனை, நிந்தவூர் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் உள்ள பல ஆசிரியர்களுக்குத் திடீர் இடமாற்ற உத்தரவுகள் அனுப்பப்பட்டன என்பது தெரிந்ததே. இத்தகைய இடமாற்றங்கள் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று ஆசிரியர் சங்கம் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிகிறது.

இது இவ்வாறிருக்க, கல்முனை கல்வி வலயத்தில் தற்போது அரசியல் விளையாட்டு நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திடீர் இடமாற்ற உத்தரவு பெற்ற ஆசிரியர்கள், குறிப்பிட்ட ஓர் அரசியற் கட்சியில் இணைவதாக எழுத்து மூலம், அதிகாரிகளிடம் விண்ணப்பித்தால் இடமாற்ற உத்தரவு இரத்து செய்யப்பட்டு விடுமாம்.

# பயணிகள் பஸ் மீது தாக்குதல்!

## ஒரு பெண் பலி! மூவர் காயம்!

கல்முனையிலிருந்து - திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று தாக்குதலில் அகப்பட்டபோது அதில் பயணம் செய்த பெண்ணொருவர் பலியானார். மேலும் மூவர் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

18.01.2000 அன்று காலை மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலையில் 6ஆம் கட்டை என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அந்தப் பாதையில் பஸ் பயணம் செய்து கொண்டிருந்தபோது திடீரெனக் குறுக்கிட்ட ஓர் ஆயுதம் தாங்கிய குழுவினர் பஸ்மீது தாக்குதல் நடத்தியதாகப் பயணிகள் தெரிவிக்கிறார்கள்.

இதனிடையே மட்டக்களப்பில் நடைபெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவரும் பொதுமக்கள் இருவரும், காயங்களுக்குள்ளாகினர். மட்டக்களப்பு-செங்கலடிச் சந்தியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோதே அந்த இருவரும் காயப்பட்டார்கள். என்று தெரியவருகிறது.

களுவாஞ்சிக்குடி பொது சந்தைக்கருகில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது ஒரு பெண்ணும், ஒரு ஆணும் காயமடைந்தனர். இவர்கள் இருவரும் சிவிலியன்கள். இச் சம்பவங்களும் 18.01.2000 அன்றுதான் நடந்தன.

# மன்னாரில் மீளக்குடியமர்ந்தோர்

## தொடர்ந்தும் துன்புறுத்தல்

மன்னார் மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் மீளக் குடியமர்ந்துள்ள முஸ்லிங்கள் தொடர்ந்தும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த 14.01.2000 வெள்ளிக்கிழமை இங்குள்ள தாராபுரம் கிராமத்திற்குள் புகுந்த திடீர் கோஷ்டியொன்று இங்கு விநியோகிக்கப்பட்டிருந்த மண் எண்ணெய் அட்டைகளை பறிமுதல் செய்துள்ளது.

மன்னார் கச்சேரியின் கீழுள்ள உணவுக் கட்டுப்பாட்டுக்கிளை அலுவலர்கள் எனக் கூறிக் கொண்டு இக்குழுவினர், முஸ்லிம்களை மிகவும் கேவலமான முறையில் நடாத்தியதாகத் தெரிய வருகிறது.

புனித நோம்புப் பெருநாளைக் கொண்டாட மன்னாரிலிருந்து கற்பிட்டிப் பகுதிக்குச் சென்றிருந்த ஏழு குடும்பங்களினது மண்ணெண்ணெய் அட்டைகள் மேற்படி குழுவினரால் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக உணவுக் கட்டுபாட்டுக்கிளை விலைக் கட்டுப்பாட்டு அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது மிகவும் பொறுப்பற்ற முறையில் பதிலளித்ததுடன் முரசு நிருபரை மிகவும் கேவலமான முறையில் நடாத்தியுள்ளார். இந்த அதிகாரியின் நடத்தை குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரவிருப்பதாகத் தெரிகிறது.

# ஆயுள்வேத வைத்தியர் பதவி நீக்கம்?

## காரணம் எதுவும் காட்டப்படவில்லை!

(திருமலை நிருபர்)

பதில் ஆயுள்வேத வைத்தியராக மூன்று வருடங்கள் கடமையாற்றிய பெண்மணியொருவர் எவ்வித காரணங்களும் காட்டப்படாமல் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறார்.

இது சம்பந்தமாக அவர் செய்த முறைப்பாடுகள் யாவும் பயனற்றுப் போன நிலையில், ஆயுள்வேத வைத்திய பாதுகாப்புச் சபைக்குத் தனது முறைப்பாட்டை அனுப்பி வைத்துள்ளார்.

திருமதி கணேசலிங்கம் லலிதாதேவி என்ற இந்த ஆயுள்வேத வைத்தியர், பருத்தித்துறைப் பிரதேச சபையால் உரிய அங்கீகாரங்களுடன் 15.11.93ல் நியமிக்கப்பட்டார். செப்பியன்பற்று, குடத்தனை, நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் இவ்விரண்டு நாட்கள் வீதம் தனது ஆறு நாள் கடமையைச் செய்து வந்திருக்கின்றார்.

1997 டிசம்பருடன் சம்பளம் வழங்கப் பணம் இல்லையெனக் கூறி இவர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். பிணைப் பணமாகக் கட்டப்பட்ட ஐயாயிரம் ரூபாவைத் தானும் இதுவரை திணைக்களம் இவருக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை.

வீண் செலவுகளுக்குப் பெயர் பெற்ற மாகாண சபை நியாயமான கொடுப்பனவுக்குப் பணம் இல்லை என்பதில் என்ன நியாயமிருக்கிறதோ தெரியவில்லை.

# இந்துக்கள்–முஸ்லிம்கள் புனித நாட்களில்

## சுற்றி வளைப்புத் தேடுதல்

ஜனாதிபதி மீது இடம்பெற்ற குண்டுத் தாக்குதல், களுத்துறைச் சிறைச்சாலையில் தாக்குதல், தமிழ்ப் பகுதிகளில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடைக்கப் பெற்ற மிகக் குறைந்த வாக்கு வீதம் போன்ற நிகழ்வுகளுக்குப் பின்னர், தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள் மிக மோசமான நிலைக்கு வந்துள்ளன என்று அஞ்சப்படுகிறது.

கொழும்பு, தெஹிவளை-கல்கிசை மாநகர சபைப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு சுமார் 2000த்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னர் மீண்டும் கொழும்பிலும், வடக்கு கிழக்கிலும், தோட்டப் பகுதிகளிலும் பல சுற்றி வளைப்புகள் இடம் பெற்றுள்ளன.

16.01.2000 அன்று நள்ளிரவு முதல் சுற்றி வளைக்கப்பட்டு சல்லடைத் தேடுதல் இடம் பெற்றது. சுமார் 1000ற்கு மேற்பட்ட இராணுவத்தினரும் 200க்கு மேற்பட்ட பொலிஸாரும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இது போன்ற மற்றுமொரு மிக மோசமான சுற்றி வளைப்புத் தேடுதல் சம்பவமொன்று மத்துகம-அம்பேதென்ன தோட்டப் பகுதியில் இடம் பெற்றது.

தைப்பொங்கல் தினத்தன்று அதிகாலை மூன்று மணிக்கு தோட்டப் பகுதியைச்சுற்றி வளைத்த இராணுவத்தினரும் பொலிஸாரும் கெடுபிடியான தேடுதலை நடத்தினர். விசாரணைக்காக ஏராளமானோர் பொலிஸ் நிலையம் கூட்டிச் செல்லப்பட்டனர். அவர்களது கை ரேகைகளும் பதிவு செய்யப்பட்டன. அன்றைய தினம் பொரும்பாலான அத் தோட்டப் பகுதி மக்களால் பொங்கல் பொங்க முடியவில்லை.

தமிழ் மக்களின் புனித நாட்களையும் பொருட்படுத்தாது அவர்களை இம்சைப் படுத்துவதிலேயேதான் சீருடையினர் மும்முரமாக நிற்கின்றனர்.

தோட்டப் பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் மீதான நெருக்கடிகளும் கெடுபிடிகளும் அதிகரித்த வண்ணமுள்ளன.

தமிழ் மக்களின் புனித நாளான தைப் பொங்கலன்று சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது போன்றுதான் கடந்த வாரம் முஸ்லிம்களின் புனித நோன்புப் பெருநாளுக்கு முந்திய சிறப்புத் தொழுகையான வெள்ளிக்கிழமையன்றும் கொழும்பில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட வேளையில் தமிழ்-முஸ்லிம்கள் அனைவரும் தீவிரமாக விசாரிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொட்டும் மழையிலும் கிட்டுவுக்கு அஞ்சலி!

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலும் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள ஏனைய பகுதிகளிலும் கிட்டுவின் 7வது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கில் இடைவிடாத கனத்த மழை பெய்து கொண்டிருந்த போதும் புலிகளின் மூத்ததளபதி ஜெனரல் கிட்டுவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளைப் புலிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

பல பகுதிகளிலும் கிட்டுவின் உருவப் படத்திற்கு மலர் மாலைகள் சாத்தி, அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மக்கள் ஊர்வலமும் இடம் பெற்றது.

1993 ஜனவரி 16 ஆம் திகதி வங்கக் கடலில் புலிகளின் மூத்த தளபதி ஜெனரல் கிட்டு உட்பட மேலும் 10 பேர் பலியானார்கள் என்பது தெரிந்ததே.

# திருமலை தபாற் கந்தோர்

## அமையவிருக்கும் புதிய கட்டடம் தேவைக்கு ஏற்றதாகாது!

(திருமலை நிருபர்)

வழக்கமாக திணைக்களம் ஒன்றுக்குப் புதிய கட்டடம் நிறுவும்போது, வசதிகள் கூடியதாகவும் அளவில் பெரிதாகவுமே அமையும். ஆனால் திருக்கோணமலை தபாற் கந்தோர் கட்டடம் எதிர்மாறாக அமையவுள்ளது.

தற்போது இருக்கும் கட்டடம் அறுபது வருடங்கள் பழைமை வாய்ந்தது. இக் கட்டடத்தில் அஞ்சல்துறை சார்ந்த 36 உத்தியோகத்தர்களும் 80 வரையிலான பணியாளர்களும் கடமை புரிந்து வருகின்றனர். தினமும் சுமார் ஆயிரம் தபால் பைகள் இங்கே வந்து போகின்றன.

பல்வேறு பிரிவுகளைக் கொண்ட இந்த தபாலகம் இட நெருக்கடி காரணமாக மிகவும் கஷ்ட நிலையிலேயே இயங்கி வருகிறது.

இவற்றைக் கருத்திற் கொண்டு 91 இலட்சம் ரூபா செலவில் நவீன கட்டடம் ஒன்று அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் 80 இலட்சம் ரூபாயே ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான வரைபடம் ஒற்றைத் தளம் கொண்ட 4200ச.அடி கட்டடத்துக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது உள்ள கட்டடம் 8,300 ச.அடி கொண்டதாகும்.

"இருக்கின்ற கட்டடமே இட வசதி போதாது என்ற நிலையில் அதன் அரைவாசிப் பரப்பளவு கொண்ட புதிய கட்டடத்தில் எவ்வாறு இயக்கப் போகிறோம் என்பது புரியவில்லை" என்று தெரிவிக்கும் அஞ்சல் உத்தியோகத்தர் ஒருவர் "குளிரூட்டப்படுவதாலோ கொம்பியூட்டர்கள் இணைக்கப்படுவதாலோ நவீன மயப்படுத்தல் என்ற பதம் நிறைவு பெறாது. கால வளர்ச்சிக்கேற்ப கட்டடங்களும் அமைய வேண்டும்" என்று கூறினார்.

திருக்கோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு.நல்லதம்பி இதனால் ஏற்படக்கூடிய சிக்கல்களை விளக்கி மேலதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

# தமிழ்-முஸ்லிம் மாணவர்களுக்கான

## பாட நூல்கள் வழங்கப்படவில்லை!

வடக்கு-கிழக்கிலும் ஏனைய தமிழ் பிரதேசங்களிலும் தமிழ் பேசும் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய தமிழ் மொழிப் பாடப் புத்தகங்கள் இன்னமும் விநியோகிக்கப்படவில்லை.

2000மாம் ஆண்டின் பாடசாலை முதல் தவணை ஆரம்பித்து மூன்று வாரங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்னமும் தமிழ்-முஸ்லிம் மாணவர்கள் வெறுங்கையுடனேயே பாடசாலைக்குச்சென்று வருகிறார்கள்.

இதேவேளை சிங்கள மொழிப் பாடசாலைகளில் சிங்கள மாணவர்களுக்குரிய பாடப்புத்தக விநியோகம் ஏற்கெனவே உரிய வேளைக்கு வழங்கப்பட்டுவிட்டன.

இவ்வேளையில் தமிழ்-முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய இலவசப் பாடப் புத்தகங்களில் பெரும்பாலானவை இன்னமும் அச்சுப் பதிப்புக்குக் கூடச் செல்லவில்லை என்பது தெரிய வந்துள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கமும், தமிழ் முஸ்லிம் கல்விமான்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது ஒரு புறமிருக்க, சென்ற ஆண்டு வழங்கப்பட்ட தமிழ் மொழிப் பாடப் புத்தகங்களில் தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டிருந்ததோடு, ஒரு புத்தகத்தில் மாத்திரம் சுமார் 350 இற்கு மேற்பட்ட இலக்கணப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் இடம் பெற்றிருந்தமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

- ★வாதத்தால் வரும் வலிகள்
- ★உணர்ச்சியற்ற பாகங்கள்
- ★பிரயாணக்களைப்பு
- ★தலைப்பாரம்
- ★தலைச்சுற்று
- ★ஜலதோஷம்
- ★வயிற்றுவலி
- ★தலைவலி
- ★காய்ச்சல்
- ★பல்வலி
- ★காதுவலி
- ★மூக்கடைப்பு
- ★பூச்சிக்கடிகள்
- ★தசை வலிகள்
- ★சுளுக்கு ★இருமல்
- ★மதுவால் ஏற்படும் பிரச்சினை



கோடாலித்தைலம்

Rs. 20.00 Only (3m.l)

**ஆகியவற்றிக்கு உடனடி நிவாரணி**

ஏக விநியோகிஸ்தர்

**SINGHA HOLDINGS (PVT) LTD.**

14, Ground Floor-Welikada Plaza-Rajagiriya.
Tel: 888214 Fax: 682984

---

புத்தாயிரமாம் ஆண்டில்

## Bright Book Centre (Pvt) Ltd

கல்விப் பணிகளில் இணைந்து உங்கள் தகைமைகளையும் வேலையையும்பெற்றுக்கொள்ள வாழ்த்துகிறது

**Bright - இன்**

தபால் மூலக் கல்வித்திட்டம்

- * 90 Days Spoken English
- * Spoken Sinhala
- * Spoken Tamil
- * Business English
- *Method of Computerised Book Keeping & Accountancy (MCBA)
- * Nursery Teacher Training Coures (NTTC)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, First Floor, C.C.S.M. Complex
Colombo - 11. T.P. 434770

---

# விளம்பரப் பகுதி

சுவிஸ் லவுசான் மாநகரில் உங்கள் கனவுகள் நனவாகிவிட

**என்.ரி.றேட் விண்ட்-N.T.TRADE WIND**

(Jewellery & Garments)

காலத்துக்கேற்ற வகையில் நவீன வண்ணங்களினாலான அசல் 22 கரட் தங்க நகைகளா? மனங்கவரத்தக்க புத்தம் புதிய வடிவங்களில் சிறுவர் சிறுமியர், பெண்கள், ஆண்களுக்கான ஆடைகளா? ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

ch.Des Rosiers -3
1004-Lausanne
Switzerland.
Tel: 021-6462025 - 078-6231639

---


சுவிற்ஸர்லாந்தில் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மற்றும் அனைத்து சஞ்சிகைகள், ஒரிஜினல் வீடியோ கொப்பிகள் வாடகைக்கும்–விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்–

**Tarmu Trading**

Aarauer Strasse-76
4600-Olten- Swiss.
T.P.& Fax : 062-2971070 Natel :- 079-2771573

---

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**சிவகுமார் பிரபு (ஜேர்மனி) 12.01.2000**


சிவகுமார்-தனரஞ்சிதம் தம்பதியினரின் செல்வப் புதல்வன் பிரபு தனது முதலாவது பிறந்த தினத்தை மிலேனியம் வருட ஜனவரி மாதம் பன்னிரண்டாம் திகதி ஜேர்மனி முன்செனில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா,அம்மா, ஜேர்மனி பெரியமாமா, லண்டன் நந்தன் சித்தப்பா,அத்தை மாமா,குமரன் மாமா, யாழ்ப்பாணம் அப்பப்பா அப்பம்மா, கொழும்பு தாத்தா, அம்மம்மா, சிவா மாமா, அண்ணன்மார், வசிகரன், பிரதீபன், மல்லாவி பெரியப்பா, பெரியம்மா, கௌரி அக்கா, கௌசி அண்ணா, சவுதி தாத்தா, நிர்மலா அம்மம்மா அன்ரா, அக்காமார், கவிதா, சபிதா, மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் நல்லூர் முருகன் அருள் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென வாழத்துகிறார்கள்.

தகவல் : க.தனபாலசிங்கம் - தாத்தா கொழும்பு.
அப்பா : சிவகுமார் - ஜேர்மனி 089-6790-8428

---

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



**தனுஷா 22.01.2000**

நீர்வேலி-கந்தர்மடத்தை பிறப்பிடமாகக் கொண்ட சந்திர சீலன்-கவிதா தம்பதியினரின் செல்வப்புதல்வி தனுஷா முதலாவது (1வது) பிறந்ததினத்தை 22.01.2000 சனிக்கிழமை அன்று இலக்கம் 0510 Norway யில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார்.

இவரை அன்பு கொண்ட அம்மா, அப்பா ⁖பிரான்சில் இருக்கும் அம்மம்மா, அம்மப்பா, சித்தி(சூட்டி) இலங்கை, இந்தியா மாமாமார், மாமிமார், மச்சான், மச்சான்மார்(நோர்வே) மச்சான் ஈசன், (சுவிஸ்) தினேஸ், ஆசை அத்தை, மாமா, வாணிமச்சாள், சஞ்ஜீவன் மச்சான், (பாரிஸ்) சித்திமார், மாமாமார், மாமிமார், மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள், அனைவரும் தனுஷாவை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல் : தந்தை சந்திரசீலன்

---

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் ஜனவரி 20,27 வரை சந்திக்கலாம்**

**Dr. P.Arumugam S.A.M.P. REG.9492**
**SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.**
T.P:- 338163-336165, 338166, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனையில் பெப்ரவரி 05, 06ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி–கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் பெப்ரவரி 12,13ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn, 2ம் குறுக்குத் தெரு, ஞானவைரவர் கோயில் ஒழுங்கை, T.P.024-22074, 21405,21406

கடிதத்தொடர்பு:- **Resident T.P. 065-24019**
**Dr. P.Arumugam S.A.M.P.**
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.

---

## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை
**NTSF-CHARITY REG. NO.HA04BT219**

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல்,கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருததுவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ⁖பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டககளப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

---

## 1 வது பிறந்த தின வாழ்த்து



**தமிழ்ச்செல்வன் ஜெரூஜா (16.01.2000)**


ஜேர்மனியில் வசிக்கும் திரு/திருமதி தமிழ்ச்செல்வன் குலவதனி தம்பதியினரின் செல்வப்புதல்வி ஜெரூஜா தனது முதலாவது பிறந்த தினத்தை கொழும்பிலுள்ள அவரது அம்மப்பாவின் இல்லத்தில் 16.01.2000 அன்று தனது பெற்றோருடன் வெகுவிமரிசையாக கொண்டாடினார்.

ஜெரூக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா மற்றும் மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் அம்மன் அருளால் பற்பலகலைகளும் பெற்று பல்லாண்டு காலங்கள் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : க.தமிழ்ச்செல்வன்

---

## 1 வது பிறந்த நாள் வாழ்த்து



**அன்ரனி ஜோர்ச் (GiGi) 22.01.2000**

குரு நகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.திருமதி. யான்சன்-ஜீன் தம்பதியினரின் செல்வப் புதல்வன் அன்ரனி ஜோர்ச் (GiGi) பலர்மோ இத்தாலியை பிறப்பிடமாக கொண்டவர். தனது முதலாவது பிறந்த தினத்தை 22.01.2000 ஆண்டில் யாழ்ப்பாணத்தில் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, கனடாவில் இருக்கும் அப்பம்மாக்கள்,அப்பப்பாமார்கள்,பெரியமாமா, மாமி, மச்சான்மார்கள், மச்சாள், கனடா சித்தி, அண்ணன் இத்தாலி, பெரியப்பா, சித்தப்பா குடும்பத்தினரும் பெரியமாமா,சின்னமாமா ஏனைய உறவினர்களும் ஜேர்மன் சித்தப்பாவும் யாழ்ப்பாண சித்தப்பா குடும்பத்தினர்கள்,சித்தி, மாமாமார்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் புனித அந்தோனியார் ஆசியுடன் இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்: X.V. யான்சன் (இத்தாலி)

---

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

**SHAKTHY SARAVANA,**
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்–காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை

---



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ⁖பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தலை நகரில் முளைவிடும் அபாயம்

## அற்புதன்... குமார்.... அடுத்தது?

குமார் பொன்னம்பலத்தின் படுகொலை இலங்கை அரசியற் சூழலில் ஒரு பேரதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. துணிச்சலான அரசியற் கருத்துக்களை வெளியிட்டு சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகப் பிரபல்யம் பெற்று வந்த ஒருவர் மீதான படுகொலை என்பது மட்டுமல்ல இந்த அதிர்ச்சியின் காரணம்.

அல்லது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதாகி அடைத்து வைக்கப்பட்டிருந்த பல தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக வாதாடிய, அரச படைகளால் நடத்தப்பட்ட படுகொலைகள் குறித்த விசாரணைக் கமிஷன்களில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வாதாட முன்வந்த, செம்மணிப் புதைகுழி விவகாரத்தில்கூட காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினரின் அழைப்பை ஏற்று யாழ் நகர் செல்ல முயன்ற ஒரு சேவையாளரின் செயற்பாடு நிறுத்தப்பட்டுவிட்டதென்பதுமல்ல இவ் அதிர்ச்சியின் காரணம்.

இக் கொலையின் பின்னால் பயங்கரமான ஆபத்தொன்று இனங்காணப்பட்டிருப்பதே இவ் அதிர்ச்சியின் பிரதான காரணம்.

அதாவது மரணம் அல்ல. மரணத்தின் பின்னாலுள்ள மர்மமே!

குமாரின் மரணம் தமிழ்ச் சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பெனப் புலிகள்கூட அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட குமார் பொன்னம்பலத்துக்கு 'மா மனிதன்' என்ற பட்டத்தை புலிகளின் தலைவர் பிரபாகரனே சூட்டியுள்ளார்.

இவ்வாறான ஒரு பட்டத்தை அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்துள் மறைந்த ஒருவருக்குக்கூட வழங்கியிருக்கவில்லையென்பது, குமார் பொன்னம்பலத்தின் செயற்பாட்டையிட்டு அவர் கொண்டிருந்த மதிப்பை எடுத்துக் காட்டுகிறது.

அத்தோடு, தமது இயக்கத்தைச் சேராத மாற்றுக் கட்சியைச் சார்ந்த ஒரு தலைவருக்கு பிரபாகரன் இவ்வாறு பட்டமளித்து கௌரவித்ததும் இதுவே முதற் தடவை.

தந்தை செல்வாவுக்குக்கூட இத்தகைய 'மா மனிதன்' என்ற அந்தஸ்து வழங்கப்படவில்லை.

தந்தை செல்வா அகிம்சைப் போராட்டத்தை ஏற்றிருந்தவர். ஆனால் குமார் பொன்னம்பலம் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தவர்.

'மாமனிதன்' (Grate Lives) என்ற பதம் காந்தி, லெனின், மாட்டின் லூதர்கிங், ஆபிரஹாம் லிங்கன் ஆகியோர் வரிசையில் குமார் பொன்னம்பலத்தையும் உயர்த்தியுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் அரசியலிலும் போராட்டத்திலும் அவர் எத்தகையதொரு பாத்திரத்தை வகித்தார் என்பது அவரது மரணத்தின்பின்தான் புலப்படுகிறது.

இருந்தபோதிலும், இந்த மரணம் அவருக்கு இயற்கையாய் ஏற்படவில்லை.

இம் மரணத்தைவிட அது ஏற்பட்ட விதம் தான் இப்போது அதிக அக்கறைக்குரிய விடயமாகவுள்ளது. சொல்லப்போனால் அதிக ஆபத்தான நிலைமையை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

குமார் பொன்னம்பலம் யாரால் கொல்லப்பட்டாரென்பது குறித்து ஆய்ந்து நோக்கும் போதே இந்த ஆபத்தின் அடையாளம் புலப்படுகிறது.

அவர் எப்படிக் கொல்லப்பட்டார் என்பது இன்னும் பூரணமாக அறியப்படவில்லை.

ஏன் கொல்லப்பட்டார் என்பதற்கான காரணம் இன்னும் தெரியாவிட்டாலும் அனுமானிக்கக்கூடிய காரணங்கள் உண்டு. அவையும் உருவாகிவரும் ஆபத்தையே சுட்டிக்காட்டுகின்றன.

குமார் பொன்னம்பலத்தின் கொலையை தனித்து ஆராய்வது விடைதராது. அவருக்கு சிறிது காலத்தின் முன்னர் யாரும் எதிர்பாராத இன்னொரு கொலை நடந்திருந்தது. அது தான் தினமுரசு ஆசிரியர் அற்புதராஜாவின் கொலை.

அற்புதனின் கொலை நடந்தபோது என்ன நடந்திருக்கிறது என்பதை யாரும் உடனடியாக அனுமானிக்க முடியவில்லை. அரசாங்கத்துக்கு விரோதமாகச் செயற்பட்ட ஒருவர் அண்மைக் காலங்களில் கொலையுண்டது என்பது அதுவே முதற் தடவையாக இருந்தது.

அற்புதனின் எழுத்துக்கள் விடுதலைப் புலிகளை மெச்சும் வகையிலேயே அமைந்திருந்தன. அரசாங்கத்தையும், ஏனைய தமிழ்க் கட்சிகளையும் சாடி வந்தன. அதனால் புலிகள் அதனைச் செய்திருக்க நியாயமில்லையென்றே பலராலும் நம்பப்பட்டது. எனினும் மக்கள் குரல் வானொலி நிகழ்ச்சி போன்ற இவரது கடந்த காலச் செயற்பாடுகள் சில புலிகளுக்கு எதிராய் அமைந்திருந்தன என்பதால் அவர்களும் செய்திருக்கக்கூடும் என்ற கருத்துக்கும் ஒரு சிறிய இடம் இருந்தது.

ஆனால் இவற்றுக்கு அப்பால் அரசாங்கம் பற்றி ஒரு சந்தேகம் இங்கே மெதுவாக முளைவிட்டது.

அற்புதனின் எழுத்துக்கள் அரசாங்கத்தை தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்து அம்பலப்படுத்திக் கொண்டு வந்தன. அதற்கு மத்தியில் ஜனாதிபதித் தேர்தலை முகம் கொடுக்க வேண்டிய நிலையிலிருந்த அரசாங்கத்துக்கு வெற்றி வாய்ப்புக்கு தமிழ் மக்களின் ஆதரவை வென்றெடுக்க வேண்டிய தேவை நிலவியது. அதற்கான ஒரு பிரதான தடைக் கல்லாக விளங்கக்கூடிய அற்புதன் அகற்றப்பட வேண்டுமென அரசாங்கத்தின் தரப்பில் சிந்திக்கப்பட்டிருக்கலாமா என்ற சந்தேகமொன்றும் நிலவியது.

ஆனால் இந்த அரசாங்கம் பதவியேற்ற பின்னால் அரசாங்கத்துக்கு விரோதமாகக் கருத்துத் தெரிவிக்கும் தமிழர்கள் எவருக்கும் இப்படியான ஒரு சம்பவம் அதுவரை நிகழ்ந்ததில்லை. எனவே அரசாங்கம் இவ்வாறு நடந்து கொள்ளாதெனவே பலரும் நம்பியிருந்தனர்.

அந்த நம்பிக்கையால்தான் மற்றும் பல தமிழ்ப் பத்திரிகைகளில் அரசாங்கத்துக்கு எதிரான கடினமான விமர்சனங்களைத் துணிந்து எழுத முன்வந்திருந்தனர். இப்படியான விமர்சனங்களை முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் எவரும் எழுத முன்வரவில்லை.

அதனால், திடீரென இப்படி ஒரு பத்திரிகையாளர் கொலைசெய்யப்பட்டவுடன் அதை அரசாங்கம் செய்திருக்குமென நம்புவது கடினமாக இருந்தது. அது ஒரு உள்ளியக்கப் படுகொலையாக இருக்கக் கூடுமென்று இன்னொரு அபிப்பிராயமும் இருந்தது.

அதனால் அற்புதனின் கொலை தொடர்பாக எதையும் அனுமானிக்க முடியாத நிலையே இருந்தது. அதன் மர்மம் துலங்குவதற்கு வாய்ப்பேதும் இல்லாததால் அக் கதை பெட்டிக்குள் போட்டு மூடப்பட்ட ஒரு விடயமாகிப் போனது.

எனினும், அது இத்தகைய நிகழ்வுகளின் புதியதோர் ஆரம்பமாக, ஓர் அடையாளக் கல்லை மட்டும் பதித்து வைத்துவிட்டு ஓய்ந்தது.

ஆனால், இப்போது இப்படியான மற்றோர் கொலையாக குமாரின் படுகொலை நிகழ்ந்தவுடன் அற்புதனின் கொலை அடையாளமிட்ட கல்லுக்கும் இதற்குமிடையே உடனடியாக ஒரு தொடுகோடு விழுந்தது.



இரண்டையும் சம்பந்தப் படுத்திப் பார்க்காது விடுவதென்பது எந்தவொரு அவதானிக்கும் முடியாத காரியமாகிப் போகுமளவு அத் தொடர்பு பளிச்செனத் துலங்கியது.

அரசாங்கத்துக்கு விரோதமான செயற்பாட்டாளர்களை அழித்தொழிக்கும் செயற்பாடு எங்கோ ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணமே சடுதியாக இச் செயலையடுத்து அவதானிகள் மத்தியில் பொறி தட்டிய விடயம்.

இதுவரை இவ்வாறு தனி நபர் படுகொலைகள் ஒரு பக்கமாகவே நடந்து வந்தன. அவை விடுதலைப் புலிகளால் தமது போராட்டத்துக்குத் துரோகம் செய்பவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதனால் புலிகளின் ஆதரவாளர்களுக்கும், அரசாங்கத்தை எதிர்த்து எழுதியும் கருத்துக் கூறியும் வருபவர்களுக்கும் உயிராபத்தென்பது உணரப்படக்கூடியதாக இருக்கவில்லை.

ஆனால் இப்போது 'இன்னொரு துப்பாக்கியும் சூடும்' என்ற அச்சம் எழுப்பப்பட்டுள்ளது. இது மிக மோசமான விளைவுகளை அடுத்தடுத்த காலங்களில் ஏற்படுத்தப்போகின்றது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குமாரின் கொலைக்கும் அற்புதனின் கொலைக்கும் இருந்த ஒற்றுமை இருவரும் புலிகளுக்கு ஆதரவாகவும், அரசாங்கத்துக்கு எதிராகவும் முனைப்புடன் செயற்பட்ட ஆற்றலுள்ள மனிதர்கள் என்பதுதான்.

ஆனால் குமார் பொன்னம்பலத்தின் கொலையில், அற்புதனின் கொலையைவிட வேறு சில விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

அற்புதனுக்கு கொலையாளி யாரெனத் தெரியாதிருந்தது. ஆனால் குமாருக்கு கொலையாளியைத் தெரிந்திருக்கவும் கூடுமென்ற சந்தேகம் நிலவுகிறது.

குமார், தன் காரை நிறுத்தியிருந்ததும், தனது கார்க் கண்ணாடியை பாதி இறக்கியிருந்ததும், அவர் தன்னை வழி மறித்த கொலையாளியுடன், கொலையாளியெனத் தெரியாமலே உரையாடியிருக்கிறார் என்று ஊகிக்க வைக்கிறது.

கொலை நடந்த சம்பவத்தை எடுத்துப் பார்த்தால், குமார் காலையில் தன்னைத் தேடி வசந்த என்பவர் வருவாரெனக் காவலாளிக்குத் தெரிவித்திருக்கிறார். அப்படி வந்த வசந்தவுடன் சுமார் அரை மணி நேரம் கதைத்திருக்கிறார். பின்னர் அவரையும் கூட்டிக் கொண்டு காரில் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். வெள்ளவத்தையில் இராமகிருஷ்ணா மிஷனருகில் இருந்த தனது முன்னைய பிறைட்டன் இன்ஸ்டிடியூட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது இடை மறித்துச் சுடப்பட்டிருக்கிறார். அவருடன் பயணித்த வசந்த அவருடன் பிரைட்டன் இன்ஸ்டிடியூட்டுக்குச் செல்லவில்லை. அவர் இடையில் இறங்கியிருக்கலாமெனவும், அவரே மறுபடி குமாரை இடைமறித்தாரா எனவும் சந்தேகிக்கப்படுகிறது. ஆனால் இக் கொலைபற்றிய சந்தேகங்களைத் தீர்க்க தேவைப்படும் அந்த ஆள் 'வசந்த' இதுவரை அகப்படவில்லை.

அவர் சிங்களவரா அல்லது 'வசந்தன்' என்னும் தமிழரா எனவும் சந்தேகங்கள் கிளம்பியுள்ளன. அவர் சிங்களத்திலேயே தொலைபேசியில் பேசியுள்ளதாக வீட்டார் கூறியுள்ளனர்.

இதில் குமார் யாரையும் நம்பி ஏமாந்தாரா என்பதே அதிகளவில் சந்தேகிக்கப்படுவதாக உள்ளது. அவ்வாறு குமாரை நம்பவைத்தது யார் என்பதே மர்மம். குமார் ஒரு சட்டத்தரணியாதலால் அவரது தொழிலைப் பயன்படுத்தி பலவிதமானவர்களும் அவரை அணுக வாய்ப்பு இருந்தது.

எனவே குமார் ஏன் அந் நபரை தன்னருகே காரில் ஏற்றிச் சென்றார் என்ற கேள்விக்கு துலக்கமான பதிலைக் கண்டுகொள்ள முடியாதுள்ளது.

இந்தச் சம்பவக் கோவையை முன்னிறுத்தி, குமாரைப் புலிகள் கொன்றிருக்கக்கூடும் என்ற ஓர் அனுமானத்தையும் சிலர் தெரிவிக்கின்றனர். அதாவது குமார் தனது காரின் முன் ஸீட்டில் ஏற்றிக்கொண்டு கூட்டிச் செல்லக்கூடிய ஒருவர் புலிகளைச் சேர்ந்த ஒருவராகத்தான் இருப்பார் என இவர்கள் கூறுகின்றனர். அவ்வாறு குமாரைக் கொல்வதற்கு அவர்களுக்கு என்ன தேவை உள்ளது என்று கேட்டால், குமார், தம்மை மீறிச் செயற்படுகிறார் என்ற காரணத்தால் அவர்கள் செய்திருக்கலாமெனவும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட முனைந்தது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் நோக்குடன் பட்டியல் தயாரித்தது என்பன அதற்கான காரணங்களாய் இருந்திருக்கலாமெனவும் கூறுகிறார்கள்.

ஆயினும் இது புலிகளையும் இக் கொலையோடு சம்பந்தப்படுத்தத் தேடும் வலிந்த காரணங்களாகவே புலப்படுகின்றன. ஏனெனில் மிகச் சிறிய காரணங்களுக்காக புலிகள் இத்தகைய கொலைகளில் ஈடுபடப்போவதில்லை.

**-நரன்-**

புலிகளின் கொள்கைகளைப் பகிரங்கமாக ஆதரிக்கும் அவர்களின் வெளிநாட்டு மாநாடுகளில் கலந்துகொள்ளும் குமார் பொன்னம்பலம், இவர்கள் அனுமானிப்பதைப் போல் சற்று தன்னிச்சையாகச் செயற்பட முனைந்தால்கூட, ஒரே சொல்லில் அவரைத் திரும்பி வரச் செய்யக்கூடிய நிலைமை புலிகளுக்கு இருந்தது. அதற்கு இவர்கள் குறிப்பிடும் பொது வேட்பாளர் முயற்சியை அவர் சடுதியாகக் கைவிட்டுவிட்டு, தான் இப்பொது வேட்பாளர் நிறுத்துவதை எதிர்ப்பதாக அறிக்கை விட்டதே சிறந்த உதாரணம்.

இவ்வாறு அவரை சுலபமாகத் தம் வழிக்குக் கொண்டுவரக்கூடிய வல்லமை புலிகளிடம் இருக்க அவர்கள், இப்படியான ஒரு கொலையைச் செய்ய வேண்டிய அவசியமேதும் இல்லை. அதேவேளை தமக்கு பலத்த ஆதரவாளராகவும், அரசாங்கத்தைப் பகிரங்கமாகவே எதிர்த்து நின்றும் செயற்படும் ஒருவரை இச் சந்தர்ப்பத்தில் அவர்கள் இழக்க விரும்பப் போவதில்லை.

எனவே அரிதான அச் சாத்தியக்கூற்றை விடுத்து அபாயம் பொதிந்திருக்கும் சில அக்கறைக்குரிய விடயங்களில் கவனம் செலுத்துவது உசிதமானது.

அற்புதன்-குமார்...? என்ற வரிசைத் தொடர் ஏற்பட்டு வருகிறதா என்பதையிட்டு நாம் விழிப்பாக இருக்கவேண்டும். இப்போக்கில் நடக்கக்கூடிய அடுத்த கொலை இதை எமக்கு உறுதிப்படுத்துவதாய் அமையலாம். ஆனால் அற்புதன் கொலையில் முளைவிட்ட சந்தேகமொன்று குமாரின் கொலையில் வடிவம் பெற்றுள்ளதை உணர முடிகிறது.

இன்னொரு புறத்திலிருந்தும் ஒரு கண் எம்மை அவதானித்தபடி இருக்கிறது என்ற உணர்வை அது இப்போது ஏற்படுத்தியுள்ளது.

அதாவது அரசாங்கத்தின் ஏதாவது ஒரு இரகசிய அமைப்பு செயற்பாட்டில் இறங்கியுள்ளதா என்ற வலுவான சந்தேகம் இங்கே தலைதூக்கியுள்ளது.

இத்தகைய செயற்பாடு எம்மால் எதிர்பார்க்கப்படாத ஒன்றாக இருந்தாலும் நடைபெறக்கூடியதுதான்.

பல்வேறு நாடுகளில் அரசு தனது இரகசிய அமைப்பொன்றை இவ்வாறு செயற்படுத்துவதுண்டு. அமெரிக்காவின் சி.ஐ.ஏ., ரஷ்யாவின் கே.ஜி.பி, இஸ்ரேலின் மொசாட் போன்றவை எவ்வாறு செயற்பட்டன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பல்வேறு முக்கிய அரசியல்வாதிகளையும், பிரமுகர்களையும் அவை இரகசியமாகக் கொன்றெழித்த விடயங்கள் எமக்குத் தெரியும். ஆனால் அவையொன்றும் நிரூபிக்கப்பட முடியாத சம்பவங்களாக, வெறுமனே அனுமானிக்கப் படக்கூடிய விடயங்களாக, மட்டுமே முடிந்து போயின. இத்தகைய இரகசிய ஸ்தாபனங்கள் ஜனநாயக நாடுகளுக்கும்கூட அவசியப்படுகின்றன.

இந்திய உளவு ஸ்தாபனமான 'றோ' எமக்கு மிகப் பரீட்சயமானது. அது எம் போராளி அமைப்புகளுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியது. எமக்கு நன்கு தெரிந்த உண்மையென்றாலும், அதை சட்டப்படி நிரூபிக்க முடியாது. அப்படியான விடயங்களே முடியாதிருக்க, இவ்வாறான நிறுவனங்களால் மிக இரகசியமாகச் செய்யப்படும் இத்தகைய கொலைகளை நிரூபிக்க வழியிருக்கமாட்டாது.

இலங்கையிலும் அரசுக்கான உளவு ஸ்தாபனங்கள் உள்ளன. அவை வெறுமனே சந்தேகப் பேர்வழிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும் வேலைகளையே செய்து கொண்டு இருப்பதில்லை. சட்டத்தின் முன் நிறுத்தாமலும் பல்வேறு காரியங்களைச் செய்யலாம், அல்லது செய்விக்கலாம்.

ஜே.வி.பி காலத்தின்போது நிலைமை கட்டுமீறிப் போகவே, ஜே.வி.பி. இலிருந்து விலகியோர், மற்றும் எதிர்க் குழுக்களிலிருந்து ஆட்களைச் சேர்த்து 'பிறா' எனும் பெயரில் இரகசிய அமைப்பொன்றை உருவாக்கி ஜே.வி.பி. அழித்தொழிப்பு வேலைகளில் மிக மும்முரமாக செயலாற்ற வைத்ததை நாம் அறிவோம். அந்தச் செயற்பாடு சட்டத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டதாய் இருந்ததையும் அறிவோம்.

தனக்கென ஒரு நெருக்கடியேற்படும் போது அரசுகள் இத்தகைய வழிமுறைகளில் இயங்குவதுண்டு.

இங்கே தலை நகர் கொழும்பிலும் அரசாங்கம் ஒரு நெருக்கடிக்கு உள்ளாகிச் செல்லுகின்ற நிலைமை தோன்றியுள்ளது.

புலிகளின் ஊடுருவல் அதிகமாகிவிட்டதாக அவர்கள் உணர்கிறார்கள். குண்டுத் தாக்குதல்கள் அடிக்கடி இடம் பெறத் தொடங்கிவிட்டன. தற்கொலைக் குண்டுதாரிகள் உலவுவதான அச்சம் அரசாங்கத்தின் உயர் அமைச்சர்களின் நடமாட்டங்களைக்கூட அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளது. ஜனாதிபதியே ஒரு பெரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இதேவேளை, கொழும்பிலுள்ள தமிழ் மக்களிடையே புலிகளுக்கு ஆதரவான கருத்துக்கள் வளர்வதாக அரசாங்கம் உணர்கிறது. பல தமிழர்கள் பத்திரிகைகளில் புலிகளுக்கு ஆதரவாக எழுத முனைந்துள்ளனர். பலர் கூட்டங்களில் அரசாங்கத்தை எதிர்த்துப் பேசவும் கூடியதாக இருக்கிறது. இந்த நிலைமை வளர்ந்து சென்றால் பின்னர் ஆபத்தானதாகி விடும் என அரசின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் உளவு நிறுவனங்கள் உணருமாயின் அவை விழிப்படைந்து இதை முறியடிக்க தனது செயற்திட்டங்களைத் தீட்டும்.

அவ்வாறான ஒரு திட்டத்தின்படி நிகழும் விடயங்களாகவா இக் கொலைகளும் அமைகின்றன என்பதுதான் நம்மை அச்சுறுத்தும் மிக ஆபத்தான சந்தேகம்.

அப்படியான ஒரு செயற்பாடு ஆரம்பித்திருந்தால் அதன் நோக்கம் புலிகளுக்கு ஆதரவாக எழுதுகின்ற, செயற்படுகின்ற போக்கை நிறுத்துவது என்பதாக இருக்கலாம். அவ்வாறானவர்கள் அடையாளம் கண்டு ஒதுங்கிக் கொள்ள விடுக்கப்படுகின்ற எச்சரிக்கைச் சமிக்ஞையாகவும் இக் கொலைகள் விளங்கலாம். இக் கணிப்புச் சரியானால் அத்தகையோரில் இன்னும் சில தலைகளும் விழலாம்.

இதிலுள்ள ஆபத்தான நிலைமை எவ்வாறிருக்குமெனில், அற்புதன், குமார், போலவே, யார் செய்தார்கள் என்று கண்டுபிடிக்க முடியாதது போல் இக் கொலைகள் அமைந்திருக்கும். பல்வேறு வகையான ஊகங்களுக்கும் இடம் விடுபவையாக, பதிலற்றவையாக இருக்கும்.

ஊகங்கள் அதிகரிப்பது குற்றவாளிகள் தப்புவதற்கு வசதியாகவே இருக்கும்.

புலிகள், ஏனைய தமிழ் இயக்கங்கள் யாவும் உரிமை கோராது பல கொலைகளைச் செய்து வந்தமை நடப்பவற்றை வேறுபிரித்து இனங்காண வாய்பில்லாததாக்கிவிடும். ஓரளவு அனுமானிக்க முடிந்தாலும் அவ் அனுமானத்துக்கு மாறான வெவ்வேறு சாத்தியக் கூறுகளையும் கூறும் வசதியிருக்கும்.

இதேவேளை குமாரின் கொலையோடு மற்றொரு அபாயமும் சற்றே தலைதூக்கியுள்ளது. குமாரின் படுகொலையை 'புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி' என்ற புதியதொரு சிங்கள அமைப்பொன்று வரவேற்றுள்ளது. அது தன்னைப் புலி எதிர்ப்பு இயக்கமெனத் தெரிவிக்கிறது.

இது கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சியா, அல்லது உண்மையாகவே இவ்வாறான ஒரு சிங்கள ஆயுத இயக்கம் தலைதூக்குகிறதா என்பதே அடுத்து எழுகின்ற கேள்வியாக உள்ளது.

இவ்வாறான ஒரு இயக்கம் உருவாக மாட்டாதென்று கூற முடியாது. தலைநகரில் நிகழும் தாக்குதல்களால் தூண்டப்பட்டும், சில இனவாதக் கட்சிகளால் உற்சாகப்படுத்தப் பட்டும் இது தோன்றலாம். இவ்வாறான ஒன்று தோன்றின் அது புலிகளுக்கு எதிரானது என்ற கருத்தில் அதனை அடக்கி ஒடுக்க வேண்டுமென்ற அக்கறை பாதுகாப்புப் படைகளிடம் இருக்கப்போவதில்லை. ஒருவேளை இவற்றின் செயற்பாடு தமக்கு அனுசரணையாக இருப்பதாகவும் அவை உணரலாம். இத்தகைய இயக்கம் செயற்பட ஆரம்பிக்குமாயின் அதன் ஆபத்து யாதெனில் இதற்கு இலக்காகக் கூடியவர்கள் யார் எவரென்று எதிர்பார்க்க முடியாதிருக்கும். அத்தோடு எங்கிருந்து ஆபத்து வருமெனவும் எதிர்பார்க்க முடியாதிருக்கும்.

இத்தகைய நிலைமை இறுதியில் இதனை வளர்த்தவர்களுக்கே எதிராகக் கொண்டு போய் விடுமென்பது உண்மை. ஆனாலும் அதற்கிடையே பல பலியெடுப்புக்கள் நடந்து முடிந்துவிடும்.

அதனால், இப்படியான சிங்கள ஆயுத இயக்கமொன்று உருவெடுக்கிறதா என்ற சந்தேகம் உதாசீனம் செய்யப்படக்கூடிய ஒன்றல்ல.

குமாரின் கொலை தொடர்பான சந்தேகங்களில் விடுபட்டுள்ள மற்றைய பகுதி, ஏனைய தமிழ் இயக்கங்கள் செய்திருக்குமா என்ற விடயம்தான்.

அவ்வாறான கொலை செய்யப்பட வேண்டிய ஒரு முக்கிய எதிரியாக குமார் எந்தத் தமிழ் இயக்கத்துக்கும் இருக்கவில்லை. அத்தோடு இத் தமிழ் இயக்கங்கள் ஒரு கொலையைச் செய்வதானால் அதற்குரிய திராணியோடும் இரகசியத் தன்மையோடும் இன்று இல்லை. இவ்வாறு செய்து அம்பலமாகும் ஒரு கொலை அவ்வியக்கத்தை அதாள பாதாளத்திற்குள் விழுத்திவிடும் என்ற நிலைமையை அவர்கள் உணர்ந்தவர்களாகவே உள்ளனர்.

அரசாங்கத்துக்குத் துணைபோகிறார்கள் என்ற காரணத்தால் யாரும் ஒரு பேச்சுக்காகச் சொல்லக்கூடிய குற்றச்சாட்டாகவே இது இருக்கலாமேயன்றி சாத்தியம் மிகக் குறைவு. அவ்வாறு கண்டபடி குற்றம் சாட்டுவதும் உண்மையான குற்றவாளிகளுக்கு வாய்ப்பான விடயமே.

எனவே குமார் பொன்னம்பலத்தின் படுகொலை பற்றி பல்வேறு ஊகங்கள் கூறக்கூடியதாயிருந்தாலும் இவற்றில் அச்சுறுத்தலாகத் தோன்றிருப்பவை இரண்டு விடயங்கள்.

ஒன்று அரசின் ஒரு இரகசிய நிறுவனம் இத்தகையதொரு வேலைத்திட்டத்தை மேற்கொள்கிறதா? அடுத்தது புலிகளுக்கெதிரான ஒரு சிங்கள ஆயுத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

இவை இரண்டிலும் உண்மையிருக்குமானால் ஆபத்தும் இருக்கின்றது என்று அர்த்தம். ▪

~ஸ்பெஷல் ரிப்போர்ட்~

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

விடுதலைப் போராட்டத்தை அதன் போக்கில் விடுவதா,
அல்லது தன் கையில் எடுத்துக் கொள்வதா என்று
புலிகளுக்கு எழுந்த கேள்வியில்,
அதைத் தன்கையில் எடுத்துக் கொள்வதுதான்
உசிதமானதெனப் புலிகள் தீர்மானித்தன்பின்
அவர்கள் தொடராக எடுத்த நடவடிக்கைகள்
இப் போராட்டத்தின் போக்கையே
ஒரு புதிய வடிவத்துக்கு மாற்றிவிட்டது.

தனக்கு எதிரான,
இந்தியாவின் வளர்ப்புக் காளையாக
டெலோ உருவாக்கப்பட்டு வருவதாக உணர்ந்த புலிகள்
தாம் முந்திக் கொண்டு
அதனைத் தாக்கியழித்தனர்.

அப்போது
டெலோ அமைப்பும்
பெருமளவு ஆயுதமயப்படுத்தப்பட்டிருந்தாலும்
முறையாக அமைப்புமயப்பட்டு இருக்கவில்லை.
சீரான யுத்த அணிக்குரிய
ஒழுங்கமைப்பும் கட்டுப்பாடும்
அதனுள் இருக்கவில்லை.

மறாக,
இயக்கத்துக்குள் இரு பெரும் கோஷ்டித் தன்மைகள்
வலுத்து மோதலாகி,
இறுதியில் அதன் வலிமைமிக்க போர்க் குழுவாக இருந்த
தாஸ் பிரிவினரை
சதியொன்றில் சிக்க வைத்து
அழித்தொழிப்பதில் முடிவடைந்திருந்தது.

அதனால்
உறுப்பினர்க்ளிடையே
தளர்வும் நம்பகமற்ற தன்மையும் மேலோங்கி
சீர்குலைவே ஏற்பட்டிருந்தது.

இந்தப் பாரிய
உள்ளியக்கப் பிரச்சனையைத் தீர்த்து
சீரமைப்பதற்காக
டெலோ அமைப்பின் தலைவர் சிறீ சபாரட்ணம்
யாழ்ப்பாணம் வந்திருந்த தருணம்.
அதுவே டெலோ மீதான தாக்குதலுக்குச்
சரியான தருணமெனத் தீர்மானித்த புலிகள்
மிக உக்கிரமானதொரு தாக்குதலைத் தொடுத்து டெலோ இயக்கத் தலைவர் சிறீ சபாரட்ணத்தோடு சேர்த்து
அதை அழித்தொழித்தனர்.

இவ்வாறன நிகழ்வு
ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.
அதிர்ச்சியானது எதிர்ப்பைவிட மௌனத்துக்குத்தான் வகைசெய்தது.
இந்த அதிர்ச்சிக்குள்ளேயும்
அவதானிக்கக்கூடியதாக விடயமொன்று நிகழ்ந்தது.

கொல்லப்பட்ட டெலோ இளைஞர்களின் உடல்களை
வீதிகளில் எரித்துவிட்டுத் திரும்பிய புலிகளுக்கு
சோடா உடைத்துக்கொடுத்தனர் சில பொதுமக்கள்.

இவர்கள் ஏன் இப்படிச் செய்தார்கள் என்ற கேள்வி
இவ்விடத்தில் எழத்தான் செய்கிறது.
உண்மையில் இவ் இயக்க மோதலில்,
டொலோ இயக்கம் வென்று புலிகள் தோற்றிருந்தாலும்
இம் மக்கள் டெலோவுக்கும் சோடா உடைத்துக் கொடுத்துத்தான் இருப்பார்கள்.
ஆனால் வென்றது புலிகள்
இது சந்தர்ப்ப வசத்தால் நிகழ்ந்தது அல்ல.
சந்தர்ப்பத்தைச்
சரியாகப் பயன்படுத்திக் கொண்டதால் நிகழ்ந்தது.

புலிகளுக்குச் சோடா உடைத்துக் கொடுத்த நிலமை,
யார் பலசாலியோ
அவர்களையே சமூகம் வேண்டி நிற்கின்ற தன்மையை
எடுத்துக்காட்டியது.
இதனைப் புலிகள் மோப்பமறிந்து கொண்டதும், காலம் தாழ்த்தவில்லை.
அடுத்தடுத்து சகல விடுதலை இயக்கங்களையும் தடைசெய்து போராட்டத்தின் தலைமையைத் தம் கையில் எடுத்துக் கொண்டார்கள்.

இதனை அவர்கள் அழகாகத் திட்டமிட்டே செயற்படுத்தினார்கள்.

இதனால் விளையக்கூடிய, பதற்றம், அதிருப்தி, அச்சம், வெறுப்பு என்பதெல்லாவற்றையும் எப்படிச் சமாளிப்பது என்று புரிந்திருந்தார்கள்.

ஒரு குறிப்பிட்ட குறுகிய காலத்துக்குள்ளேயே இந்தத் தலைமையைக் கைப்பற்றும் இயக்க மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டு அடுத்த காலகட்டத்தை நோக்கிய வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மக்களின் கவனம் மாறிவிடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்தது.

அதனால், டெலோவைத் தாக்கிய அதே 86ம் ஆண்டுக்குள்ளேயே ஏனைய புளொட், ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். ஆகிய இயக்கங்களையும் தடைசெய்தனர். இதில் அவ்வவ் வியக்கங்களுக்குள் ஏற்பட்டிருந்த பிளவுகள் புலிகளின் காரியத்தை மிக இலகுவாக்கி வைத்தன. எஞ்சியிருந்த ஈரோஸ் இயக்கம், புலிகளின் தலைமையைத் தானே ஏற்றுக் கொண்டது. இருந்தபோதும், அதை இன்னோர் இயக்கமாக இயங்குவதற்குப் புலிகள் அனுமதிக்கவில்லை. தம்முடன் இணைத்துக் கொண்டார்கள்.

மொத்தத்தில், இவ் ஆயுதப் போராட்டத்தில் தம் ஏக போகத்தை நிலைநாட்டிக் கொண்டார்கள்.

இங்கு எதிர்ப்பே ஏற்படவில்லை என்பதல்ல உண்மை.
எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது.
ஆனால் அது
நீடிக்கவில்லை என்பதே உண்மை.
அது நீடிக்கப் போவதில்லை என்பதே
புலிகளின் கணிப்பும்.
அந்தக் கணிப்புத் தவறாகிப் போகவில்லை.
அதற்கொரு காரணமும் இருந்தது.
இப் போராட்டம்
ஒரு சமூகப் போராட்டமாக மாறியிருக்கவில்லை.
சமூகத்துக்காக, இயக்கங்கள்
'கொண்ட்ராக்ட்' எடுத்துக் கொண்ட போராட்டமாகவே
அப்போது அமைந்திருந்தது.
இவ் வியக்க மோதல்களும்
'கொண்ட்ராக்ட்' காரர்களுக்கு இடையிலான சண்டை போலவே
அவர்களால் பார்க்கப்பட்டது.

இந்தச் சண்டைக்குள்
தலையைக் கொடுத்துக் கொள்ளாது
விலகி நிற்பது நல்லது என்றும்,
சண்டை முடிந்து
யாராவது ஒரு 'கொண்ட்ராக்ட்டர்'
வேலையை முன்னெடுத்துச் சென்றால் சரி என்றும்
அவர்கள் கருதினர்.

அதாவது,
போராட்டத்தை அவசியமானதென உணர்ந்த மக்களுக்கு
அப் போராட்டத்தோடு ஆழ்ந்த ஈடுபாடு இருக்கவில்லையென இந்நிலையை மதிப்பிடலாமா என்று கேட்டால்,
ஆம் என்று சொல்லலாம், ஒரு திருத்தத்தோடு.

அதாவது,
மக்களின் ஈடுபாடு இருக்கவில்லை என்பதைவிட
மக்கள் போராட்டமாக இப் போராட்டம்
எடுத்துச் செல்லப்படவில்லை என்று இதைக் கூறலாம்.

இது,
தவறுகளில் மக்களின் பங்கைவிட
தலைமைகளின் பங்கையே வலியுறுத்துவதாக அமைகிறது.



மற்றொரு முக்கிய விடயமும்
இவ்விடத்தில் செயற்பட்டது.

அதாவது,
சமூகத்துக்கு,
மற்றோர் எதிரி இருந்து கொண்டிருக்கிறான்.
அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ள
சிங்கள அரசு என்பது
பிரதான எதிரியாக
சமூகத்தின் கண்கள் முன்
நின்று கொண்டிருக்கிறது.

இந்நிலையில்
அதற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய,
பலமான தலைமையொன்றை
அது சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.
இயக்க மோதல்களின் சரி பிழைகள் பற்றிய
'நீதிமன்ற விசாரணைகளை' நடத்திக் கொண்டிருக்க சமூகத்திற்கு நேரம் இருக்கவில்லை.

ஒருவேளை,
இயக்க மோதல்கள் நிகழுமுன்னர்
இம் மோதல்கள் தேவையா எனக் கேட்டிருந்தால்
சமூகம் மறுத்திருக்கும்.

ஆனால்
மோதல்களின் பின்னர் இக் கேள்வி எழுகின்றபோது,
அதற்குப் பதிலை இழந்த நிலையிலேயே
சமூகம் இருந்தது.

ஏனெனில்,
இப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல
இப் பிழைகளுக்கும்
சரியென்ற அங்கீகாரம் கொடுக்க வேண்டிய நிலையில்
அது இருந்தது.

ஏனெனில்,
பிழையென்று விட்டு,
இன்னொரு பாதையைத் தேர்ந்தெடுக்க
மக்களுக்கு மாற்று வழி இருக்கவில்லை.
இருக்க விடவில்லை புலிகள்?

இது அவர்களின் வெற்றிக்கு அடிகோலிய
முக்கியமான ஒரு ராஜதந்திரம்.

மாற்று (Alternative) ஒன்று இருக்க விடுவதில்லை.
தானே அந்த மாற்றாகவும் இருப்பது.
இப் பிரதான உத்தியை
அவர்கள் தொடர்ந்து
கடைப்பிடித்தார்கள்.

இயக்க மோதல்களில் மட்டுமல்ல,
அரசுடனான மோதல்களில் மட்டுமல்ல,
பேச்சுவார்த்தைகளிலும் தான்.
தீர்வு பற்றிய எந்த வித முயற்சியிலும் அவர்கள்
தம்மை மீறிய மாற்று ஒன்று இருப்பதற்கு
விட்டுக் கொடுத்தது கிடையாது;
கொடுக்கப்போவதுமில்லை.

சண்டை செய்யின் என்னோடு செய்;
பேசின் என்னோடு பேசு;
ஏசுவதானாலும் என்னையே ஏசு;
அடிப்பதானாலும் எனக்கே அடி;
அடி வாங்குவதானாலும் என்னிடமே வாங்கு.
சமாதானம் செய்வதானாலும் என்னுடனேயே செய்.
தீர்வைத் தருவதானாலும் எனக்கே தா
என்ற நிலையில்தான் அது
அரசைக்கூட வைத்திருக்கிறது.

அதுமட்டுமல்ல,
மக்களுக்கும்
தன்னைவிட்டால் வேறு யாருமில்ல என்ற
ஒரு நிலையை புலிகள் ஏற்படுத்திக் கொண்டனர்.
இதை ஏற்படுத்துவதென்பதற்கு
மிகுந்த மனவைராக்கியம் இருக்க வேண்டும்.
ஏற்படக்கூடிய பழிச் சொற்களையெல்லாம் சகித்துக் கொண்டு
காரியம் நிறைவேறும் வரை
மரண அவஸ்த்தையொன்றைத்
தாங்கிக் கொள்ளவும் வேண்டும்.
இதனால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளைச்
சமாளிக்கக் கூடியவர்களாக
இருக்கவும் வேண்டும்.

அதேவேளை,
இதனால்
இப் போராட்டத்திற்கு ஏற்படக்கூடிய பலஹீனங்களை
நிவர்த்தி செய்யக்கூடிய பொறுப்பையும் வகிக்க வேண்டும்.
அதனால் ஏற்படக் கூடிய இடைவெளிகளைத்
தானே நிரப்பக்கூடிய பங்கினையும் வகிக்கவேண்டும்.

அத்தோடு,
இத்தகைய ஒரு பாரதூரமான செயற்பாட்டிற்குப் பின்னர்
மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு
தன்னால் முடியாது போய் விட்டால்...?
என்ற ஒரு ஆபத்தையும்
அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

ஆனால்,
புலிகளுக்கு அதற்கெல்லாம்
வழி தெரிந்திருந்தது.
உண்மையில்
இது ஒரு
சாம்ராஜ்யத்தை
ஸ்தாபிப்பதற்காக,
சிற்றரசுகளைக் கைப்பற்றும் பாங்கிலேயே
சித்தரிக்கப்பட்டது.

அதனால்
சிற்றரசுகள் ஒழிந்ததும்
சாம்ராஜ்யத்தின் குடையின் கீழ்
மக்கள் பாதுகாப்புத் தேடுவர்
என்ற நியதியைப் புலிகள் உணர்ந்திருந்தனர்.
அதனால்,
அடுத்த ஒரு காலகட்டத்தின் தலைமையைப்
புலிகள் நிலைநிறுத்திக்கொள்ள முடிந்தது.
இது அவர்களின்
வெற்றிக்கு அடித்தளமிட்ட
இரண்டாவது கட்ட நகர்வாகும்.
அதாவது
முதற்கட்டத்தில் (நாம் முன்னர் ஆராய்ந்தது போல்)
புலிகள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ளும்
வழிவகைகளை மேற்கொண்டிருந்தனர்.
இரண்டாவது கட்டத்தில்,
போராட்டத்தின் தலைமையைக் கைப்பற்றும்
நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.
இதனால்,
அவர்கள் தமக்கு மாற்று எதுவும்
இல்லாத நிலையைத் தோற்றுவித்தார்கள்.
'ஒரே தலைமை' என்ற கோஷத்தை
நிலையூன்றினார்கள்.
இப்போது,
85ம் ஆண்டுகளில் நிலவிய
இயக்க ஒற்றுமையை வலியுறுத்தும்
'ஐக்கியம்' என்ற பதாகை
சாய்க்கப்பட்டு
'ஒரே தலைமை' என்ற பதாகை நிலைநிறுத்தப்பட்டது.
இப்போது
மக்கள் மத்தியிலும்
இக்கருத்து வலியுறுத்தப்பட்டு,
காலப் போக்கில் வலிமை பெறத் தொடங்கியது.

வரலாறு
விருப்பு வெறுப்புகளால் இட்டுச் செல்லப்படுவதில்லை.
யதார்த்தங்களால்
இட்டுச் செல்லப்படுகிறது.
இனமுரண்பாடு கூர்மையடைந்து சென்ற யதார்த்தமும்
ஆயுதப் போராட்டத்தின் தலைமையைப்
புலிகள் ஈட்டிக் கொண்ட யதார்த்தமும்
மக்கள் மத்தியில்
அவர்களுக்கான
அங்கீகாரத்தைப்
பெற்றுக் கொடுத்தது.

வாலி வதைபற்றி
பலர் வருத்தப்படலாம்;
ஆனால் இராமாயணம்
இராமரின் பின்னால்தானே
எழுதிச் செல்லப்பட்டது?

ஏகலைவனின் கட்டைவிரல்
பறிபோனதையிட்டு
அதிகம் கலைப்பட
எவருக்கும் நேரமிருக்கவில்லை.
ஏனெனில்
குருஷேஷ்திர யுத்தத்தின் வெற்றிகாக
மகாபாரதத்துக்கு
அர்ச்சுனன்தான் தேவைப்பட்டான்.
தக்கன பிழைக்கும் தகாதன அழியும் என்றே
டார்வினின் கூர்ப்பு விதியும் கூறுகிறது.
அழிந்தவற்றைப் பற்றி உலகம்
அக்கறைப் படுவதில்லை:
இருப்பவற்றையிட்டே
கவனம் செலுத்துகிறது.
'கன்னன் மனது கல்மனதே' என
பகவக்கீதை கூறுவதைப் போல,
இவ்வரலாறும் இரக்கமற்றது.
அது
விளைவை மட்டுமே கணக்குப் பார்க்கிறது,
செயலையல்ல.

புலிகள்
இவ் விதிகளைப் புரிந்துகொண்டு
கடும் சித்தத்துடன் நிகழ்த்தி முடித்த
ஒரு முக்கியம் வாய்ந்த செயற்திட்டம் இது.
இதன் வெற்றியே
அவர்களின் முன்னேற்றத்துக்கான
அடுத்த வாசலைத் திறந்துவிட்டது.
இதை
'வெற்றி' யென்று குறிப்பிடுவதைப்
பலர் ஒப்புக் கொள்ள மறுக்கலாம்.
'சூழ்ச்சி', 'சதி' என்ற
எத்தகைய பட்டத்தையும்
அதற்குச் சூட்டிக் கொள்ளலாம்.

ஆனால்
இதன்பின்
புலிகளின் பாத்திரம்
எத்தகைய உச்ச நிலையை அடைந்தது என்பதை
அவர்கள்
விரும்பியோ விரும்பாமலோ
ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.
அத்தகைய உச்சத்தை
அவர்கள் எய்தியிருக்கிறார்கள் என்றால்
அதற்குப் பெயர்
'வெற்றி' அல்லாமல்
வேறென்ன?

இன்னும் சிலர்,
இவ்வாறின்றி,
விடுதலை இயக்கங்களிடையே ஏற்பட்ட
ஐக்கிய முன்னணியைப் பலப்படுத்தி
அதில் அவர்கள்
தமது தலைமைப் பாத்திரத்தை
நிலை நிறுத்தியிருப்பதே
சரியான வழியாக அமைந்திருக்குமென
விமர்சிக்கிறார்கள்.
அத்தகைய ஒரு முன்னேற்றம்
ஒரு கட்டம்வரை
ஏற்பட்டு இருந்ததும் உண்மை.

ஆனால்
புலிகள் அதனை முயற்சித்துப் பார்த்து
சந்தர்ப்பத்தை இழக்க விரும்பவில்லை.
மாற்று இயக்கங்கள் வலிமைபெற
சந்தர்ப்பத்தை வழங்கவும் விரும்பவில்லை.
என்று தனக்கு அச்சுறுத்தலாக
மாற்று இயக்கங்கள் உருவாகவோ,
வெளிநாட்டு சக்திகளால் உருவாக்கப்படவோ
முயற்சி நடப்பதான சந்தேகம் கிளம்பியதோ.
அன்றே
இதில் சந்தர்ப்பத்தை விட
புலிகள் விரும்பவில்லை.

சந்தர்ப்பம் விடாத தன்மை
புலிகளின் முக்கிய ஒரு குணாம்சமாகும்.
இது அவர்களின் வெற்றிகரச் செயற்பாட்டுக்கு
முக்கிய காரணியாக
அமைந்த ஒரு குணாம்சமாகும்.

யாராலும் ஆபத்து வரலாம்,
வராமலும் விடலாம்
என்ற ஒரு நிலை இருந்தால்
அவர்கள்
ஆபத்து வாரமலும் விட வாய்ப்பு உண்டு என்ற பக்கத்தையிட்டு
சந்தர்ப்பம்விட மாட்டார்கள்.
கண்ணில் பட்டது பாம்பானால்
அது விஷப்பாம்பா, வெறும் பாம்பா என்று விட்டுப்பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார்கள்.

பாம்பு அசையுமுன்னரே
அதை அடித்துக்
கொன்றுவிடுவது
அவர்கள் பாணி.

புலிகளின் தாக்குதல் தன்மையும்
ஒருவிதத்தில்
அவ்வாறே இருந்தது.
அவர்கள் தாக்கினால்
தாக்குதல் இலக்கு முற்றுமுழுதாக அழிந்துவிடும் வகையிலேயே தாக்குவர்.
இதனைச் சிலர்
எறும்பை அடிக்கச் சம்மட்டியை உபயோகிக்கிறார்கள்,
என விமர்சிப்பதுண்டு
ஆனால்
சம்மட்டி அடியில்
எறும்பு
தப்பிப் பிழைக்க வாய்ப்பில்லையென்பதைத்தான்
அவர்கள் முக்கிய விடயமாகக் கொண்டார்கள்.

டாங்கிகளைத் தாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ராக்கெட்டுகளை
இவர்கள்
கட்டடங்களைத் தகர்ப்பதற்காக ஏவுவதையிட்டு
ஏளனம் செய்தவர்களுண்டு.

ஆனால்
கட்டடங்கள் தரைமட்டமாவதும்
வெற்றி நிட்சயமாவதுமே
அவர்களது
நோக்கமாக இருந்ததேயன்றி
எதைப் பாவித்து அதைச் செய்யவேண்டுமென்ற
விதிமுறைகளல்ல.

எனவே,
தமது வளர்ச்சிக்கு
ஐக்கிய முன்னணிக்கூடான மாற்றுவழியொன்றைப்
பரீட்சித்துப் பார்த்து
ஒரு சந்தர்ப்பம் எடுத்துக் கொள்ள
புலிகள் தயாராக இருக்கவில்லை.

அப்போது,
தனது பலம் உயர்ந்திருக்கும் நிலையில்
மாற்று இயக்கங்கள் பூரணமாகப் பலப்படுத்தப்பட்டிராத நிலையில்,
அவைகளுக்கான அன்னிய உதவிகள் வீடுவந்து சேரமுன்னர்,

அவர்களுக்குள் உள்ளியக்கப் பிரச்சனைகள் முனைப்படைந்திருந்த வேளையில்,
மக்களிடமிருந்து இயக்கங்கள் விலகியே இருக்கும் சூழ்நிலையில்,
தகுந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி
விடுதலைப் போராட்டத்தின் தலைமையை
அவர்கள்
தம் ஆயுத வலிமையால்
தமக்குக் கீழ் கொண்டு வந்தார்கள்.

அடுத்து அவர்கள்
தமது மூன்றாவது படியில்
கால் பதித்தார்கள்.

(இன்னும் சற்று நீடிக்கும்)

**சத்தியன்**

# இலங்கையில் ஆயுதக் கட்டுப்பாட்டை கொண்டுவருவதில் பிரிட்டன் அக்கறை!

## 50 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட மடங்காக இலங்கை இராணுவம் வளர்ச்சி!!

**அலசுவது -இராஜதந்திரி**

இரண்டாயிரமாவது ஆண்டின் ஆரம்பமே சோதனைகள் நிறைந்ததாக விளங்கியிருந்தது.

புத்தாண்டின் முதல்வாரத்தில் ஏறத்தாழ ஒரு போர்க்களச் சூழலே உருவாக்கப்பட்டு, ஊரடங்குச் சட்டத்துடன் ஆயிரக்கணக்கான துருப்புகள் கொழும்பில் தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இத்தேடுதல் கொழும்பு மாநகருக்குள் ஊடுருவியுள்ளதாகக் கூறப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை இனங்காணும் வகையிலேயே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் கொழும்பில் முன்பொருபோதுமில்லாதவாறு மூலை முடுக்குகள் அனைத்திலும் இலட்சக்கணக்கில் குடியேறி வாழ்ந்து வரும் தமிழ் மக்களை, அண்மைக்காலச் சம்பவங்கள் குறித்து எச்சரிக்கும் விதத்திலேயே அப்பெரும் தேடுதல் நடவடிக்கை அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தம்மீது கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தியிருக்கக் காணப்படுகின்றார்.

இதுவே அவரது இரண்டாவது கட்ட ஆட்சியின் ஆரம்பத்தின் முதலாவது நடவடிக்கையாகவும் இருக்கின்றது.

இலங்கையின் புலனாய்வு நிபுணர்களோடு மட்டும் நின்று விடாது, அமெரிக்காவிலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட நிபுணர்களது உதவியும், ஜனாதிபதி சந்திரிக்காவின் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் பொருட்டுப் பெறப்பட்டிருந்தது.

இலங்கையைப் பொறுத்தவரை உள்நாட்டு யுத்தமும், அதனோடிணைந்த வன்முறைக் கலாசாரமும் தற்போது மிகவும் மோசமடைந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் இலங்கையின் பாதுகாப்புச் சேவையிலும், ஆயுதப் படைகளிலும் அங்கம் வகிப்போரால் தொடர்ந்து கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தத்தை கையாள முடியாதிருப்பதுடன், வன்முறைச் சம்பவங்கள் குறித்த புலன் விசாரணைகளையும் உரிய வகையில் மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதன் காரணமாகவே தற்போது விரிவான புலன் விசாரணைகள், மற்றும் இரசாயனப் பகுப்பாய்வு என்பவை தொடர்பாகவும் வெளிநாடுகளின் தயவையே இலங்கை நாட வேண்டியதாக இருக்கின்றது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தைப் பொறுத்தவரை கடந்த இரு தசாப்த காலமாக வெளிநாட்டு உதவிகளிலேயே இலங்கை பெரிதும் தங்கியிருக்கின்றது.

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் டெனிஸ் பெரேரா என்பவர், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட தற்சமயம் இலங்கையின் இராணுவம் ஐம்பது மடங்குகள் விசாலமடைந்துள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய இராணுவ வளர்ச்சி என்பது சிறிய நாடான இலங்கையைப் பொறுத்தவரை விரலுக்கு மிஞ்சிய வீக்கமாகவே இருக்கின்றது.

பிரிட்டிஷார் இலங்கையை விட்டுச் சென்றபோது- 50 ஆண்டுகளுக்கு முன்னர்- இலங்கை இராணுவத்தின் மொத்த எண்ணிக்கை 2,500 பேரையே கொண்டிருந்தது. ஆனால் தற்போது இலங்கை இராணுவத்தின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் பேரைக் கொண்டதாக இருக்கின்றது.

1949ம் ஆண்டு பாதுகாப்புச் செலவுக்காக வரவு செலவுத்திட்டத்தில் 1.3 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டது. இத் தொகை தேசிய வரவு- செலவுத்திட்டத்தில் 0.24 சதவீதமாக இருந்தது.

ஆனால் தற்போது இராணுவச் செலவுக்காக வரவு- செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படும் தொகை 22.5 பில்லியன் ரூபாவாக இருக்கின்றது. இத் தொகை மொத்தத் தேசிய வரவு செலவுத்திட்டத்தில் 6.63 சதவீதமாக இருக்கின்றது.

இத்தகைய இராணுவ ரீதியான வளர்ச்சி இலங்கையை பொருளாதார ரீதியாக நாளுக்கு நாள் முடமாக்கி வருவதுடன், இடையறாத இரத்தக்களரியையும் தோற்றுவித்தே வருவதாகவும் காணப்படுகின்றது.

பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறிய சமயம் இலங்கை இராணுவத்தின் பாவனையிலிருந்த ஆயுத தளபாடங்களே கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் வரை கூட இலங்கையிடமிருந்து வந்தது.

அத்துடன் இலங்கை இராணுவம்கூட பெரும்பாலும் ஒரு வைபவரீதியான இராணுவமாகவே இருந்து வந்தது. ஆனால் தற்போது இலங்கை இராணுவம் 22 ரெஜிமெண்டுகளைக் கொண்டதாக வளர்ச்சி பெற்றுள்ளது.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு-கிழக்குப் பகுதியில் தோன்றிய தீவிரவாத நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையிலேயே இவ் வளர்ச்சி ஏற்படலாயிற்று.

இருந்தபோதிலும் ஆண்டுதோறும் இராணுவத்தின் வளர்ச்சி பல்கிப்பெருகிக் கொண்டு செல்கின்றதே தவிர, எவ்வகையிலும் இராணுவச் செலவுகளுக்காக ஒதுக்கப்படும் நிதியிலோ, அல்லது ஆட் சேர்ப்பு நடவடிக்கைகளிலோ குறைப்பைக் காண முடியாதுள்ளது.



இலங்கை இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு விடயத்தைப் பொறுத்தவரை பத்துவருடங்களுக்கு முன்பிருந்த நிலை இன்றில்லை.

இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றியவர்கள்கூட யுத்தத்தின் உக்கிரத்தைச் சகித்துக் கொள்ள முடியாதவர்களாக இராணுவத்திலிருந்தும் தப்பிச் செல்வதையே அவதானிக்கமுடிகின்றது.

இதன் காரணமாக மிகவும் சிரமப்பட்ட நிலையில் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த- வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள இளைஞர், யுவதிகளையே வலிந்து படைகளில் சேர்த்துக் கொள்ளும் தன்மை காணப்படுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனை ஓர் அரசியல் பிரச்சனையாகவே இருந்து வந்தது. ஆனால் நியாயமான அரசியல் உரிமைகளை ஜனநாயக ரீதியாகப் பெறுவதற்கு எத்தனித்த தமிழ் மக்களை பேரினவாதிகள் வன்முறைகள்மீது அடக்க முற்பட்டதையடுத்தே தீவிரவாதம் முனைப்படையலாயிற்று. இதனையடுத்து அரசியல் பிரச்சனையாக இருந்து வந்த இனப்பிரச்சனை தற்போது இராணுவ ரீதியான அழுத்தம் சார்ந்ததொன்றாக மாறியிருப்பதையே நோக்க முடிகின்றது.

இலங்கையின் பொருளாதாரம் கைத்தொழில் மூலவளங்களை மையமாகக் கொண்டதல்ல. இதன் காரணமாக இலங்கையின் வருவாய்கூட பெருந்தோட்டச் செய்கை மற்றும் அண்மைக்காலங்களில் உல்லாசப் பயணத்துறை, ஆடைத் தொழில் என்பவற்றையே பெரிதும் தங்கியதாக இருக்கின்றது.

இந்நிலையில் கடந்த 15 வருடகாலத்துக்கும் மேலாக இராணுவச் செலவீனத்தை அதிகரித்து இடையறாத ஒரு யுத்தத்தை நடத்திவரும் இலங்கையின் ஆட்சியாளருக்கு, அசுரத்தனமாக வளர்ச்சி பெற்றுள்ள இராணுவத்தைப் பேணிப் பராமரிப்பதென்பது பெரும்பாடாகவே இருந்து வருகின்றது.

இலங்கையின் வருடாந்த வரவு- செலவுத் திட்டத்தில் ஆண்டு தோறும் 22.5 பில்லியன் ரூபா இராணுவச் செலவுகளுக்காக வீணடிக்கப்படுகின்றதெனும்போது இலங்கை கடனாளியாக இருந்தே இச் செலவை மேற்கொள்கின்றது. இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் பெரும் பகுதி இராணுவத்துக்காகச் செலவிடப்படும் அதேசமயம் இலங்கை பெறுகின்ற வெளிநாட்டுக் கடன்களில் ஒரு பகுதிகூட இராணுவச் செலவுகளுக்கே சென்றுவிடுகின்றது.

அத்துடன் வெளிநாடுகளிலிருந்து கடன் அடிப்படையிலும் இராணுவத்துக்கான ஆயுத தளபாடங்கள் பெறப்பட்டு வருவதையும் அறிய முடிகின்றது.

பிரிட்டனிடமிருந்து மட்டுமல்ல. அமெரிக்கா, ரஷ்யா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், சீனா, செக்கோஸ்லோவாக்கியா, பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்துகூட இராணுவ ஆயுதத் தளபாடங்கள் இலங்கையினால் கடன் அடிப்படையில் பெறப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பெறப்பட்டு ஆயுதங்களையும், நவீன இராணுவ தொழில் நுட்பங்களையும் வைத்திருந்துங்கூட வடக்கு-கிழக்கு யுத்தத்தில் எவ்வகையிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறமுடியாத நிலையிலேயே இலங்கை இராணுவம் இருந்து வருகின்றது.

முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள்-01 தாக்குதல், பின்னர் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட ஓயாத அலைகள்-02. தாக்குதல், இறுதியாக வன்னிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள்-03 தாக்குதல் என்பவற்றின்போது இலங்கை இராணுவம் பெருமளவில் உயிர்ச் சேதங்களை மட்டும் சந்தித்திருக்கவில்லை.

பலகோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான ஆயுத தளபாடங்களைக்கூட- புலிகளது மேற்குறிப்பிடப்பட்ட மூன்று தாக்குதல் நடவடிக்கைகளின் போது-இலங்கை இராணுவம் பறிகொடுத்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஆயுத தளபாடங்களைப் பொறுத்தவரை இராணுவத்துக்கு ஏற்படுகின்ற இழப்புகள் மறுபுறத்தே தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலப்படுத்தியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் இருதரப்புமே அதிநவீன, கனரக ஆயுதங்களை மிகத் தாராளமாகவே கையாண்டு இரத்தப்பிரவாகத்தை நீடித்துச் செல்வதையே காணமுடிகின்றது.

இலங்கையின் இனப் பிரச்சனைத் தீர்வு தொடர்பான அரசியல் நடவடிக்கைகள் உரிய உத்வேகம் பெறாமைக்கும் போரில் குதித்துள்ள தரப்பினர் ஆயுதமோகத்தில் மூழ்கிப் போயுள்ளமையே முக்கிய காரணமாகவும் இருக்கின்றது.

யுத்த களத்தில் மட்டுமல்ல; அதற்கு வெளியேயும்கூட ஆயுதக்கலாசாரம் தலைவிரித்தாடி வருகின்றது.

இதன்காரணமாக கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற வன்முறைகள்கூட நாடுதழுவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன.

ஆயுதப் படைகளிலிருந்து தப்பிச் சென்றோர் எனச் சந்தேகிக்கப்படுவோரால் பாதாள உலகக் கும்பல்கள் என்ற பயங்கரவாத கோஷ்டிகளும் உருவாகி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களை வழங்கி வருகின்றன.

இவ்வாறு கட்டுமீறிய நிலையில் இலங்கையில் இராணுவ நடவடிக்கைகளும், வன்முறைக் கலாசாரமும் இருந்து வருகின்ற தறுவாயிலேயே பிரிட்டன் ஒரு புதிய அறிவித்தலை விடுத்துள்ளது.

இந்த அறிவிப்பில் கடன் அடிப்படையில், இலங்கைக்கு இராணுவ ஆயுத தளபாடங்கள் இனிவரும் காலங்களில் வழங்கப்படமாட்டாது. பிரிட்டனின் இந்த அறிவிப்பு புத்தாயிரமாவது ஆண்டின் ஆரம்பத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றாகவே இருக்கின்றது.

இலங்கையின் இராணுவத்துக்கு துப்பாக்கியை கையாளுவதற்கு முதல் தடவையாகப் பயிற்சி வழங்கிய நாடு பிரிட்டனே என்பது குறிப்படத்தக்கது.

எனவே இலங்கை இராணுவத்தின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியையும் பிரிட்டன் நன்கு அவதானித்து வரவே காணப்படுகின்றது.

கடந்த ஆண்டுகளில் இராணுவ தளபாடங்களை மட்டும் பிரிட்டன் வழங்கவில்லை. இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிகள்கூட பிரிட்டனில் வழங்கப்பட்டு வந்தன.

ஆயினும் இலங்கையின் இராணுவ வளர்ச்சி என்பது இனரீதியான ஓர் உள்நாட்டு யுத்தத்தையே எதிர்கொண்டதாக இருக்கின்றது.

இலங்கை இனப் பிரச்சனையைப் பொறுத்தவரை அரசியல் ரீதியாகவே அப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்பதிலேயே பிரிட்டன் உட்பட உலக நாடுகள் அனைத்துமே ஆர்வங்காட்டி வருகின்றன.

அத்துடன் இலங்கையில் தொடர்ந்து செல்லும் உள்நாட்டு யுத்தம் வீணே உயிரழிவை ஏற்படுத்துவதாக இருக்கின்றதென்பதையும்கூட சர்வதேச சமூகம் அறிந்து வைத்துள்ளது.

இதன் காரணமாகவே யுத்தம் நிறுத்தப்பட்டு அரசியல் ரீதியான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டுமென்பதில் பிரிட்டன் கூடுதல் ஆர்வங்காட்ட முன்வந்துள்ளதை- ஆயுத விநியோகம் குறித்த அதன் புதிய அறிவித்தல் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

இதுவரை காலமும் கடன் அடிப்படையிலேயே ஆயுதக் கொள்வனவை மேற்கொண்டு வந்த இலங்கைக்குப் பிரிட்டனின் புதிய அறிவிப்பு விசனத்தையளிப்பதாக இருக்கலாம். ஆனால் மறுபுறத்தே ஆயுத ரீதியிலான அணுகுமுறைகள் இப்பிரச்சனையைத் தீர்ப்பதில் எதிர்காலத்தில் பயன் தர மாட்டாது என்பதையே பிரிட்டிஷ் அறிவிப்பு உணர்த்துவதாக இருக்கின்றது.

பிரிட்டன் ஆயுத விநியோகம் தொடர்பாக இலங்கைக்கு கடனடிப்படையில் சலுகைகளை வழங்க மறுத்துள்ளதை இலங்கையின் ஆட்சியாளர்கள் மறு பேச்சின்றி ஏற்றுக் கொள்ள வேண்டியதாகவே இருக்கும்.

இலங்கைக்கு மட்டுமல்ல பங்களாதேஷ் மற்றும் வேறு 20 நாடுகளுக்கும் பிரிட்டனின் புதிய அறிவிப்பு ஏற்புடையதாக இருக்குமென்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாடுகள் அனைத்திலும் மித மிஞ்சிய ஆயுதப் பாவிப்புக் காரணமாக பாரியளவிலான பிரச்சனைகள் தோன்றியுள்ளன. எண்ணிலடங்காதவாறு அடிப்படை மனித உரிமை மீறல்களும் இடம் பெற்றுள்ளன.

எனவே பிரிட்டனின் இலங்கை மீதான ஆயுதக் கொள்வனவு குறித்த புதிய கட்டுப்பாடு, ஆயுதக் கலாசாரத்தை இலங்கையில் மேலும் விரிவடையச் செய்வதைத் தடுத்து நிறுத்துவதில் சர்வதேச சமூகம் முன்வைத்த முதலாவது நடவடிக்கையாகவே இருக்கின்றது.

பிரிட்டனைப் போன்று இலங்கைப் பிரச்சனையில் ஆர்வங்கொண்ட ஏனைய நாடுகளும் அழுத்தங்களைக் கொடுக்கும் பட்சத்தில், இராணுவ நடவடிக்கைகள் குறைந்தளவு முக்கியத்துவத்தையும், அரசியல் அணுகுமுறைகள் கூடுதல் உத்வேகத்தையும் பெறும் என்றே கருத முடியும்.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 93

### கடந்தவாரம்

ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களின் உச்சிமாநாடு மொறீஷியசில் நடைபெறவிருந்தது. இதில் பங்கேற்க இடி அமீன் விமானத்திலேறுகிறான். அவன் நாடு திரும்பும்வரை பணயக்கைதிகள் தொடர்பான காலக்கெடு ஒத்திவைக்கப்படுகிறது.

பணயக்கைதிகளில் ஒரு மூதாட்டி, முலாகோ மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார், தொண்டையில் சிறு சத்திரசிகிச்சை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த அம்மையாரை அமைச்சர் சியாம்பா சென்று பார்வையிடுகிறார்.

அமீன் மாநாடு முடிந்து நாடு திரும்புகிறான். இதே வேளை இஸ்ரேலிய அதிரடிப் படையினர், பணயக்கைதிகளை விடுதலை செய்யும் நோக்குடன் எண்டபே விமான நிலையத்தில் வந்து இறங்குகின்றனர்.

இனி...

# இடி அமீன்

உகண்டாவின் அயல் நாடுகளான தான்ஸானியா, கென்யா ஆகியன அமீனின் ஆட்சியையும் அந்நாட்டில் நடைபெற்று வரும் அக்கிரமங்களையும் எப்போதும் எதிர்த்தே வந்துள்ளன. எண்டபே விமான நிலையத்தில் ஏதோ பலத்த மோதல் நடைபெறுகிறது என்பதை மட்டும் அமீன் எப்படியோ அறிந்து கொண்டான்.

தனது படைப்பிரிவிலுள்ள-தனக்கு வேண்டாத சில அதிகாரிகள், கென்யா அல்லது தான்ஸானிய நாடுகளில் ஏதோ ஒன்றுடனோ, இரண்டு நாடுகளுடனேயோ சேர்ந்து, சதிப்புரட்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று அமீன் கருதினான். இஸ்ரேல், தனது நாட்டவர்களை விடுவிக்க அதிரடித் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் என்று அவன் துளியும் எதிர்பார்க்கவில்லை.

இஸ்ரேல் அதிரடிப்படையினர் மிக நுணுக்கமான முறையில் திட்டமிட்டு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். இத்தகைய ஒரு தாக்குதல் நடைபெறும் என்று எண்டபே விமான நிலைய அதிகாரிகளோ அங்கிருந்த படையினரோ, பணயக்கைதிகளோ கூட சற்றும் எதிர்பார்க்கவில்லை. எண்டபே விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் எண்டபேயிலிருந்த அரசுக்குச் சொந்தமான லேக் விக்டோரியா ஹொட்டலில் குடித்து வெறித்துக் கூத்தாடி மகிழ்ந்த வண்ணம் இருந்தனர். அன்று ஞாயிற்றுக் கிழமை. ஒவ்வொரு ஞாயிறும் விடுமுறைநாள் என்பதனால் அனைவருடைய பொழுதும் கேளிக்கைகளில்தான் செலவிடப்படுவதுண்டு.



இரவு 11.00 மணியளவில் இஸ்ரேலிய விமானம் எண்டபே விமான ஒடுபாதையில் வந்திறங்கியது. அவ்வேளையில் எந்தச் சர்வதேச விமானமும் எண்டபே விமானத்தள ஓடுதளத்தில் வந்திறங்குவதற்கோ அங்கிருந்து வெளிக்கிளம்பவோ திட்டம் இருக்கவில்லை என்பதனால், ஒடுபாதை விளக்குகளும் அணைக்கப்பட்டிருந்தன. விமானக் கட்டுப்பாட்டறை ராடர் கருவிகளுக்கும் ஒய்வு கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வறை ஊழியர்களும் தூங்கி வழிந்தனர்.

ஒடுபாதையில் தரை இறங்கிய விமானம், அதிக தூரம் ஒடிச் செல்லாமல் சில மீட்டர் ஒடி நிறுத்தப்பட்டது. இஸ்ரேலிய அதிரடிப்படையினர் விமானத்திலிருந்து வெளியேறி விமான நிலைய அலுவலகம், கட்டுப்பாட்டுக் கூண்டு, பயணிகள் ஒன்று சேருமிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய வளாகத்தை நோக்கி மிக அமைதியாகவும் துரிதமாகவும் நெருங்கினர். ஒரு குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்ததும், ஏற்கனவே திட்டமிட்டபடி, அவர்களுடைய இயந்திரத் துப்பாக்கிகளை இயக்கத் தொடங்கினர்.

எதிர்பாராத திடீர் துப்பாக்கிவேட்டுக்கள் சுற்றுவட்டாரத்தில் பல பிரிவுகளிலும் தூங்கிவழிந்து கொண்டிருந்த உகண்டாவின் படையினர் பலர் சுருண்டு விழுந்தனர், வேறு பலர் திக்குத் திசை தெரியாமல் ஒடி மறைந்தனர். கட்டளையிடும் தரத்திலிருந்த ஒருசில படைஅதிகாரிகளும் போகும் திசை தெரியாமல் பறந்தனர். என்ன நடக்கிறது என்றுதானும் எவருக்கும் தெரியாது.

வேட்டோசை கேட்டு பணயக்கைதிகளும் பதற்றமடைந்து எழுந்து நடுங்கிக் கொண்டிருந்தனர். அவர்களைக் காவல் புரிந்து கொண்டிருந்த பாலஸ்தீன விடுதலை அணியைச் சேர்ந்த கடத்தல்காரர்களும், செய்வதறியாது திகைத்து நின்றனர். சில நொடிகளில் துப்பாக்கி ரவைகள் அவர்களையும் தரையில் சாய்த்தன.

வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் பணயக் கைதிகள் வைக்கப்பட்டிருந்த மண்டபத்துள் வந்த இஸ்ரேலியப் படையைச் சேர்ந்த ஓர் அதிகாரி ஹீப்று மொழியில் பணயக்கைதிகளை உடனடியாக கட்டடத்தை விட்டு வெளியேறி, விமான ஒடு பாதைக்கு வேகமாகச் செல்லுமாறு கட்டளையிட்டார். அவர்களுடன் கொண்டு வந்திருந்த ஒருசில பொருட்களையும் சேர்த்தெடுக்க அவகாசம் தரப்படவில்லை.

அவர்களைக் காவல் காத்துக் கொண்டிருந்த கடத்தல்காரர்களும் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இலக்காகி, ஆங்காங்கே விழுந்து கிடந்தமையினாலும், தங்கள் மொழியில் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டமையினாலும், தங்களை விடுவிக்க இஸ்ரேல் படைகளே வந்து விட்டன என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

விமான நிலையத்திலிருந்து தப்பியோடிய படை அதிகாரிகளுக்கு என்னதான் நடந்தது என்றே தெரியாது. லேக் விக்டோரியா ஹொட்டலில் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்த அதிகாரிகளும் சரமாரியான வேட்டோசை கேட்டு, அங்கிருந்து வெளியேறி தங்கள் வாகனங்களில் ஏறிக்கொண்டு, குறுக்குப் பாதைகளில் சென்று இருளில் மறைந்தனர். வேறு சிலர் தங்கள் வீடுகளுக்கு தொலைபேசியில் அழைப்புக் கொடுத்து, யாராவது விசாரித்தால் 'கடமையின் நிமித்தம் எப்போதோ போனவர் இன்னும் திரும்பவில்லை' என்று கூறிவிடுமாறு சொன்னார்கள்.

எண்டபேயில் ஒன்றரை மணி நேரத்துக்குள்ளாகவே எல்லாம் முடிந்துவிட்டன. உகண்டா படையினர் மற்றும் சில சிவிலியன் ஊழியர்கள் 20 பேர், கடத்தல்காரர்கள் 7 பேர் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர். பயத்தில் தடுமாறி அங்கும் இங்கும் ஒடித்திரிந்த இரு பணயக்கைதிகளும் மரணமடைந்திருந்தனர். அவர்களுடைய சடலங்களையும் தூக்கிக் கொண்டு அவர்கள் அனைவரும் விமானத்திலேறிப்பயணமாகிவிட்டனர்.

அதிகாலை 3.00 மணியளவில் கம்பலா இராணுவ முகாம்களிலிருந்து சில இராணுவ வாகனங்களும் டாங்கிகளும் எண்டபே நோக்கி உறுமிக்கொண்டு சென்றன. விடிந்த பின்னர் அமைச்சர் சியாம்பாவுக்கு அவசர தொலைபேசி அழைப்பு வந்தது. விமான நிலையத்தில் பல பிரேதங்களும் காயப்பட்டோரும் கிடப்பதனால் உடனடியாக அம்பியூலன்ஸ் வண்டிகள் அனுப்பிவைக்குமாறு ஒரு சிவில் அதிகாரி கோரியிருந்தார். அவர் இஸ்ரேலியர்கள் தான் அதிரடித் தாக்குதல் நடாத்திவிட்டு பணயக் கைதிகளை மீட்டுச் சென்று விட்ட தகவலை அமைச்சருக்குச் சொன்னார். அமைச்சர் உடனடியாக முலாகோ மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டு விமான நிலையத்துக்கு அம்பியூலன்சுகளையும் மருத்துவ உதவிகளையும் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார்.

மருத்துவமனைக்கு வழக்கத்துக்கு முன்னதாகவே சென்ற அமைச்சர் சியாம்பாவுக்கு அதிசயமான தகவல்கள் காத்திருந்தன. எண்டபே /விமான நிலையத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த காயப்பட்டோருடைய தொகையை விட, சிவிலியன்கள் அதிகமாக அனுமதிக்கப்பட்டிருந்தனர். நூற்றுக்கணக்கானோர் சிறுசிறு காயங்களுக்கு மருந்து கட்டிக்கொண்டு வெளியேறுவதையும் கண்டார். மருத்துவமனை அதிகாரிகளை விசாரித்ததில் உண்மை தெரிந்தது.

எண்டபே நாடகம் பூரணமாக முடிவடைந்த பின்னர், உகண்டா படைப்பிரிவினர் தங்கள் முகாம்களிலிருந்து வண்டிகளில் புறப்பட்டு வீதிகளில் பவனி வந்தனர். இவர்களுடைய 'வீரத்தை'ப்பார்த்து தெருக்களில் திரிந்த சில குறும்புக்காரர்கள் சிரித்துக் பரிகாசித்தனர். இதனால் சினமடைந்த படையினர் தெருக்களில் நடமாடிய பலரையும் மிருகத்தனமாகத் தாக்கத் தொடங்கினர். இவ்வாறு தாக்கப்பட்டுக் காயமடைந்த பலர் ஆபத்தான நிலையிலிருந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

முதல் நாளன்று எண்டபேயில் கடமைக்குச் சென்றிருந்த தமது உறவினர்களுக்கு என்ன ஆனதோ என்று தெரியாமல் படையினர் பலரின் உறவினர்களும் கூட மருத்துவமனையில் மொய்த்திருந்தனர்.

டோரா புளொச் என்ற வயோதிப மாதும் அப்போது முலாகோ மருத்துவமனையில் தான் இருந்தார். பணயக்கைதிகள் அனைவரும் இஸ்ரேலியர்களால் விடுதலை செய்யப்பட்டு விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்டு விட்ட தகவல் புளொச்சுக்குத் தெரிந்திருக்கவில்லை.

டாக்டர், சியாம்பா, திருமதி புளொச்சைச் சென்று பார்க்க நினைத்தார், அவருக்கு உள்ளூர ஒரு பயம் இருந்தது. காயம்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்திருந்த படையினர் எவராவது, திருமதி புளொச் மீது பழி தீர்க்கக் கூடுமோ என்று எண்ணினார். அவர் போய்ப்பார்க்கும் வரை எதுவுமே தெரியாத நிலையில் திருமதி புளொச் இருந்தார்.

தனது உடைகள் அதுவரை மாற்றப்படாத நிலையில் இருப்பதனால், அவற்றைத் தானே குளியலறை சென்று கழுவ அனுமதிக்குமாறு அந்த அம்மையார் சியாம்பாவிடம் கோரினார். நோயாளிகளுக்கு வழங்கப்படும் ஓர் ஆடையை அவருக்குக் கொடுக்குமாறு சியாம்பா தாதி ஒருத்தியிடம் கூறினார். தைரியமாக இருக்கும்படி கூறிவிட்டு, அவருடைய அலுவலகம் சென்று விட்டார். விமான நிலைய சம்பவம் எதனையும அந்த அம்மையாரிடம் கூறவேண்டாம் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் சியாம்பா அங்கிருந்து வெளியேறியதும் பிரிட்டிஷ் தூதரக அதிகாரியான பீட்டர் சாண்ட்லி என்பவர் திருமதி புளொச்சைப் பார்வையிடச் சென்றிருந்தார். சியாம்

தருவது
அழகன்

பாவிடம் தொலைபேசியில் மருத்துவமனை அதிகாரிகள் கூறியபோது, அவர், சில நிமிடங்கள் மட்டும் பீட்டர் அந்த அம்மையாருடன் உரையாட அனுமதிக்குமாறு கூறினார். இதனை அமீன் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்ற உண்மையை அவர் உணர்ந்தார்.

பீட்டர் சாண்ட்லி, திருமதி புளொச்சுக்கு உணவு தயாரித்துக்கொண்டு வருவதாகக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அவர் மருத்துவமனையிலிருந்து புறப்படும் போது முலாகோ மருத்துவமனையில் முன் வாயிலினூடாக இரு வாகனங்கள் நுழைந்தன.

அரசு ஆய்வாராய்ச்சி மையத்துக்குச் சொந்தமான இவ் விரு வண்டிகளும் மருத்துவமனை வளவினுள் சற்றும் மேடாக இருந்த ஒரு சாலையில் நிறுத்தப்பட்டன.

ஆய்வாராய்ச்சி என்ற பெயரில், அமீனுக்கு வேண்டாப்படாதவர்கள் எவராகவிருந்தாலும், அவர்களை விரைவாக விண்ணுலகம் அனுப்பும் அந்த மையத்தின் பொறுப்பதிகாரி மேஜர் ஃபாரூக் மினாவா முன் வண்டியிலிருந்தும் காப்டன் நஸுர் ஒண்டாகோ என்பவன் பின் வண்டியிலுருந்தும் இறங்கி, எவரிடமும் எதனையும் விசாரிக்காமல் உயரே கொண்டு செல்லும் லிஃப்டுக்கும் காத்திராமல், மாடிப்படிகளில் கடகடவென்று விரைந்து ஏறினர். உடன் வந்த சிப்பாய்கள் சிலரும் பின் தொடர்ந்தனர். (இடி தொடரும்)

## அதற்கும் தயார்



'டைட்டானிக்' படம் மூலம் உலகப் புகழ் பெற்றவர் அப்படத்தின் கதாநயாகி கேட் வின்ஸ்லெட். இதன் மூலம் அவருக்கு எண்ணிலடங்காத இரசிகர்கள் பெருகி விட்டார்கள்.


அவருடைய அடுத்த படத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கேட் வின்ஸ்லெட் நடித்து வரும் புதிய படம் 'குயில்ஸ்'. மார்க்குயிஸ டி சேட் என்பவரின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட படம்.

இதில் கேட் வின்ஸ்லெட்டிற்கு மார்க்குயிஸ் டி சேட் வீட்டின் வேலைக்காரி வேடம். இதில் வின்ஸ்லெட்டுக்கு 'அந்த' மாதிரியான காட்சிகள் உண்டு. அவரும் அதற்குத் தயாராகவே இருக்கிறார்.

சென்ற வருடம் உதவி இயக்குநர் ஜிம் தேராபிளெட் என்பவரை காதலித்துத் திருமணம் செய்திருக்கும் கேட் வின்ஸ்லெட் இப்போது கர்ப்பமாக இருக்கிறார்.

## செலவு செய்யும் ஷாருக்

இந்தி நடிகர் ஷாருக்கான் செலவைப் பற்றிக் கவலைப் படுவதேயில்லை. நடிப்பதால் பெரும் பணம் கிடைக்கிறது அவருக்கு. அதுமட்டுமன்றி விளம்பரப் படங்களில் கோடி கோடியாகச் சம்பாதித்து வருகிறார்.



பத்துக் கோடி (இந்திய) ரூபா செலவில் ஆடம்பர பங்களா ஒன்றை வாங்கி, தரையை அழகு படுத்த இலட்சக் கணக்கில் செலவு செய்துவருகிறார்.

இப்போது 'ட்ரீம்ஸ் அன்ட்லிமிட்டெட்' என்ற பெயரில் இந்தி நடிகை ஜூஹி சாவ்லாவுடன் இணைந்து புதிய படக் கம்பனி ஒன்றை ஆரம்பித்து, 'பிர்பி தில் ஹை ஹிந்துஸ்தானி' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார்.

இப்படத்திற்காக ஆடம்பரமான அரங்குகளுடன் அதிக செலவு செய்கிறார். வீண் செலவைத் தவிர்க்கும்படி இவரது பார்ட்னரான ஜூஹி சாவ்லா கூற,

"எனது படத்திற்கு எவ்வளவு பணமென்றாலும் விநியோகஸ்தர்கள் கொடுக்கத் தயாராக இருக்கும்போது, சிக்கனத்தைப்பற்றி நினைப்பதா?" என்று சொல்லுகிறார் ஷாருக்கான்.

## அபிமான மோகம்



பிடித்த நடிக நடிகையருக்காகவோ, பாடக பாடகிகளுக்காகவோ அல்லது விளையாட்டு வீரர்களுக்காகவோ எதையும் செய்துவிடத் துடிக்கும் தீவிர விசிறிகள் (விசிறிகள் என்பதை விட வெறியர்கள் என்று கூடச் சொல்லலாம்) இருக்கிறார்கள்.

அண்மையில் இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் இனிமேல் விளையாடுவது கடினம் என அவருக்குச் சிகிச்சையளித்த டாக்டர் தெரிவித்தார்.

இதனால் ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டார். இது போன்ற விஷயங்கள் இலங்கை இந்திய நாடுகளில் மட்டுமன்றி மேலை நாடுகளிலும் உள்ளது. தமது அபிமானங்களின் மேல்வைத்திருக்கும் மோகத்திற்கு அளவே கிடையாது.

'பீட்டில்ஸ்' என்பது உலகத்தைக் கலக்கிய இசைக்குழு. அதில் போல் மெக்கார்டி என்ற கலைஞரும் புகழ்பெற்றவர். இவர் 1958ல் பீட்டில்ஸ் குழுவில் இணைந்து பணியாற்றியவர். பின்பு பிரிந்து போய் விட்டார்.

40 வருடங்கள் கழித்து சமீபத்தில் மறுபடியும் அவர் அக்குழுவில் இணைந்து இசை நிகழ்ச்சி நடத்தினார்.

மீண்டும் 'பீட்டில்ஸ்' இசைக்குழுவின் இன்னிசையை இரசிப்பதற்காக டிக்கெட்டிற்கு முண்டியடித்தனர் இலண்டன் வாசிகள். ஆனால் 150 டிக்கெட்டுக்கள் மட்டும் குலுக்கல் முறையில் இலவசமாகக் கொடுக்கப்பட்டது.

டிக்கெட் கிடைக்காதவர்கள் அதைப் பெற எதையும் கொடுக்கத் தயாராக இருந்தனர்.

அமெரிக்க தொழிலதிபர் ஒருவர், தனக்கு ஒரு டிக்கெட் தரும் நபரை இங்கிலாந்தில் இருந்து கலிஃபோனியாவுக்கு இலவசச் சுற்றுலா அழைத்துச் செல்வதாக அறிவித்தார்.

இன்னொரு இலண்டன் செல்வந்தர் ஒருவர், ஒரு டிக்கெட்டுக்காக ஒரு வாரம் தனது ஹெலிகொப்டரை இலவசமாக உபயோகிக்கக் கொடுப்பதாக அறிவித்தார்.

இதையெல்லாம் தூக்கிச் சாப்பிடுவது போல் ஒரு அறிவிப்பை வெளியிட்டார் ஓர் இளம் பெண்.

"எனக்கு டிக்கெட் கொடுத்தால் ஒருநாள் அவருடன் படுக்கைக்குச் செல்லத் தயார்!" என்றாராம்.

## ஆண்களுக்குப் பயிற்சி

வியன்னாவில் ஆண்களுக்காகப் புதிய பயிற்சிப் பள்ளி ஒன்று தொடக்கப்பட்டுள்ளது. வேலைக்குச் செல்லும் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஆண்கள் வீட்டு வேலைகளைச் செய்து கொள்ளும்படி ஆகிவிடுகிறது.



ஆனால் சமையல் செய்வது, துணிகள் துவைப்பது, வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது, குழந்தைகளைப் பராமரிப்பது போன்ற வேலைகளைச் செய்யத் தெரியாத ஆண்கள் திணறிப்போய் விடுகிறார்கள்.

இதனால் சமையல் முதற்கொண்டு எல்லா வேலைகளும் அடங்கிய வீட்டுப் பராமரிப்பு பற்றி கற்றுக்கொடுக்க பயிற்சிப்பள்ளி தொடக்கப்பட்டிருக்கிறது.

விரைவில் இந்தப் பயிற்சிப் பள்ளிகள் இங்கு தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.




## மில்லேனிய வாரிசு

ஆறு வருடங்களுக்கு முன் உலகைக் கலக்கிய திருமணம் அது. எளிய நிலையில் இருந்து சிகரம் பெற்றவர். அவர்தான் ஜப்பான் இளவரசி மசாகோ.

ஜப்பானின் மகா செய்தி இதுதான். இளவரசி மசாகோ கருத்தரித்துள்ளார். டயானா, ஹிலாரி போன்றோருக்குச் சமமாகப் புகழ் பெற்றவர் மசாகோ.

இந்த நூற்றாண்டில் பிறக்கும் ஜப்பானிய அரச வாரிசை 'மில்லேனியம் குழந்தை' என்று ஜப்பானியர்கள் கூறுகிறார்கள். அது மட்டுமன்றி இந்தக் குழந்தை ஜப்பானிய சிம்மாசனத்தின் 127வது அரச வாரிசு.



## இரத்தக் கண்ணீர்

இத்தாலி நாட்டின் தலைநகர் ரோமிற்கு அருகே ஐயீன் என்ற இடத்தில் உள்ள கன்னி மரியாளின் சிலை ஒன்றில் இருந்து இரத்தக் கண்ணீர் வடிந்து வருகின்றது.

ஐயீனில் இருந்த குகைக்கோயிலில் இந்த 5 அடி உயரச்சிலை இருந்தது. பின் இது டொன் கதனோ சக்கா என்பவரது வீட்டில் வைக்கப்பட்டது.

இதைக் கேள்விப்பட்டுப் பலர் திரண்டு வந்து, இரத்தக் கண்ணீர் வடிக்கும் கன்னிமரியாளின் சிலையைப் பார்வையிட்டனர்.

## சோக வெள்ளம்

அண்மையில் வெனிசுலா நாட்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் 50 ஆயிரம் பேர் வரை பலியாகினர். அத்தோடு ஒன்றரை இலட்சம் பேர் இடம் பெயர்ந்து அகதிகளாயினர்.

இடம்பெயர்ந்த மக்கள், வெள்ள நிலைமை கட்டுக்கடங்கியதால் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினார்கள்.

கிறிஸ்துமஸ் தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் வழிபாட்டிற்காக ஆலயம் சென்ற மக்களை, அங்கு கண்ட காட்சி கவலை கொள்ள வைத்தது.

பாவிகளை மீட்க வந்த இரட்சகராம் இயேசு கிறிஸ்து, அவர்களுக்காக சிலுவையில் மரித்தார். வெனிசுலா நாட்டு மக்களைச் சோகத்தில் மூழ்கடித்த வெள்ளம் சிலுவையில் தொங்கும் இயேசுவின் சிலையையும் விட்டு வைக்கவில்லை.

(படஉதவி: அகமட் நியாஸ்- அஸாம் அலி)



## தகவல் பெட்டி

## பேசும் செய்தித்தாள்



செய்தித்தாள்களை வாங்கி வாசிக்க வேண்டிய அவசியம் இனி இல்லை. இப்போது ஜப்பான் நாட்டில் பேசும் செய்தித்தாள்களை கண்டு பிடித்துள்ளனர்.

'ஸ்கேன் ரோக் ரீடர்' என்ற பெயரை உடைய இந்தப் பேசும் செய்தித்தாள், ஒளிப் புள்ளிகளைப் பிரதி பலித்து ஸ்கேன் மூலம் ஒலி சேகரிக்கப்பட்டு பேசக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் நாட்டில் உள்ள ஒலிம்பிஸ் ஒப்டிக்கல் கம்பனியும் 'அசாஹி சின்பன்' என்ற செய்தித்தாளை வெளியிடும் கம்பனியும் சேர்ந்து இந்தப் பேசும் செய்தித்தாளை வெளியிட்டுள்ளனர்.

உலகின் முதலாவது பேசும் செய்தித்தாளான இதன் விலை நம் நாட்டு மதிப்புப்படி கிட்டத்தட்ட 60 ஆயிரம் ரூபாய்.

## இராட்சத சக்கரம்



புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்க மேற்கத்தைய நாடுகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு புதுமையைச் செய்தன.

ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் கொன்கோட் சதுக்கத்தில் இந்த இராட்சத சக்கரத்தை நிர்மாணித்துள்ளனர். இதன் உயரம் 60 மீட்டர். வேகமாகச் சுழலும் இச்சக்கரத்தில் அமர்ந்து பாரிஸ்நகரின் பல பாகங்களையும் கண்டு களிக்கலாம்.

இதில் பொருத்தப்பட்டுள்ள தொட்டிகளில் தரையில் ஏறி அமரும் போதுள்ள வெப்பத்தைவிட உச்சியில் சஞ்சரிக்கும்போது கணிசமான அளவு வெப்பம் குறைந்து கடும் குளிரில் நடுங்குவார்கள்.

(பட உதவி: ரபாய்தீன்-கட்டார்)

## சுட்டிக் குழந்தை

தமிழ் நாட்டில் இருக்கும் விழுப்புரத்திற்கு அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்தவள் தான் இந்தச் சுட்டிக் குழந்தை. இவளின் பெயர் வினோதினி. வயது 2.

உலக உருண்டையை இவள் கையில் கொடுத்து, நாடுகளின் பெயரைச் சொன்னால் போதும், உடனே அந்த நாடுகளைச் சுட்டிக் காட்டி விடுவார்.

இலிகிதராகப் பணிபுரியும் கந்தன் (வயது 35) விரிவுரையாளர் சாந்தி (வயது 30) தம்பதிக்கு 05/12/97ல் பிறந்தார் வினோதினி.

சாந்தியின் தந்தையும், வினோதினியின் தாத்தாவுமான பாலசுப்ரமணி தொடர்ந்து சிலவாரங்கள் வினோதினிக்கு அளித்த பயிற்சியே இதற்குக் காரணம்.

வினோதினிக்குத் தொடர்ந்து பயிற்சி அளித்து வரும் அவளுடைய தாத்தா 3 வயதிற்குள் வினோதினிக்கு உலக நாடுகள் அனைத்தின் பெயர்களையும் அவற்றின் தலை நகரங்களையும் சொல்லும் அளவுக்கு பயிற்சி அளிக்க விருப்பதாகக் கூறியுள்ளார்.



## மைசூரில் சூரியா—ஜோதிகா

"உயிரே உயிரே
ஆழைத்ததென்ன
ஓசைகேட்டு ஓடி வந்தேன்
மறைந்ததென்ன?"

என்ற பாடல் காட்சியில் சூர்யாவும் ஜோதிகாவும் ஜோடி சேர்ந்து நடித்தனர். இந்தப் பாடல் காட்சி மைசூரில் 'உயிரிலே கலந்தது' படத்திற்காக படமாக்கப்பட்டது.


இப்படத்திற்கு கதை-திரைக்கதை-வசனம் எழுதி இயக்குகிறார் ஜெயா என்ற புதிய இயக்குநர்.

## விண்ணுக்கும் மண்ணுக்கும்

'நீ வருவாய் என..' படத்திற்குப் பின் அப்படத்தின் இயக்குநர் ராஜகுமாரன் 'தேவதை வந்து விட்டாள்' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

அத்துடன் சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனத்திற்காக இவர் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்திற்கு 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இதில் பிரசாந்த்-தேவயானி ஜோடியாக நடிக்கவுள்ளார்கள்.



ஸ்ரீகாந்த்-செளந்தர்யா
படம்: வெள்ளி நிலவே

## காதோடு சொல்லுகி...

தன்னிடம் கதை சொல்ல வரும் புது இயக்...
மணிக்கணக்கில் கதை கேட்கிறார் 'டான்ஸ்' நடிகர். இ...
சில மாற்றங்களும் சொல்வார். கதை கேட்டு முடிந்த...
தான் புது இயக்குநர்களின் படங்களில் நடிப்பதில்...
அனுப்பிவிடுகிறார். பிறகேன் கதை கேட்கிறார்? விரை...
சொந்தமாகத் தயாரித்து இயக்கும் படத்திற்கு. இந்தக்...
இருந்து சில காட்சிகளை உருவத்தான் என்கிறா...

நிறம் கொஞ்சம் கறுப்புத்தான். ஆனால் கொ...
கெஞ்சலுமாகக் பேசுவதில் கில்லாடி. நடிகர்கள்...
பாளர்கள், இயக்குநர்கள் என்று அனைவரிடமும்...
பொழிந்து வருகிறார் ஒரு நடிகை. இப்போது...
'சங்கமம்' அரசியல்வாதிகள் பக்கம் திரும்பி...
'யாராக இருந்தால் என்ன வரும் வரைக்கும்...
என்று முடிவெடுத்த அவரின் கொள்கை...
யானதுதான்.

அமெரிக்காவில் இருந்து திரும்பி வ...
முன்னாள் கதாநாயகி நடிகை மறுபடி...
வில் கொடிகட்டிப்பறக்கலாம் என்று...
தார். முடியாமல் போகவே சின்ன...
தாவினார். நடிகையின் அனுசரிப்...
தொடர்களில் நடிக்கவும் வாய்ப்புக்கள்...
ஆனால் படப்பிடிப்புக்களின் போது...
அலட்டல் தாங்க முடியாததால் 'அ...
வீட்டிற்கே அனுப்பிவிட்டார்களாம்.

## அர்ஜுன் மோதல்

ராஜ்கபூர் இயக்கத்தில் அர்ஜுன்-ரம்பா ஜோடியாக நடித்து வரும் படம் 'சுதந்திரம்'. இப்படத்தை 'மின்சாரக்கண்ணா' படத்தைத் தயாரித்த கே.ஆர்.ஜி. மூவிஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

இப்படத்திற்காக 60 இலட்ச ரூபாய் செலவில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கில் 20 நாட்கள் படப்பிடிப்புக்கள் நடைபெற்றன.

'மன்னன்' படத்தில் வில்லனாக நடித்த பிரபல இந்தி வில்லன் சரத் சக்சேனா இப்படத்திலும் வில்லனாக நடித்து வருகிறார். அர்ஜுன்-சரத் சக்சேனா மோதும் பயங்கர சண்டைக் காட்சிகள் இந்த அரங்கில்தான் படமாக்கப்பட்டன.

## திரையுலக மறுபக்கம் (134)

## நகைச்சுவை நடிகருக்கு செருப்பைக் காட்டிய நடிகை

யாழ்நாட்டிலிருந்து மயன்

தமிழுக்குச் சங்கம் வைத்த இடத்தில் இருந்து வந்து நகைச்சுவையில் கொடிகட்டிப் பறக்கும் நான்கெழுத்து நடிகர் இவர். நடிப்பில் இவருடன் போட்டி போடும் இன்னொரு நகைச்சுவை நடிகருடன் இன்னொரு விசயத்திலும் போட்டி போட்டு வருகிறார் இவர்.

இருவரும் போட்டி போட்டி போடும் இன்னொரு விஷயம் நடிகைகளைக் கணக்குப் பண்ணுவது தான்.

இதற்காக நான்கெழுத்து நகைச்சுவை நடிகர் வெட்கத்தை விட்டு நடிகைகளிடம் கேட்பார். துணை நடிகைகளுடன் மட்டும் உல்லாசமாக இருந்து வந்த இவர் அமெரிக்காவில் இருந்து வந்த முன்னாள் நாயகி நடிகையுடனும் நெருக்கமாக இருந்தார்.

பணத்தைக் காட்டினால் எல்லாரையும் வளைத்து விடலாம் என்று எண்ணினார் நடிகர். அதன்படி முன்னணி நடிகையாக இருந்து மார்க்கெட் டல்லாக இருக்கும் நடிகைகள் பக்கம் போக முடிவு செய்தார்.

சமீபத்தில் கல்கத்தாவில் இருந்து இறக்குமதியான நடிகையைச் சந்திக்கும் வாய்ப்பு நடிகருக்குக் கிட்டியது. போர்த்து முடிக்கொண்டு 'லட்சுமி' கரமாக நடித்து வரும் அந்த நடிகைக்கு இப்போது படவாய்ப்புக்கள் குறைவு.

### நடிகர் போட்ட கணக்கு

மார்க்கெட் இல்லாமல் இருக்கும் அவரை வளைத்து விடலாம் என்று கணக்குப் போட்டார் அவர்.

அதற்காக நடிகைக்குத் தன் எண்ணத்தைப் புரிய வைக்கும் விதத்தில் 'என்ன விலை அழகே.. சொன்ன விலைக்கு வாங்க வருவேன்...' என்று பாடி 'ஏக்கப் பார்வை பார்த்தார்.

அவ்வளவுதான், அடுத்த நிமிடமே 'கல்கத்தா' காளியாக மாறிவிட்டார் நடிகை. காலில் கிடந்த செருப்பைக் கழற்றி, "இந்த வேலையை வேறு எவரிடமாவது வைத்துக்கொள். இனிமே இந்த எண்ணத்தோட என்பக்கம் வந்தா.. நான் பேசமாட்டேன். இதுதான் பேசும்.." என்று தன் கையில் கிடந்த செருப்பைக் காட்டினார்.

இதைப் பார்த்துப் பயந்து போன நடிகர், நடிகையிடம், "என்ன சிஸ்டர் இதுக்குப் போய் இப்படி கோவிச்சுக்கிறீங்களே.. சும்மா ஒரு விளையாட்டுக்குத்தான் விளையாடினேன். தப்பா இருந்தா மன்னிச்சுடுங்க.." என்று அவர் காலில் விழாத குறையாகப் பேசி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அசடு வழிய அங்கிருந்து நழுவினார்.

இருந்தும் நடிகர் திருந்திய பாடில்லை. இப்போதும் துணை நடிகைகளிடம் இரட்டை அர்த்தம் தொனிக்க பேசி, வழிந்து வருகிறார்.



அனுஷா

## நெருப்பூ

புதிய இயக்குநர் ரமேஷ் சஞ்சய் என்பவர் கதை, வசனம் எழுதி இயக்கும் முதல் படம் 'நெருப்பூ'.

இப்படத்தைப் பற்றி இயக்குநர் சஞ்சய் கூறியது:

'பூ ஒன்று பூக்கிறது. அந்தப் பூ பூக்கடைக்கு வந்து மாலையாகத் தொடுக்கப்படுகிறது. மாலை சாமிக்கும் போகிறது; இழவு வீட்டிற்கும் போகிறது.

பெண்ணும் பூக்களைப் போன்றவள்தான். அவர்கள் வாழ்க்கை இனிக்கிறது. இல்லையென்றால் சின்னாபின்னமாகி விடுகின்றது.

எனது நாயகி வஞ்சிக்கப்பட்ட பூ. தன்னை வஞ்சித்தவர்களை பழிவாங்க 'நெருப்பூ' ஆக மாறுகிறாள்.

இதில் பூவாக வந்து 'நெருப்பூ' ஆக மாறுபவர் புதுமுகம் கரிஷ்மாராய். இவர் மும்பை மொடல் அழகி.

இப்படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடுகிறார் மம்தா குல்கர்னி.


## முகப்பில் // விஜய்—மோனல்

## பிரபு விரும்பிய நடிகை

தமிழ்ப்பட நாயகிகள் தான் அந்த நடிகருடன் நடிக்க வேண்டும். இந்த நடிகருடன் நடிக்க வேண்டும் என்று தாம் இணைந்து நடிக்க விரும்பும் நடிகர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசுவார்கள்.

ஆனால் கதாநாயக நடிகர்களோ அந்த நாயகியுடன் நடிக்க வேண்டும் என வெளிப்படையாகக் கூறமாட்டார்கள். இதில் பிரபு சற்று விதிவிலக்கு.

நல்ல திறமையான நடிகை என்றால் நடிக்க விரும்புகிறேன் என்று வெளிப்படையாகக் கூறிவிடுவார். அண்மையில் பிரபு பாராட்டி அவருடன் நடிக்க வேண்டும் என விரும்பிய நாயகி யார் தெரியுமா? தெலுங்கில் பிஸியாக நடித்து வருபவரும் 'படையப்பா' நாயகியுமான செளந்தர்யாதான். திறமையான நடிகைகளில் செளந்தர்யாவும் ஒருவர் என பிரபுவால் பாராட்டுப் பெறும் செளந்தர்யா எப்போது அவருடன் ஜோடிசேரப் போகிறார்?



## அஜித்—ஷாலினி திருமண... அப்பா முட்டுக்க...

'அமர்க்களம்' படத்தில் நடித்தபோது அஜித்திற்கும் ஷாலினிக்கும் இடையில் காதல் மலர்ந்தது.

'கல்யாணத்திற்குப் பின் நடிக்கமாட்டேன். அதனால் ஒப்புக் கொண்ட 'அலைபாயுதே', 'கண்ணுக்குள் நிலவு' மற்றும் 'நிறம்' என்ற மலையாளப் படம் ஆகியவற்றுடன் நடிப்புக்கு முழுக்குப் போட்டு விடுவேன்' என்ற ரீதியில் சொல்லியிருந்தார் ஷாலினி.

இவர்கள் திருமணம் இந்த வருட ஆரம்பத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது இவர்கள் திருமணத்திற்கு முட்டுக்கட்டை விழுந்துள்ளது. இதற்குக் காரணமாக இருப்பவர் ஷாலினியின் தந்தை பாபுதான்.

அப்படியானால் முதலில் இவர்கள் காதலுக்கு ஏன் பச்சைக்கொடி காட்டினார்? இந்தக் காதலுக்கு முதலிலேயே எதிர்ப்புத் தெரிவித்திருந்தால் இரகசியத் திருமணம் செய்திருப்பார்கள். அதனாலதான் சம்மதம் தெரிவித்து இவர்களது திருமணத்தைத் தை...
நிறுத்தியுள்ளா...

ஷாலினி ...
கொண்டால் ...
அதனால் திரு...
டை போட்டு...

அது மட்டு...
கொண்ட பட...
கொடுத்துவிட...
தையோ புதிய ப...
நடிக்க வைக்க ...
கிறார்.

அதில் முக...
நடிக்கும் பட...
யாக ஷாலினி ...
லாம் வாங்கி ...

அப்பாவே ...
திற்கு முட்டுக்க...
கிறார்.

சினிமாவில் மட்டுமன்றி சில தனி வீடியோ அல்பங்களிலும் பாடி ஆட்டம் போட்டார் முன்னால் கவர்ச்சி நடிகையின் பெயரை வைத்திருக்கும் மின்னணிப்பாடகி. பாடகிக்கும் ராமரின் நாமகரணத்தை வைத்திருக்கும் கணவருக்கும் சமீபகாலமாய் ஏகப்பட்ட லடாய். அம்மணியின் நடவடிக்கையில் மாற்றம் தேவை என்கிறது கணவரின் வாதம். முடியாது என்பது அம்மணியின் வாதம். விஷயம் விவாகரத்து வரை வரலாம் என்கிறார்கள்.

பூவேந்தர்களில் ஒருவரான முன்னெழுத்து இயக்குநருக்கும் புதுமை விருமபி நடிகருக்கும் ஏற்கனவே ஏழாம் பொருத்தம். சூப்பர் ஸ்டார் படப் பாடல் தலைப்பில் தயாராகும் படமொன்றில் இணைந்தார்கள். இவர்கள் இருவருக்கும் இப்போது மீண்டும் பிரச்சனை. நடிகரைப் பற்றி இயக்குநரும், இயக்குநரைப் பற்றி நடிகரும் படத்தின் தயாரிப்பாளரிடம் புகார் கூறி வருகிறார்களாம்.

## வி.சேகரின் புதிய படம்

'விரலுக்கேத்த வீக்கம்', குடும்பப்பட இயக்குநரான வி.சேகர் இயக்கத்தில் கடைசியாக வந்த வெற்றிப்படம். இது தெலுங்கில் தயாராகி வருகிறது.

இதையடுத்து வி.சேகரின் இயக்கத்தில் தயாராகவுள்ள புதிய படம் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'.

வழக்கம் போல் இதிலும் மூன்று நான்கு ஜோடிகள் உள்ளனர். நாசர்-குஷ்பு, கரண்-ரோஜா, வடிவேலு-கோவை சரளா, விவேக்-புதுமுக நடிகை என இதில் நான்கு ஜோடிகள்.

தனது சொந்தப்பட நிறுவனமான திருவள்ளுவர் கலைக்கூடம் சார்பாக துரைராஜ், பார்த்திபன் ஆகிய தன் இரு நண்பர்களுடன் இணைந்து தயாரித்து இயக்குகிறார் வி.சேகர்.

விரைவில் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

## யாருடைய படத்தில் கமல்?

பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இருக்கும் 'ஹேராம்' படத்தை அடுத்து கமல் யாருடைய படத்தில் நடிக்கப் போகிறார் என்பது பலரது கேள்வி. காரணம் 'ஹேராமை' அடுத்து கமல், கே.எஸ்.ரவிக்குமார் தயாரித்து இயக்கும் படத்தில் நடிப்பார் என்று முதலில் கூறப்பட்டது. இப்போது ஷங்கரின் படத்தில் கமல் நடிப்பார் என்று கூறப்படுகிறது.

ஷங்கர் இயக்கத்தில் நடிப்பது என்றால் குறைந்தது ஒரு வருடமாவது பிடிக்கும். ஆனால் கே.எஸ்.ரவிக்குமாரின் படமென்றால் மூன்று மாதத்தில் முடிந்துவிடும்.

கமலிடம் இருந்து பதில் வரும் வரை முடிவு கேள்விக் குறிதான்.




# சினி விசிட்


விஜய்-ஷாலினி
படம்: கண்ணுக்குள் நிலவு

## மினி சினி

'வாலி' பட இயக்குநர் எஸ்.ஜே.சூர்யா இயக்கத்தில் விஜய்-ஜோதிகா 'குஷி' படத்தில் ஜோடியாக நடித்து வருகின்றனர். அப்படத்தில் சிம்ரான் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்.

தொடர் தோல்விகளால் துவண்டு போன ராஜ்கிரண் மறுபடி எழுகிறார். விரைவில் இவர் சொந்தமாகப் படமொன்றை தயாரிக்கவுள்ளார். இப்படத்தில் 'முத்து மணிக்கிளியே' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'மலையாள பாக்கியராஜ்' என அழைக்கப்படும் பாலச்சந்திரமேனன் இயக்கும் மலையாளப்படம் ஒன்றில் குஷ்பு கதாநாயகியாக நடிக்கிறார். குஷ்புக்கு ஜோடியாக ஜெயராம் நடிக்கவுள்ளார்.

'காதல் கோட்டை' படத்தை 'ஸிர்ப்தும்' என்ற பெயரில் இந்தியில் இயக்கிய அகத்தியன், இன்னொரு இந்திப் படமொன்றை இயக்கவுள்ளார். இதில் ஷாருக்கான் நாயகனாக நடிக்கவுள்ளார்.

உலக அதிசயங்களில் ஒன்றான 'தாஜ்மகால்' என்ற பெயரில் படமொன்று வந்து விட்டது. அடுத்து இன்னொரு உலக அதிசயமான 'பைசா கோபுரம்' என்ற பெயரில் புதிய படமொன்று தயாராகவுள்ளது.

டி.ராஜேந்தரின் 'மோனிஷா என் மோனாலிஸா' படத்தில் அறிமுகமானவர் மும்தாஜ். இவர் மறுபடி டி.ராஜேந்தர் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். டி.ஆர் இயக்கும் 'காதல் அழிவதில்லை' படத்தில் மும்தாஜுக்கு முக்கிய வேடம்.

பாரதிகண்ணன் இயக்கத்தில் பிரபு-ரோஜா இணைந்து நடித்திருக்கும் படம் 'திருநெல்வேலி' இப்படத்திற்கு முதலில் 'செம்மண் பூமி' எனப் பெயரிடப்பட்டு பின்னர் மாற்றப்பட்டது.

'துள்ளாத மனமும் துள்ளும்' பட இயக்குநர் தற்போது 'பெண்ணின் மனதைத் தொட்டு' என்ற படத்தை இயக்கி வருகிறார். பிரபுதேவா-புதுமுகம் ரீமா சென் ஜோடியாக நடிக்கும் இப்படத்தில் கார்த்திக் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்.

பார்த்திபன் -மீனா ஜோடியாக நடித்த 'உன்னருகே நானிருந்தால்' படத்துக்கு வசனம் எழுதியவர் அப்படத்திற்கு இணை இயக்குநராகப் பணிபுரிந்த நகுலன் பொன்னுசாமி. இவர் விரைவில் படமொன்றை இயக்கவுள்ளார்.

வெங்கடேசன் இயக்கத்தில் 'பூப்பறிக்க வருகிறோம்' படத்தில் ஜோடியாக நடித்த அஜய்-மாளவிகா மீண்டும் புதிய படமொன்றில் இணைந்து நடிக்கவுள்ளார்கள். இப்படத்தையும் வெங்கடேசனே இயக்கப் போகிறார்.

## ரஜினியின் செண்டிமெண்ட்

சினிமா உலகமே செண்டிமெண்டின் பிடியில்தான் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்கு ரஜினியும் விதிவிலக்கல்ல.

ரஜினியின் பட விழாக்கள், முக்கியமான விசேஷங்கள் எதுவானாலும் அது வியாழக்கிழமைகளில் தான் நடைபெறும். சமீபத்தில் நடந்த 'படையப்பா' வெள்ளிவிழாவும் வியாழக்கிழமைதான் நடைபெற்றது.

'ரஜினி-25' சிறப்பு கலைவிழாவும் முதலில் வியாழக்கிழமைதான் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் மழை காரணமாக ரஜினியின் செண்டிமெண்ட் மீறப்பட்டு விட்டது.

ரஜினிக்கும் வியாழனுக்கும் அப்படி என்ன சம்பந்தம்?

## தேவயாணி-சங்கவி 'அம்மன் தாலி'

'சர்வம் சக்தி மயம்', 'தாயே நீயே துணை' போன்ற பக்திப் படங்களுக்கு கதை-திரைக்கதை-வசனம் எழுதி இயக்கியவர் பி.ஆர்.சோமசுந்தர். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இவர் 'அம்மன் தாலி' என்ற படத்திற்கு வசனம் எழுதி இயக்குகிறார்.

பக்தியும் பயங்கரமும் நிறைந்த இப்படத்தில் கம்பியூட்டர் கிராஃபிக் கலக்கல் காட்சிகளும் உண்டு.

இந்தப் படத்தில் முன்னணி நடிகர் ஒருவர் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். தேவயானியும், சங்கவியும் நாயகிகளாக நடிக்கின்றனர். இவர்களுடன் செந்தில், மணிவண்ணன், வினுச்சக்கரவர்த்தி, கே.ஆர்.விஜயா, சுமித்ரா மற்றும் பலர் நடிக்கின்றனர்.

தேவா இசையமைக்க, வாலி, பிறைசூடன், வலம்புரி ஜான் ஆகியோர் பாடல்களை எழுதுகின்றனர். இப்படத்தை 'கிளாசிக் மூவி மேக்கர்ஸ்' நிறுவனம் தயாரிக்கிறது.

## அஜித்தின் அடுத்த கார்

அஜித்குமார் நடிக்கும் படம் நன்றாக வந்திருந்தால் அப்படத்தின் இயக்குநருக்கு தனது சொந்த செலவில் ஒரு காரைப் பரிசளிப்பார்.

'வாலி' படத்திற்காக சூர்யாவும், 'அமர்க்களம்' படத்திற்காக சரணும் அஜித்திடம் இருந்து காரைப் பரிசாகப் பெற்றிருக்கிறார்கள்.

இந்த வரிசையில் அஜித்திடம் இருந்து அடுத்து 'துரை' என்ற இயக்குநர் காரைப் பெறுவார் எனப் பேசப்படுகிறது.

அஜித், ஜோதிகா நடிக்கும் 'முகவரி' என்ற படத்தை புதிய இயக்குநர் துரை இயக்கி வருகிறார். படத்தின் படப்பிடிப்புக்கள் அநேகமாக முடிவடைந்து விட்டன. எடுக்கப்பட்ட வரையில் படம் நன்றாக உள்ளதாக அஜித் இயக்குநரைப் பாராட்டியுள்ளாராம்.

எனவே பரிசு நிச்சயம்தான்.

## ரேஷ்மாவின் தாராளம்

ரேஷ்மாவின் கைவசம் ஓரிரு படங்கள்தான் உள்ளன. அவற்றில் ஒன்று 'நீ எந்தன் வானம்'. நாயகன் விக்னேஷ்.

இந்தப் படத்தின் பாடல் காட்சிகளில் ரேஷ்மா தாராளமாக நடித்துள்ளார். இதைப் பார்த்த படத்தின் தயாரிப்பாளரும், இயக்குநரும் படத்தில் மேலும் இரண்டு பாடல்களைச் சேர்த்து விட்டார்களாம்.


வினீத்-கரண்
படம்: மறவாதே கண்மணியே

## என்ன வாம்..?

குடும்பஸ்தர் வந்தார்
அதிலிருப்பது–
'குதூகல'மென்றார்
★★
காவற்காரர் வந்தார்
அதிலிருப்பது–
'கதகதப்பு' என்றார்.
★★
அரசியல்வாதி வந்தார்
'வாக்குகள்' ஒளிந்திருப்பதாக
வாதித்தார்.
★★
மனைவி வந்தார்
உள்ளே இருப்பது
'உளறல்கள்' என்றார்.
★★
தம்பி எழுந்தார்
தள்ளி விடும்
'தண்ணி'ரென்றார்
★★
காதலன் கலங்கினார்
'தோல்விக்கு
மருந்'தென்றார்
★★
ஆசிரியர் வந்தார்
'தெம்பு தரும்
வம்பு!'
எதற்கென்றார்
★★
விலைமாது வந்தார்
'வெறியும்
நாற்றமு'மென்றார்
★★
மீனவர் வந்தார்
'தைரியம்!'
என்றார்
★★
சாரதி வந்தார்
'விழிப்பு!'
என்றார்
★★
பயணி வந்தார்
'விபத்து!'
என்றார்
★★
பாட்டன் வந்தார்
'பாட்டு!'
என்றார்
★★
மூதாட்டி வந்தார்
முறையாகக் கேட்டும்
முறைத்தார்
'மூத்திரம்!' என்றார்
★★
கடைக்காரர் எழுந்தார்
போத்தலைத் தொட்டார்
இதிலிருப்பது–
'மதுபான'மென்றார்!
★★

எஸ்.பிரபா.



## தெரிகிறது!

ஈராயிரமாண்டு இன்பமா பொங்கிவரும்?
வாராததெல்லாமா வந்துவிடும்?–தீராத
சிக்கல்கள் அத்தனையும் தீர்ந்தா மறைந்து விடும்?
மிக்க நலம் பொங்குமா மேல்?
❀❀
எப்பொங்கலும்போன்றே எம்முன்எழுந்தருளும்
இப்பொங்கலும் வந்திருந்தோடும்!–தப்பாமல்
பொங்கவேதான்செய்யும் புலம்பெயர்ந்தாருள்ளம்!
எங்கெங்கும் இப்பொங்க லே!
❀❀
பொங்கினோம் பொங்கினோம்
பொழுதின்விடிவில்லை!
பொங்குவோம் இன்னும் புதிதாக!–பொங்கல்கள்
அத்தனைக்கும் ஒருநாளில் அடைவோம்
முடிவொன்று!
புத்தமுதுண் பொழுதே அது!
❀❀
வெளுக்கும் நிலை சற்று விரிவாய்த்தெரிகிறது!
பழுக்கும் கதிர்தோன்றப் பார்க்கிறது!–விழுக்காடு
கூடுவதால் துயரமும் குறைவாய்த்தெரிகிறது!
நாடுவதேநமக்கும் நலம்!

'தாமரைத்தீவான்'-ஈச்சந்தீவு.

## நினைவோடு இரு!

உன்னை நினைத்தால் உணர்வுகள்
துடிக்கும்!
உண்மை தெரிந்தால் உறவுகள்
வெடிக்கும்!
காதலித்த பாவத்துக்காய் கனவுகள்
காண்கிறேன்!
ஒவ்வொரு இரவும் வெந்து
கருகுகிறேன்!
பிரிவுத் துயரால் பேயாய்
அலைகிறேன்!
பிரியமான காதலனே புரிந்து கொள்
என் நிலையை!
பிரிந்து விடாமல் என்
நினைவோடு இரு!

இரா.கலைமதி-மட்/கல்லடி.



## தேன் கிண்ணம்



## அம்மா அகதிக் கேம்பில் –நீ

அதிகாலை எழுந்து
அன்பாய் எனையெழுப்பி
அழகாய் உடுப்பித்து
'அ' படிக்க அனுப்பினாய்
அது ஒரு காலம்...!
♦♦
அக்காக்களோடு நானும்
வெளிக்கிட்டு
மா்ம உறுப்பு ஷிப்பினுள்
செருக அக்காமார்
கைக் கொட்டிச் சிரிக்க
அதனையெடுத்து நீ அணைத்தாய்
அது ஒரு காலம்....!
♦♦
உடல் பெருத்து
மீசை அரும்பி
ஊர் சுற்ற நான் சென்றதும்
வீடு திரும்பும் வரை – நீ
வழி மீது விழி வைத்து
பார்த்திருந்தாய்
அது ஒரு காலம்...!
♦♦
நாய்ப்பிடி காரருக்கும்
அமைதி காக்கும் படைக்கும்
பயந்து நான் வீட்டினுள்
முடங்கினாலும்–நீ லைப்பிறரி
சென்று கதைப் புத்தகம்
வாங்கி வந்து தந்தாய்
அது ஒரு காலம்...!

அமையாத அக்காக்களின்
வாழ்விற்காய் அன்னிய
நாடு நான் செல்ல
புறப்பட்ட போது
நீ கட்டியணைத்து அழுதாய்
அது ஒரு காலம்.
♦♦
அன்னிய நாட்டில் உன்
:.போட்டோவோடு நான்,
உன் (நம்) நாட்டில்
அகதி கேம்பில் என்
:.போட்டோவோடு நீ
இது ஒரு காலம்....!
♦♦
இப்போது என்னை
யாரும் எழுப்புவது இல்லை
ஏனெனில் இங்கு இயந்திர வாழ்வு
நானே எழுந்து விடுவேன்
நான் ஊர் சுற்றுவதில்லை
ஏனெனில் அதற்கு நேரமில்லை
சுற்றினாலும் என்னை யாரும்
கைது செய்ய மாட்டார்கள்
அவர்களுக்குத் தெரியும்
இலங்கை அகதி என
இது ஒரு காலம்...!

வன்னியூர் ஜெயச்சந்திரன்.

## காதல் வெளிச்சங்கள்

காயம் பட்ட பூமி எங்கும்
காதல் ஞாபகங்களே
உலா வருகின்றன!
♥❦
நினைவில் இருக்கும்
மயக்கத்தை உணர
முக்காட்டுக்குள்ளும்
என்–சால்வைக்குள்ளும்
காதல் பிறக்கும்.
♥❦
காதல் ஆத்மாவின்
முன்னறிவிக்கும் ராகம்.
♥❦
அதுகண்களுக்குள் தேக்கி
வைத்திருப்பதெல்லாம்,
கண்ணீரல்ல; சாட்சிகள்!
♥❦
வயதுக்குள் உட்கார்ந்து
பாலம் போடும் காதலுக்கு
பயணத்தின் தூரத்தை
நிறுத்த முடியாமல் போகலாம்!
♥❦
காதலுக்கு கூச்சமேறும்
போதுதான் அது கூனற
திரிகளாய் எரியத்தொடங்கி
விடுகின்றன.
♥❦
காதலை எப்பொழுதும்
சூரியனாகவே வைத்துக்
கொள்ளுங்கள்...
மனசுக்குள்ளும்!

உவைஸ்கனி.

## பெண்ணாகப் பிறந்திருந்தால்....

பருவம் வந்த நாளில்
பறிபோன சுதந்திரம்
இன்னும் திரும்பவில்லை
எனக்கு...!

பாடசாலையில்
கூடப்பயின்ற மாணவர்களோடு
சிரித்துப்பேசியதால்,
அண்ணன் மாரால்
தண்டிக்கப் பட்டு,
தடுமாறி நின்ற
என்னைக்கண்டு
கலங்கிய நீ–என்
நல்ல நண்பனாகிப்போனாய்....!

கல்லூரி நாட்களில்
உன் கனிவான பேச்சால்
கட்டுண்டு போன நான்
உன் மேல்
காதலாகிப்போனேன்...!

காதல்
அம்பலமானபோது
வீட்டில் ஏற்பட்ட
திடீர்ப் புரட்சியால்
கல்லூரிக் கல்வி
கனவாகிப் போனது....!
வீடு
சிறையாகிப் போனது...!

உன் நினைவுகளால்
பசி
பறந்து போனது...!
நித்திரை
நின்றுபோனது....!
நீ எழுதிய
கடிதம் கண்டபோதுதான்
என்
கவலைகளும்
கரைந்துபோனது....!

களவாய்த் தொடர்ந்த
காதலைக்கண்டுபிடித்து
கண்டித்தபோது,
கல்லாய் இருந்துவிட்டேன்
என் நிலையில்...!

'தொலைந்துபோ'
என வீட்டார்
விரட்டிவிட்டபோது,
சிறகு முளைத்த பறவையாய்
சந்தோஷத்தில் – உன்
மார்பில் சாய்ந்தேன்....!

'மோகம் முப்பது நாள்
ஆசை அறுபது நாள்!'
என்பதற்கிணங்க
நீயும்
உன் வக்கிரங்களுக்கு
என்னை வடிகாலாக்கி.....
வாரிசையும் சுமக்கவைத்து
என்
உணர்வுகளை
உதாசீனம் செய்துவிட்டாய்...!

அன்று நீ
பெண்ணுரிமை பற்றி
பேசியதெல்லாம்
வெறும் வாய் வார்த்தைகள்
மட்டுமே என
இப்போது தெரிந்துகொண்டேன்....!

பெண்ணாகப் பிறந்திருந்தால்.....
உனக்கும் தெரிந்திருக்கும்
என்
அவஸ்தைகள்....!



ராம். யுவராஜ் - கல்லடி.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். தேவகுமார்,
வயது: 17
முகவரி:
2/5ஏ, அடம்பன் குளம்,
நலன்புரி நிலையம்,
நேரியகுளம்.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: வை. நிதர்ஷினி,
வயது: 16
முகவரி:
82, கூழாவடி,
குமாரகோயில் வீதி,
மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கார்னி'

23.01.2000 முதல் 29.01.2000வரை

**மேடம்:**
கிரக நேர் நிலை கொள்வது மனதில் தைரியமும், பிறரின் நன்மதிப்புக்கள், வசதியான மாற்றங்கள், பொருளாதார நற்சேர்க்கைகள், விருந்தினர்களின் வருகையுடன் விவசாயம், கைத்தொழில் செய்வோருக்கு இலாபங்கள் கிடைக்கும். பரணி நட்சத்திரருக்கு பொன்னான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 25, 29.

**இடபம்:**
பார்வை ஸ்தானம் பலம் கொள்வதால் நோய் துன்பங்கள் குறைவடைந்து சென்று கொள்ளக் கூடிய நிலையும், உறவினர்கள் வருகையும், சுபகாரிய நிகழ்வுகள், அரச தலையீடுகள், வெளியிடத்து செய்திகள் என்பனவும் பெண்களுக்கு முக்கிய நிகழ்வுகள் நடைபெறும். துலாராசிக்காரர் நன்மைகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 23, 30.

**மிதுனம்:**
தொழில் நிலை பெருக்கமும் நண்பர்களின் உதவி மூலம் தொழில் முதலீடுகள்கூடும்.பிரயாண வெற்றியும், பயண அனுகூலங்களும், கல்வி விருத்தியும், தொழில் நுட்பத் துறையில் உள்ளோருக்கு மதிப்புக்கள் உயரும் காலமாக அமையும். திருவாதிரை நட்சத்திரகாரர் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 29, 15.

**கடகம்:**
நோய் துன்பங்கள் குறைவடையும், கடன் தலையீடுகள் வெளியிடத்து பண வரவு சகோதரர்களில் அறிவுரைகள், மனைவி வழி உறவினர்களுடன் மருமக்கள் சண்டை இடல். போசன சுகம் பாதிக்கப்படுதல் மனநிம்மதிக் குறைவுகள் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 27, 29.

**சிம்மம்:**
பாக்கிய பலமும் கிரகபார்வை ஸ்தானமும் ஒன்று கூடுவது. ஆயுட்கால பலம் பலப்படுத்திக் கொள்வது என்பன உறவினர்களது உதவிகளும் வழக்கு பிரச்சனைகளும் தனித்த நிலையும், எதிலும் நிம்மதிக் குறைவான நிலையும், உறவினர்கள் தலையீடுகள் பணத்தேடலில் அலைச்சல் என்பன மக நட்சத்திரருக்கு ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**கன்னி:**
தொழில் கஷ்டம், மாமன்மாமி வீட்டில் இருந்து மனக்கஷ்டமான விடயங்கள் வந்து போகும். மனஞ்சினந்த நிலையுடன் எடுத்த விடயங்கள் யாவும் சுணக்கமாக அமைவது அவ்வளவு நன்றல்ல. நோய்துன்பங்கள் வர முயற்சிக்கும். பொருட்களில் அவதானம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 25, 27.

**துலாம்:**
புதிய முயற்சிகள் தொழில் வள அபிவிருத்தியும் புதியவர்களை சந்திக்கும் வாய்ப்பும் திருமண முயற்சிகளும், பண வருவாய், விருந்து உபசாரங்களும், மனதிற்கு இனிய சம்பவங்களும் நடைபெற்று முடியும் வாரமாக அமையும். புதிய திட்டங்கள் தீட்டப்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : பலவர்ணம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 23, 28.

**விருட்சிகம்:**
முயற்சிகளில் நம்பிக்கை பகையாளிகளை வெற்றி கொள்வது, புதிய பொருட்கள் வந்து சேர்வது பொதுசன மதிப்பு பெறுவது, ஊக்க முயற்சிகள் கூடுவது, கல்வி, தொழில் சீர் பெற்று செல்வது பரீட்சைகளில் சிறப்பான வெற்றி மகிழ்வும் காணப்படும். கேட்டைகாரர்கள் நன்மையடைவர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

**தனுசு:**
கல்வி முயற்சிகள் சீராக நடைபெறும். உடல் நோய்கள் தீரப்பெறும். அலைச்சல் கரைச்சல்கள் காணப்படும். முதலீடுகளில் அவதானம் தேவை. சுபகரும முயற்சிகளும் திருமண முயற்சிகள் பெண்களுக்கு இவ்வாரம் வெற்றியைத் தர இருக்கின்றது. மூல நட்சத்திரகாரர் இருப்பிட மாற்றம் ஏற்படும் பலன உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 24, 26.

**மகரம்:**
வாகனங்களால் சிக்கல்கள் ஏற்படும். மன வெறுப்பான நிலை காணப்படும். நெடுநாள் எதிர்பார்த்த விடயங்கள் தோல்விகளை கொடுக்கலாம். பெண்களுக்கு பலவிதமான சிக்கல்கள் வெளிவட்டாரத்தால் குடும்ப முயற்சிகளில் மாற்றங்கள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : பிங்க்வர்ணம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 23, 28.

**கும்பம்:**
உடலில் நோய் துன்பமும் அந்நியரின் எதிர்ப்புக்களும் எதிர்பார்த்த உதவிகள், தடைகள் என்பன ஏற்படும் பலன் காணப்படுகின்றது. முயற்சிகள் பலன்களை கொடுக்காது. பிரயாண தடைகளும், மனதில் வெறுப்பு காணப்படும். வாரப் பகுதியில் பணஅமைப்பில் சிறு முன்னேற்றம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 25, 29.

**மீனம்:**
சனிகால மாற்றமும் வியாழபலமும் வெளியிடத்து உறவினர்களில் வருகையும் பண உதவிகளும் திருமண சுப விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்களும் காணப்படும். மாத இறுதியில் எடுக்கும் கருமம் நல்ல முடிவைத்தரும் உத்திரட்டாதி ரேவதிக்காரர்கள் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 23, 24.

## நில்-கவனி-முன்னேறு

முன்னேற்றப்பாதை என்பது மலர் விரித்த பாதையாக இருக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. வளர்ச்சிக்கான எந்தப் பாதையிலும் இடையூறுகள் எதிர்ப்படுவது இயற்கை. அதனால்தான் வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறவர்கள், போராடுகின்ற மனோபாவம் கொண்டவர்களாக இருப்பது அவசியம் ஆகிறது.

சிலர் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் ஏன் தடுமாறுகிறார்கள் தெரியுமா? எந்த ஒரு காரியத்தைச் செய்யும்போதும் தயக்கத்துடனே ஆரம்பிக்கிறார்கள். தீர்க்கமாக எண்ணாமல், அது நடக்குமோ, இது ஆகுமோ, நம்மால் முடியுமோ, என்றெல்லாம் யோசிப்பதிலேயே பெரும் பொழுதைச் செலவிட்டு விடுவார்கள்.



ஒரு காரியத்தைச் செய்யும் முன் தீர்க்கமாகச் சிந்திப்பது அவசியம்தான். ஆனால் சிந்திப்பதிலேயே பொழுதைப் போக்குவதால் எந்தப் பயனும் இல்லை. 'எண்ணித்துணிக கருமம்' என்றார் வள்ளுவர். நன்றாகச் சிந்தித்த பிறகே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதே வள்ளுவர் வாக்கு.

முன்னேற்றப்பாதை என்பதுசவால்கள் நிரம்பியதுதான். சவால்களை ஏற்று சமாளிக்க முடியும் என்கிற மனோதிடம் ஏற்படுகின்றபோதுதான் வெற்றிகளை நம்மால் குவிக்க முடியும்.

ஆகவே, நீங்கள் எந்த காரியத்தைச் செய்ய விரும்பினாலும் அல்லது எந்தக் காரியம் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டாலும், தயக்கமின்றி நம்பிக்கையுடன் அதில் ஈடுபட்டு உங்களுக்குள்ள முழுத்திறமையினை அதில் வெளிப்படுத்த முயற்சி செய்யுங்கள்.

சவால்களைச் சமாளிக்கும் மனத்திறனை வளர்த்துக் கொள்ளுவது மிகவும் அவசியமானதொன்று. தயக்கத்தை வெற்றி கொண்ட பிறகு முன்னேறிச் செல்கின்ற பாதையில் சிலருக்கு தடுமாற்றங்கள் தோன்றுவதுண்டு.

தடுமாற்றம் என்பது என்ன?

ஒரு பாதையில் நீங்கள் நடந்து செல்கின்றபோது இடறிவிழுந்து விடுகிறீர்கள். அப்போது என்ன செய்கிறீர்கள்? விழுந்த இடத்திலேயே நீங்கள் உட்கார்ந்து விடுவது இல்லை. அடிபட்டால் தடவிக் கொடுக்கிறீர்கள். ஒட்டிய மண்ணை தட்டி விடுகிறீர்கள். காயம் பட்டால் துடைத்துக் கொள்கிறீர்கள்.

பிறகு எழுந்து பாதையில் தொடர்ந்து நடக்கத் தொடங்குகிறீர்கள். வாழ்க்கைப் பாதையிலும் முன்னேறிச் செல்லும்போது நீங்கள் இதைத்தான் செய்ய வேண்டும். நமது முயற்சிகளில் தோல்வி ஏற்படுவது சகஜம். எதிர்பாராத கஷ்டங்களும் வரும். நாம் திட்டமிட்டபடி காரியங்கள் நடக்காமல் திசை திரும்பி விடலாம். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் நமக்கு தடுமாற்றம் தோன்றக் கூடாது. விழுந்து விட்டீர்கள் என்பது உண்மைதான். விழுந்த இடத்திலேயே உட்கார்ந்து விடப்போகிறீர்களா? எழுந்து நில்லுங்கள். உங்கள் பயணம் தொடரட்டும். விழுவது இயற்கை, விழுந்த பிறகு எழுவதும் இயற்கை. வீழ்ச்சிகள் நிரந்தரமானவை அல்ல. பூமியின் மேற்பரப்பில் மேடு, பள்ளங்கள் இல்லையா?

இயற்கையின் ஒரு பகுதியான வாழ்க்கையில் மட்டும் மேடு பள்ளங்கள் இருக்கக் கூடாது என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

மேடுபள்ளங்களைத் தாண்டிச் செல்வதில்தான் வாழ்க்கையின் வெற்றி இருக்கிறது. எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் முழுக்கவனத்துடன், அதே வேளையில் ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும்.

தயக்கம் என்னும் மயக்கம் என்றுமே கூடாது.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சரும அழகைப் பேண......

முகத்தை மட்டும் அழகு படுத்திக் கொண்டால் போதும். நாம் அழகாகி விடுவோம் என்று நினைக்கும் பெண்கள் சருமத்தைப் பாதுகாக்க மறந்துவிடுகிறார்கள்.



மொத்த உருவத்தையும் அழகு படுத்திக் காட்டுவதில் சருமத்துக்குத்தான் முக்கிய பங்கு உண்டு. ஆரோக்கியமான சருமம் இருந்து விட்டால், பெண்கள் எந்த வயதிலும் அழகாகத் தெரிவார்கள் (பாட்டியும் கூட) சருமப் பராமரிப்பை இளம் வயதினர்கள் அலட்சியம் செய்யும்போது, வயதான தோற்றம் சீக்கிரமே அவர்களுக்கு வந்து விடும்.

எந்த வயதிலும் அழகு வேண்டும் என்று நினைப்பவர்கள், இந்த டிப்ஸை பயன் படுத்துங்கள்:

- இரவில் படுக்கப்போவதற்கு முன், எந்த மேக்கப்பும் இல்லாதபடி முகத்தை நன்றாகக் கழுவி விடுங்கள்.
- இரவில் நன்றாக தூங்கினால்தான் அடுத்த நாள் சருமம் புத்துணர்ச்சி அடையும். ஓரிரவுத் தூக்கம் சரியாக இல்லையென்றால், ஒரு வாரத்திற்கு முகத்தில் அசதி தெரியும், அதனால் சருமம் பெருமளவு பாதிக்கப்படும்.
- உடலை சுத்தமாக வைத்திருப்பது முக்கியம். ஒரு நாளைக்கு இரண்டு தடவை குளிக்க வேண்டும். முகத்தை ஒரு நாளைக்கு நான்கு முறை கழுவும்போது, தூசிகள் முகத்தில் தங்காமல் முகம் பளிச்சென்று இருக்கும்.
- இயற்கையை ரசிக்கும்போது, மனம் புதுவித புத்துணர்ச்சி பெறுவதோடு, சருமமும் அந்தப் புத்துணர்ச்சியை அடைகிறது.
- முக மலர்ச்சிக்கு இப்பொழுதுள்ள லோசன்கள் ஓரளவிற்கு உதவி செய்கின்றன.
- செயற்கையான பராமரிப்பைவிட இயற்கையாக செய்யப்படும் பராமரிப்புத்தான் சருமத்திற்கு நிரந்தர அழகைத் தரும்.
- ஆரோக்கியமுள்ள உணவு, தூக்கம், உடற்பயிற்சி இருந்துவிட்டால், யாருடைய சருமமும் சீக்கிரம் சுருங்காமல் இளமையோடு இருக்கும்.

## பயனுள்ள வீட்டுக் குறிப்புக்கள்



முருங்கைக் கீரையுடன் வாழைப்பூவை சிறியதாக அரிந்து போட்டு நெய்விட்டு வதக்கி பொன்வறுவலானதும் இறக்கி, நான்கு நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர, குடல் புண் உடனே குணமாகும்.

வெண்டைக்காயை கொதிக்கும் நீரில் போட்டு அதனுடைய ஆவியை நுகர்ந்தால் தொண்டை வலி குணமாகும்.

கீழா நெல்லியின் வேரைப் பறித்துச் சுத்தம் செய்து வாயில் போட்டுக் கொண்டால் விக்கல் நிற்கும், அடிக்கடி ஏப்பமும் வராது.

சிறிது உளுத்தம்மாவுடன் எலுமிச்சம் பழச்சாறு கலந்து அந்தக் கலவையை தடவி வர கால்களில் ஏற்படும் சிரங்கு விரைவில் நீங்கும்.

வாழைக்காயை இஞ்சி, பூண்டு சேர்த்து சமையல் செய்து சாப்பிட்டு வர வாயுத் தொல்லை நீங்கும்.

துவரம் பருப்பை வேக வைத்து அத்துடன் அத்திக்காயைச் சேர்த்து சமையல் செய்து சாப்பிட்டுவர உடல் அரிப்பு குணமாகும்.

மரிக்கொழுந்து இலையையும், நிலாவரை இலையையும் சம அளவு எடுத்து மைய அரைத்து தலைக்கு தடவி சிறிது நேரம் கழித்து குளித்து வந்தால், சிறிது நாட்களில் செம்பட்டை முடி நிறம் மாறி கருமை நிறம் அடையும்.

தினசரி காலை எழுந்ததும் பல் துலக்கிய பின் இரண்டு பச்சை வெங்காயத்தைச் சாறு பிழிந்து, அத்துடன் ஒரு கரண்டி தேன் கலந்து குடித்தால் பக்கவாத நோய் குணமாகும்.

மாதுளம் பழத்தின் சாறு கால் டம்ளர் குடித்து வந்தால் வயிற்று வலி, சளி உள்ளவர்கள் இரண்டே நாளில் குணமாவர்.

கஸ்தூரி மஞ்சளுடன் சிறிது சாம்பிராணி, முக்கால் கரண்டி கடுகு இம்மூன்றையும் நீர் விட்டு மைய அரைத்து சட்டியில் சுட வைத்து, பக்குவத்துடன் முட்டுவலி உள்ள இடங்களில் தடவி வர, உடன் பலன் கிடைக்கும்.

ஆஸ்துமா நோய் கண்டவர்கள் தினசரி படுக்கச் செல்லும் முன் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து அதனுடன் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட்டு வர சிறிது நாட்களில் குணமாகும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GY

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-01-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞ செல்வி நா. சுதர்சனா, 155, லக்ஸபானா வீதி, தோணிக்கல், வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது புவனா 22

மோனிக்கா வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்ததிலிருந்து எதிர்பார்த்து- சற்று ஏங்கித் தவித்த அந்த நேரம் வந்து விட்டதை உணர்ந்தாள். உள்ளூர பெரும் மகிழ்ச்சி பொங்கி எழுந்தாலும் சற்றுப் பதற்றமும் அடைந்தாள்.

அரச நிர்வாக இயந்திரத்துக்கான செலவீனங்களைப் பெருமளவு குறைக்க வேண்டும் என்று அமெரிக்கக் காங்கிரஸ் சட்டம் இயற்றவிருந்தது. இதனால் வெள்ளை மாளிகையில் உயர் மட்ட அதிகாரிகள் மத்தியில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றவண்ணம் இருந்தன.

அன்றைய தினம் வெள்ளை மாளிகை உயர் அதிகாரிகளுடன் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வானொலியில் ஒலிபரப்பும் வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வெளியிலிருந்து சரமாரியான கேள்விகள் வந்து கொண்டிருந்தன. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவே ஸ்ரீ.:.பன் பௌலோஸ் சென்றிருந்தார். அவருடைய அலுவலகத்திலிருந்த வண்ணம், அங்கிருந்த வானொலியில் நிகழ்ச்சியை கிளின்ரன் தனிமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்த அறைக்குள் மோனிக்கா வருவதைக் கண்டதும் அவளைத் தன் அருகே வருமாறு கேட்டுக் கொண்டார். மோனிக்கா, இந்த உலகத்தில் மிகமிக உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் ஒரு மனிதரின் முன் அப்போது நின்றாள். இது கனவாகத்தான் இருக்குமோ என்று கூட அவள் ஒரு தடவை எண்ணினாள்.



மோனிக்காவின் வலது கையை கிளின்ரன் பற்றினார். அவர் அவளுடைய கைக்குக் கொடுத்த அழுத்தம் சற்று வலிமையானதாகவே இருந்தது. அதில் கிடைத்த வேதனை அவளுக்கு மகிழ்ச்சியையும் கிளுகிளுப்பையும் தான் ஊட்டியது. அவளுடைய குடும்பம், பெற்றார், உறவினர், படித்த பள்ளிக்கூடம் மட்டுமல்லாமல், அவளுடைய விருப்பு வெறுப்புகளையும் பற்றி ஆதரவோடு கேட்டார்.

### துணிகரமான வார்த்தை

மோனிக்கா கிளின்ரனிடம் அவ்வேளையில் சொன்ன ஒரு வாசகம் உண்மையில் வேறு எப்பெண்ணாலும் அந்த நிலையில் சொல்ல முடியுமா, என்று கற்பனை பண்ணவே முடியாது. ஏனெனில் கிளின்ரன் ஒரு விளையாட்டுப் பிள்ளை இல்லை. அமெரிக்கா என்ற அந்தப் பெரிய ஜனநாயக நாட்டின் முதல்வர்; உலகில் மிகவும் செல்வாக்குப் பெற்ற ஒருவர்.

அவர் காதல் விளையாட்டில் களித்து விளையாடும் கட்டிளங் காளையல்ல; ஒரு நடுத்தர வயதான- ஒரு வளர்ந்த பெண்ணின்- தந்தை. அவருக்குப் பொருத்தமான ஒரு பெண்ணின் கணவர்.

இத்தகைய ஒருத்தரிடம், அவரின் கீழ் பணிபுரிய, சில மாதங்களுக்கு முன்னர்தான் சேர்ந்த- வாழ்க்கை அனுபவமேதுமில்லாத அப்போதுதான் கல்லூரிப்படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறியுள்ள மோனிக்கா, "உங்கள் மீது தீராத ஆசைகொண்டுள்ளேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டு விட்டாள்.

தனக்கு இத்தகைய துணிவு எவ்வாறு ஏற்பட்டது என்பதை பின்னர் மோனிக்கா திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்துப் பிரமித்தாள். 'இவ்வாறான ஒரு வாசகத்தை மோனிக்கா கூறியிருப்பாளா?' என்று அவளுடைய சினேகிதிகள் பலர் வாதப் பிரதிவாதங்களை பின்னர் நடத்தியுள்ளனர். இச்சம்பவத்தையிட்டு மோனிக்கா தனது சினேகிதிகள் பலரிடம் கூறியிருக்கிறாள்.

கிளின்ரன்-மோனிக்கா காதல் விவகாரம், பகிரங்கமாக விசாரணைக்குட் படுத்தப்பட்டபோது, செய்தி ஊடகங்களின் பேட்டிகளின் போதும் இதனை அப்படியே கூறியிருக்கிறாள்.

கிளின்ரன் சிரித்தார். சிறிதும் நேரம் எதுவும் பேசாமல் மோனிக்காவையே பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் "எனது அலுவலகத்தின் பின்புற வாயிலுக்கு வா!" என்றார். அவர் அங்கிருந்து அவருடைய அலுவலகத்துக்கு முன்புறமாகச் சென்றார். பின்புறவாயிலருகில் மோனிக்கா சென்றதும் கிளின்ரன் சிரித்தபடி, அவளுடைய இடையைத்தனது இடது கரத்தால் தழுவியபடி அவளை உள்ளிழுத்தார்.

அன்று நடைபெற்ற சம்பவங்களை பின்னர் மோனிக்கா இவ்வாறு வர்ணித்தார். "முதலில் என்னை உள்ளே இழுக்கும்போது எனது இடையை மெதுவாகவே அவருடைய வலது கை அழுத்தியிருந்தது. உள்ளே சென்றதும் தனது கையை விலக்கிக் கொண்டார். என்முன் புறமாக-என்னுடைய கண்களை உற்றுப் பார்த்த வண்ணம் மிக நெருக்கமாக நின்றிருந் தார். நான் கற்பனை செய்திருந்ததை விடவும் வித்தியாசமானவராகவே அவர் அப்போது எனக்குத் தென்பட்டார்.

### சோகம் படர்ந்த முகம்

மிகவும் மென்மையான சுபாவமுடையவராக ஒரு பூந்தளிரின் தன்மையில் கானப்பட்டார். காதல் வேட்கை கொப்பளிக்கும் அவருடைய கண்கள் எனது முகத்திலிருந்து கீழிறங்கி, எனது பாதம் வரை ஸ்பரிசித்தன.



ஏதோ ஒன்றை அவர் என்னிடம் தேடுகிறார் போல் இருந்தது. ஆனால் நான் சற்றும் எதிர்பாராத ஒரு சோகம் அவருடைய கண்களில் தேங்கி நிற்பதை என்னால் அவதானிக்க முடிந்தது.

அமெரிக்க நாட்டின் அதிபர், மிக ஆடம்பரமான ஒரு மாமனிதர் இதோ என் முன்னே, ஏதோ ஒருவகை ஏக்கத்துடன் என்முன் நிற்கிறார். அவருடைய இரு கைகளும் எனது முகத்தைத் தடவின. கழுத்து வரை கைகள் ஊர்ந்தன. அப்படியே என்னை இழுத்து எனது உதடுகளைத் தனதுடமையாக்கிக் கொண்டார். சில நொடிகள் மட்டும்தான். பின்னர் பிடியைத் தளர்த்திக் கொண்டார். நான் துணுக்குற்றேன். ஏதாவது தவறுகளை என்னிடம் கண்டு கொண்டாரோ என்று ஒரு நொடியில் கருதினேன்.

மீண்டும் என்னைத் தழுவிய வண்ணம் அங்கிருந்த ஒரு சோபாவில் என்னை அமர்த்தினார். அருகிலேயே அமர்ந்து கொண்டார். எனது பள்ளிப்படிப்பு, பாடசாலை நாட்களின் காதல் விளையாட்டுக்கள் ஆகிய பல விடயங்களையிட்டு இருவரும் உரையாடினோம்.

### கனவா நனவா?

"நீ மிகவும் அழகாகப் பிரகாசிக்கிறாய்! இந்த மண்டபமே உனது அழகின் ஒளி பட்டு மேலும் பிரகாசமாகிவிட்டது," என்றார். இந்த வார்த்தையை அவர் கூறும்போது எனது எண்ணத்தில் ஒரு சலனம் ஏற்பட்டது, 'இதே வார்த்தையை இவர் முன்னர் எத்தனை பெண்களிடம் கூறியிருப்பாரோ?' என்றுதான் எண்ணினேன். இருப்பினும் அது எனக்கு ஒரு குற்றமாகவே தென்படவில்லை.



முதலில் என்னிடம் அனுமதி கேட்காமலே என்னை முத்தமிட்டவர், இப்போது "உன்னை நான் முத்தமிட அனுமதிப்பாயா?" என்று ஏனோ கேட்டார். நான் எதுவும் பதிலிறுக்காமல் அவர் கோரிக்கையை நிறைவேற்ற ஆயத்தமானேன்.

## நினைத்தது நடந்தது

அவர் எனக்குப் பதித்த முத்தம் எத்தனை நிமிடங்கள் நீடித்ததோ தெரியாது. அவ்வளவு நேரமும் நான் சொர்க்கலோகத்தில் சஞ்சரித்தேன். திடீரென்று எனது உணர்வுகள் மீண்டன. 'நான் கனவு காண்கிறேனா?' என்னை முத்தமிடுபவர் யார்? உண்மையில் இவர் அமெரிக்க நாட்டின் அதிபர் கிளின்ரன் தானா? இத்தகைய உணர்ச்சிகரமான முத்தத்தைப் பதிக்க இவர் எந்த உலகிலிருந்து இங்கு வந்தார்?' இவ் வாறான அர்த்தமற்ற வினாக்கள் ஒன்றன் பின் ஒன்றாக அலைகளாக என் உள்ளத்துள் எழுந்து மோதின.


நான் என்னையே இழந்திருந்த அந்த வேளையில் அவர் என்னுடைய தலையைக் கோதிவிட்டார். நான் இன்னும் சுய நினைவுக்கு வராதிருப்பதாக நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை. எனது இரு கன்னங்களையும் தனது கைகளால் மெதுவாகத் தட்டினார். கண்களைத் திறந்து அவருடைய முகத்தைப் பார்த்தேன். அங்கே ஒருவகைக் குற்ற உணர்வு படிந்திருப்பதைக் கண்டேன்.

நான் ஒன்றுமே அறியாத ஒரு சிறுபெண் என்று அவர் நினைத்து வருந்துகிறாரோ என்று தோன்றியது. அவரை அந்தநிலையில் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவரைத் தேற்ற வேண்டும் என்று தோன்றியது. "நான் ஏற்கனவே மணமான ஒருவருடைய அன்புக்குப் பாத்திரமாகியிருந்தவள்தான்!" என்பதைப் பக்குவமாக எடுத்துரைத்தேன். இதனால் அவரும் ஓரளவு தெளிவடைந்தார் என்பதனையும் கண்டேன்."

இவ்வாறு உண்மையை கிளின்ரனிடம் கூறியமையினால் அவர் தன்னோடு மேலும் மேலும் தயக்கமில்லாமல் உறவாடுவார். அவருடன் காதல் லீலைகளில் ஈடுபாடு கொள்ளும் வேறு எந்தப் பெண்மீதும் வைக்காத அளவு நம்பிக்கையை, கிளின்ரன் தன்மீதும் வைப்பார் என்று கருதியமையினாலேயே மோனிக்கா தன்னைப் பற்றிய உண்மையை அவரிடம் எடுத்துக் கூறினாள்.

இரவு மணி 10.00 ஆகிவிட்டிருந்தது. மணிக்கூட்டைப் பார்த்த கிளின்ரன், சட்டென எழுந்தார். அவசரமான ஒரு பணி இருப்பதாகக் கூறி, "வேறொரு பகுதிக்குச் செல்லக் கிளம்பினார். ஒரு சில நிமிடங்கள் தாமதித்து ஜோர்ஜின் அலுவலகத்துக்கு வருவாயானால் இன்னும் சற்றுநேரம் இருவரும் தனித்திருக்கலாம்!" என்றார். ஒரு புன்சிரிப்புடன் அவள் சம்மதித்தாள்.

(வருவாள்)



# பாப்பா முரசு சிறுகதை

# பலே திருடன் பாண்டியன்



நல்லூர் என்ற ஊரில் பலே திருடன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் பாண்டியன்.

கண்ணில் எதைக் கண்டாலும் திருடிக் கொண்டு ஓடி விடுவான்.

ஆடு, மாடு, கோழி, கொடியில் காயப் போட்டிருக்கும் துணிகள், அண்டா, குண்டா என்று எதையும் விட்டு வைக்கமாட்டான்.

திருடிக் கொண்டு போன பொருட்களை அடுத்த ஊருக்குச்சென்று விற்று விட்டு, அதில் கிடைக்கும் சொற்ப பணத்தைக் கொண்டு உல்லாசமாக இருப்பான்.

இதுநாள் வரை அவன் யாரிடமும் அகப்பட்டதில்லை. திருடும்போது திறமையை மட்டுமல்ல, புத்திசாலித்தனத்தையும் பயன்படுத்துவான். அதனால்தான் யாரிடமும் மாட்டாமல் இதுநாள் வரை தப்பித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள்-

வீரசிங்கம் என்ற செல்வந்தருக்குச் சொந்தமான தென்னந்தோப்பின் வழியாக, அவன் நடந்து சென்று கொண்டிருந்தான்.

அன்றும் எங்கு திருடலாம், எப்படித் திருடலாம் என்று சிந்தித்தபடியே சென்றான்.

அப்போது-

ஒரு காய்ந்த தென்னை மட்டை மரத்திலிருந்து பெயர்ந்து பெருத்த ஓசையுடன் அவன் முன்னே விழுந்தது.

பாண்டியன் 'சட்'டென்று நின்று மேலே பார்த்தான். தென்னை மரத்தில் குலை குலையாய் தேங்காய்களும், இளநீர் காய்களும் இருந்தன.

அவன் யோசித்தான்.

'ஏன் அங்கு இங்கு அலைந்து கொண்டு. இன்று இந்தத் தேங்காய்களில் கை வைப்போம்!' என்ற முடிவுக்கு வந்தான்.

சுற்றும் முற்றும் வழக்கமான திருட்டுப் பார்வை பார்த்தான்.

யாரும் தோப்பில் இல்லை என்று தெரிந்ததும், விறுவிறு வென்று தென்னை மரத்தில் ஏறினான். பாதி மரத்தை அவன் அடைந்தபோது சற்றும் எதிர்பாராத விதமாக, அங்கே வீரசிங்கம் வந்தார்.

தடித்த உடல், முறுக்கு மீசை, பார்ப்போரை பயங்கொள்ள வைக்கும் தோற்றம் வீரசிங்கத்திற்கு.

தனது சிவந்த கண்களால் மேலே பார்த்து, "யாரடா அவன் திருட்டுப் பயல்?" என்று குரல் கொடுத்தார். கையில் கனத்த தடி ஒன்றையும் வைத்திருந்தார்.

திடீரென்று கீழிருந்து சத்தம் கேட்டதும் வெலவெலத்துப் போன பாண்டியன், மரத்திலிருந்தவாறே கீழே பார்த்தான்.

வீரசிங்கம் நிற்பதைப் பார்த்ததும் விறுவிறு வென்று கீழே இறங்கினான்.

"யாரடா நீ? திருட்டுப் பயல்?"

"ஐயா! நான் திருடனில்லை. அருகம்புல் எடுக்க வந்தேன்!"

"அருகம்புல் எடுக்க வந்தவன் வயல் வரப்புப் பக்கம் போக வேண்டியது தானே. தென்னை மரத்தில் உனக்கென்னடா வேலை?"

"தென்னை மரத்தில் இருக்கிறதா என்று பார்த்தேன். இல்லை. நான் இறங்கும் நேரத்தில் நீங்கள் வந்து விட்டீர்கள். இறங்கிவிட்டேன். வயல் வரப்பு பக்கமே போய் பார்க்கிறேன்!" என்று கூறி விட்டு நடையைக் கட்டினான் பாண்டியன்.

வீரசிங்கம் திகைத்து அப்படியே நின்றார்.

கையும் களவுமாகப் பிடிபட்டும் எத்தனை சாமர்த்தியமாக பாண்டியன் தப்பி விட்டான் பார்த்தீர்களா? கெட்ட காரியங்களிலிருந்து தப்பிக்கவும் புத்திசாலித்தனம் தேவை என்பதை இக்கதை உணர்த்துகிறதல்லவா?

# வழிகாட்டுங்கள்




தங்கப் புதையலைத் தேடி வரும் இந்த மனிதனுக்கு வழிகாட்டுங்கள்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.01.2000.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 328**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 326

**பரிசுக்குரியவர்:**
க.சந்திரகுமார்,
வ/பெரிய கோமரசன்குளம் வித்தியாலயம், வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| என்.எம்.முஸ்தாக் அஹமட், மட்/அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர். | யூ.தஸ்ரீக், அல் அஸ்ரக் மு.வி, மணல் குன்று, புத்தளம். |
| மாயழகு சகுந்தலா, பாரதி ம.வி., பதுளை. | எஸ்.பி.ராஜு, பரி.தோமா கனிஷ்ட பாடசாலை, கொள்ளுப்பிட்டி. |
| ஏ.சித்திபாயிசா, கமு/அஸ்ஸமா வித்தியாலயம், சம்மாந்துறை. | சம்சுல் மக்கியா சாலி, முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி. |
| கே.ஜெகதீஸ்வரன், முகத்துவாரம் இந்துக்கல்லூரி, கொழும்பு-15. | த.விதுரன், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| அ.கஜன், புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. | மு.க.நுஸ்பா ஸனிபாரா, த/ஷாபி-நகர் வித்தியாலயம், மூதூர். |

# செய்து பாருங்கள்

**கைரேகை படம்**

கைரேகை மூலம் அழகான படங்கள் வரைவோமா?

1. பச்சை அல்லது நீல நிற இங்க் பேட்டில் உங்கள் பெருவிரலை நனைத்துக் கொள்ளுங்கள்.
2. வெள்ளைத்தாளில் விரலை அழுத்துங்கள்.
3. கொஞ்ச நேரம் காய விடுங்கள்.
4. இப்போது படத்தில் இருப்பது போன்று மீன், மூட்டைப்பூச்சி, வண்ணாத்துப் பூச்சி, தவளை போன்றவற்றை வரையுங்கள்.
5. இப்படி வரைந்து வாழ்த்து அட்டைகள் கூடத்தயாரிக்கலாம்.




# விடுகதைகளும் விடைகளும்

1. சிறகில்லாப் பறவை ஊர் ஊராய் பறக்குது. அது என்ன?
2. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை. அது என்ன?
3. ஊசி நுழையாத கிணற்றில் ஒரு படி தண்ணீர். அது என்ன?
4. நெட்டி இல்லாத வட்ட இலை. அது என்ன?
5. சுமையும் தாங்கும் உதையும் கொடுக்கும். அது என்ன?
6. தண்ணீர் இல்லாமல் வளரும், தரை இல்லாமல் படரும். அது என்ன?

## விடைகள்

1. தபால் 2. அடுப்பு
3. இளநீர் 4. அப்பளம்
5. கழுதை 6. தலைமுடி

# நிமோனியா அரிலோனாரியா



அமெரிக்காவில் உள்ள ஓக் மரங்களில் ஒரு அங்குல அளவில் உள்ள புழுக்களின் பெயர்தான் நிமோனியா அரிலோனாரியா. இது கம்பளிப் பூச்சிகள் போன்று காணப்படும்.

வசந்த காலத்தில் இவை குஞ்சு பொரிக்கும். அப்போது ஓக் மரங்கள் பூத்துக் குலுங்கும். ஓக் மரத்தின் பூக்களைச் சாப்பிடும் இந்தப் புழுக்கள், ஓக் மரப்பூக்கள் போன்றே காணப்படும்.

இரண்டாம் தடவை இவை குஞ்சு பொரிக்கும்போது ஓக் மரத்தில் பூக்கள் இருக்காது. இம்முறை அவை ஓக் மரத்தின் இலை, இலைக் காம்புகளைச் சாப்பிட்டு விட்டு அதனுடன் ஒட்டிக் கிடக்கும். அப்போது இவற்றைப் பார்க்கும்போது ஓக் மரத்தின் இலை, மற்றும் இலைக் காம்புகள் போன்று காணப்படும்.

கிடைப்பதைச் சாப்பிட்டு விட்டு அவற்றைப் போன்ற காட்சி தருவதில் இந்தப் புழுக்கள் கெட்டிக்காரர்கள்.

# எப்படித் தெரியுமா?



கடற்கரையை ஒட்டிய இடங்களுக்குப் போகும்போது நீங்கள் சங்குகளைப் பார்த்திருப்பீர்கள் தானே?

ஒரு சங்கை எடுத்து காதில் வைத்துக் கேட்டால் 'உஸ்' என்று ஒரு சத்தம் வரும். அது எப்படி என்று தெரியுமா?

சங்கின் உட்புறம் காற்று இருக்கிறதல்லவா? அது அசைவற்று இருக்கும். ஆனால், வெளியில் காற்றில் பரவி இருக்கும் ஒலி அலைகள் சங்குக்கு உள்ளே இருக்கும் காற்றைச் சலனப்படுத்தும். இந்தச் சலனங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒலி அலையாகி 'உஸ்' என்ற சத்தத்தை ஏற்படுத்தும்.

நீங்கள் சங்கை எல்லாம் கூடத் தேடிப் போக வேண்டியதில்லை. வீட்டில் இருக்கும் பெரிய டம்ளரை காதில் வைத்துப் பாருங்கள் 'உஸ்' என மெதுவாகச் சத்தம் கேட்கும்.

## திக் திக் தொடர்

**தாடி** கையோடு வந்துவிட, முரளி மெல்லச் சிரித்தான்.

"இனிமேலாவது நான் உள்ளே வரலாமா?"

பெரியவர் வேஷத்தில் இருந்த இளைஞன் புன்னகைத்தான்.

"உள்ளே வா..."

வந்தான்.

"பைரவி எங்கே...?"

"வா... உள்ளே போய் பேசிக்கலாம்..."

போனார்கள்.

முரளி கேட்டான்,

"பைரவிக்கு எந்த ஆபத்தும் இல்லையே?"

"நீயே வந்து பார்..."

மூன்று அறைகளைக் கடந்து, உள்ளே போய் கதவு சார்த்தப்பட்டிருந்த அறைக்கு முன்பாய் நின்றார்கள். வேஷம் போட்டவன் கதவைத் தள்ள முரளி அறைக்குள் பார்வையைக் கொண்டு போனான்.

பைரவி ஒரு கட்டிலில் கண் மூடிப் படுத்துக் கிடந்தாள். நெற்றியில் ஒரு பேண்டேஜ் கட்டு.

முரளி ஓடிப்போய் பைரவிக்குப் பக்கத்தில் பதட்டமாய் குனிந்தான்

"பைரவி..."

அவள் சலனமற்றுத் தெரிந்தாள்.

"பைரவி..."

"முரளி! அவளை டிஸ்டர்ப் பண்ணாதே..."

கோபமாய்த் திரும்பினான் முரளி. அந்த இளைஞனின் தோள்களை இறுக்கமாய்ப் பற்றினான்.

"சொல்லு! பைரவிக்கு என்னாச்சு...?"

"சொல்றேன் அதுக்கு முந்தி இந்தக் கேள்விக்குப் பதில் செல்லு... பைரவியோட இடுப்புக்கு வெடி குண்டு பெல்ட்டை மாட்டி விட்டது நீதானே...?"

"............"

"சொல்லு...! நீதானே...?"

"ஆமா..."

"ஒரு பெண்ணை மனித வெடி குண்டா மாத்துறது சட்டப்படி எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா...?"

"சட்டத்தைப் பத்தி எனக்கு கவலை இல்லை..."

"எனக்கு கவலை இருக்கே..."

"நீ... நீ... யாரு...?"

"கொஞ்சம் திரும்பிப் பாரு..."


முரளி திரும்பிப் பார்த்தான்.

# 10 சிகப்பு வணக்கம்

வாசலில்
போலீஸ்!

................

முரளி திகைத்து, சுவாசிக்கத் திணறிக் கொண்டிருக்கும் போதே அந்த இளைஞன் சிரித்துக்கொண்டே, தன் சட்டைப் பைக்குள் கையைவிட்டு உத்தியோக அட்டையை எடுத்துக் காட்டினான்.



"நான் ஜவஹர். க்யூ ப்ராஞ்ச் இன்ஸ்பெக்டர். உன்னை மாதிரியான ஆட்களைப் பிடிக்கறதுக்காகவே எனக்கு கவர்ன்மெண்ட்ல யூனிஃபார்மையும் கொடுத்து மாசா மாசம் நல்ல சம்பளமும் கொடுத்துட்டு வர்றாங்க...."

முரளி வியர்த்து வழிந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்க்க, ஜவஹர் ஒரு புன்னகையோடு தொடர்ந்தான்.

"கிரிக்கெட் ப்ளேயர்களுக்கு ஆபத்து இருக்குன்னு ஸ்பை ஸ்க்வாடிலிருந்து எங்களுக்குத் தகவல் வந்ததுமே நாங்க உசாராகிட்டோம். ஒரு விங் ஃபார்ம் பண்ணி ஏர்போர்ட்டில் பரவி, எல்லாரையும் வாட்ச் பண்ண ஆரம்பிச்சோம்.

பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் ரெஸ்ட்லஸ்ஸாக நின்னுட்டிருந்த பைரவியை, யார்க்கும் சந்தேகம் உண்டாகாத முறையில் அதிரடியாய் மடக்கி, ஒரு அறைக்குக் கொண்டு போய் சோதனை போட்டோம். மனித வெடிகுண்டு விஷயம் வெளியே வந்தது.

ஆனா பைரவி உங்க கூட்டத்தைக் காட்டிக் கொடுக்க மறுத்துட்டா. எப்படியெல்லாமோ கேட்டும் அவ பதில் சொல்லாமப் போகவே, கடைசியில் 'டுரூ டெல்லர்' என்கிற கெமிக்கல் இஞ்ஜெக்ஷன் ஒண்ணப் போட்டோம். அப்படியும் அவ வாயிலிருந்து உண்மை வரலை. ஒரு டெலிபோன் நெம்பர் மட்டும் கிடைச்சுது. போன் பண்ணினோம். நீ வந்து லைனில் மாட்டிகிட்டே...."

ஜவஹர் சொல்லிக்கொண்டே முரளியின் தோள் மேல் தன் இரண்டு கைகளையும் வைத்து அழுத்தினான்.

"இதோ பார் முரளி...! உனக்கு கிரிகெட் மேல என்ன கோபம்...?"

"கோபம் கிரிக்கெட் மேல இல்லை...."

"பின்னே..."

"கிரிக்கெட் ப்ளேயர்ஸ் மேல....."

"அதான் ஏன் கோபம்ன்னு கேட்கிறேன்...."

"இந்த தேசம் உண்மையான உழைப்பாளிகளுக்கும், தன்னலம் கருதாத தலைவர்களுக்கும் உரிய மரியாதையைக் கொடுக்காமே, கிரிக்கெட் விளையாடும் சோம்பேறிகளுக்கு மரியாதை கொடுத்து, அவங்களை உச்சாணிக் கொம்புல ஏத்தி வெச்சுத் துதி பாடறது எனக்கு... ஸாரி... என்னோட இயக்கத்துக்கு சுத்தமா பிடிக்கலை. அதான் அத்தனை பிளேயர்ஸையும் கூண்டோடு தீர்த்துக்கட்ட முடிவு பண்ணினோம். நாங்க நினைச்சது இன்னிக்கு நடக்காமே போகலாம். ஆனா என்னிக்காவது ஒரு நாள் நடந்தேதீரும்...."

"உங்க கோபமெல்லாம் கிரிக்கெட் ப்ளேயர்ஸ் மேல்தானே...?

"ஆமா...."

"பின்னே ஏன் கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யாவை செல்போன் டைனமைட் மூலமாகத் தீர்த்துக் கட்டணும்...? அவர்மேல உங்களுக்கு என்ன கோபம்.....?

முரளி இப்போது திகைத்தான்.

"கிரிக்கெட் போர்டு சேர்டன் ஆச்சார்யா டைனமைட் மூலம் கொலை செய்யப் பட்டாரா...?

ஜவஹர் புன்னகைத்தான்.

"பண்றதயும் பண்ணிட்டு இப்ப தெரியாத் தனமா பாவ்லா பண்ற கொஞ்சம் கூட சரியில்லை..."

முரளி தோள்களைக் குலுக்கி கொண்டான்.

"எனக்கு பொய் சொல்லவோ பாவ்லா பண்ணவோ தெரியாது. எங்க இயக்கத்தோட குறி, கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா கிடையாது. மட்டையைப் பிடிச்சு லட்சக் கணக்கில் பணம் சம்பாதிக்கிற அந்த பதினோரு கிரிகெட் ப்ளேயர்ஸ்தான்....

ஜவஹர் இப்போது திகைத்து மற்ற பொலீஸ் அதிகாரிகளைப் பார்க்க அவர்கள் முரளியை நெருங்கினார்கள். "உண்மையைச் சொல்லிட்டா உனக்கு நாங்க தர்ற மரியாதை நல்லவிதமாக இருக்கும். இல்லேன்னா வேற விதமா இருக்கும். செல்லு ... ஆச்சார்யவைத் தீர்த்துக் கட்டினது நீதானே....?"

முரளி சிரித்தான். "அப்படி நான் தீர்த்துக்கட்டியிருந்தா, அதைச் சத்தம் போட்டு சந்தோஷமா நான் சொல்லியிருப்பேன். என்னைப் பொறுத்த வரைக்கும் ஒரு நல்ல காரியம் நடந்திருக்கு. அதைப் பண்ணின மகானுபாவனுக்கு என்னோட வணக்கம்....!

"உன்னை போலிஸ் லாக்கப்புக்குக் கொண்டு போற வரைக்கும் நீ இப்படித்தான்


க்ரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்


பேசிக்கிட்டு இருப்பே... உண்மையைச் சொல்லாமே அடம் பிடிச்சாலும் இப்போ போலீஸ் பிடிக்குள்ளே மாட்டியிருக்கிற உன்னோட சகாக்கள் கிட்டயிருந்து உண்மையை வாங்கிடுவோம்...."

முரளியிடம் இபோது பயம் விலகிப் போயிருக்க, அவன் ஒரு சந்தோஷ சிரிப்புச் சிரித்தான்.

"நானும் என்னோட சகாக்களும் போலீஸ்ல மாட்டிகிட்டதைப் பத்தி எங்களுக்குக் கொஞ்சம் கூட கவலை இல்லை. கிடைக்கப் போற தண்டனையைப் பற்றியும் பயமே இல்லை. ஏன்னா, எங்க உயிரை நாங்க என்னிக்குமே பெரிசா நினைச்சது இல்லை. இந்தத் தலை ரோமத்துக்குச் சமமாத்தான் எங்க உயரை மதிச்சு இருக்கோம்....."

ஜவாஹர் யோசனையாய் மோவாயை தடவியபடி முரளியைப் பார்த்தான்.

'இவன் பொய் பேசுகிற மாதிரி புரியவில்லை!'

'கிரிக்கெட் ப்ளேயர்களைத் தீர்த்துக் கட்ட முரளியின் இயக்கம் முனைப்பாய் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போதே, வேறு ஒரு க்ரூப் கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யாவைக் குறி வைத்துக் காரியத்தை முடித்திருக்கிறது. இந்த நூலின் முனையை விட்டுவிட்டு இனி வேறு ஒரு முனையைப் பிடிக்க வேண்டும். அந்த முனையை எப்படிப் பிடிப்பது....?

ஜவஹரிடமிருந்து உஷ்ணமாய் ஒரு பெருமூச்சு வெளியாயிற்று.

☆☆☆

இன்ஸ்பெக்டர் ராகவேந்திரன் தன் கண்களுக்கு ஒரு லேசர் உன்னிப்பைக் கொடுத்து, பார்வையை மாடிப் படிகளின் உச்சிக்கு அனுப்பினார்.

வீட்டுக்குள் பரவியிருந்த மசமசப்பான அரையிருட்டில், மாடிப்படியில் அந்த சிவப்புப் புள்ளி மின்னியது. லேசாய் அணைந்து மறுபடியும் மின்னியது.

ராகவேந்திரனுக்கு சட்டென்று பிடிபட்டது. அது அணைக்கப்படாத ஒரு சிகரெட்.

வேலைக்காரனிடம் திரும்பினார்.

"வேலுச்சாமி..."

"அய்யா..."

"வீட்டுக்குள்ளே யாரும் இல்லேன்னு தானே சொன்னே!"

"ஆமாங்கய்யா!"

"யாரோ வீட்டுக்குள்ளே இருக்காங்க போலிருக்கே?"

"அது எப்படிங்கய்யா இருப்பாங்க? வீடுதான் பூட்டிக் கிடக்கே?"

"பூட்டின வீட்டுக்குள்ளே அணையப் படாத ஒரு சிகரெட் துண்டு கிடக்கே...அது எப்படி....? மாடிப்படி உச்சியில் பாரு... பாதி சிகரெட் உயிரோட இருந்து முழிச்சு முழிச்சுப் பார்க்குது..."

வேலுச்சாமி பதட்டத்தோடு பார்வையை அனுப்பி, உள்ளே பார்த்து விட்டு, நெற்றியில் மின்னும் வியர்வையோடு ராகவேந்திரனை ஏறிட்டான்.

"அ...ய்...யா.."

"இப்ப... என்ன சொல்ற...?

"உள்ளே யாரோ வந்திருக்காங்க போலிருக்கய்யா ..."

"எப்படி வரமுடியும்?"

"சன் ஷேட்ல ஏறி மொட்டை மாடிக்குப் போய், மாடியிலிருந்து உள்ளே போயிருக் காங்கன்னு நினைக்கிறேன்..."

"எந்த சன் ஷேட்ன்னு வந்து காட்டு..."

வேலுச்சாமி பங்களாவுக்குப் பின் பக்கமாகக் கூட்டிக்கொண்டு போய், ஒரு கொய்யா மரத்தையொட்டி, இடது பக்கமாய் நீட்டிக் கொண்டிருந்த சன் ஷேடைக் காட்டினான்.

"அய்யா.. இந்த சன் ஷேட் வழியாகத்தான் உள்ளே யாராவது போயிருக்கணும்... ஏன்னா இந்த சன்ஷேட் ஒண்ணுதான் மரத்ததுக்குப் பக்கத்துல இருக்கு.."

ராகேவந்தின் தன் ஷூக்க ளைக் கழற்றி ஒரு ஓரமாய் வைத்துவிட்டு, மரத்தில் ஏறி, சன் ஷேடில் கால் வைத்து பேராபட் சுவரில் தொற்றி ஏறி, மொட்டை மாடியில் குதித்தார்.

விஸ்தாரமான மொட்டை மாடியில் வேண்டாத சாமான்கள் இறைந்து கிடக்க, க்ரில் கம்பிகளோடு கூடிய கதவை நோக்கி போனார்.

கதவை நெருங்கியவர்க்கு லேசாய் அதிர்ச்சி. பூட்டு கழன்று கீழே விழுந்திருந்தது.

எடுத்துப் பார்த்தார், அமிலத்தை, பூட்டின் துவாரத்தில் ஊற்றி சிதைத்திருப்பது தெரிந்தது.

க்ரில் கதவைத் தள்ள, அது திறந்து கொண்டது. அரையிருட்டாய் இருந்த மாடிப் படிகளில் கீழே இறங்கிப் போக மாடி வராந்தா வந்தது.

நடந்தார். ஹாலுக்குப் போகும் மாடிப் படிகள் ஒரு ஓரத்தில் 'S' போட்டுக்கொண்டு தெரிய, முதல் மாடிப்படிக்கட்டை நோக்கிப் போனார்.

அந்த சிகரெட் துண்டு இன்னமும் உயிரோடு இருப்பதற்க்கு அறிகுறியாக, சிவப்புக் கண்ணோடு புகைத்தபடி தெரிந்தது.

(தொடர்ந்து வரும்)

---

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

அந்த அரசு தாய் சேய் நலக் காப்பகத்தின் வாசலில் ஆட்டோவை நிறுத்திவிட்டு, அந்தத் தாய் தன் பெண்ணை கைத்தாங்கலாக அழைத்துச் சென்றார்.

அங்கு 'டியூட்டியில் இருந்த நர்ஸ், பக்கத்திலிருந்தவரிடம் கோபமாக கத்திக் கொண்டிருந்தார். என்ன விஷயம் என்று காது கொடுத்துக் கேட்கும்போதுதான் தெரிந்தது ,அவர் நைட் டியூட்டி நர்ஸ்.அவரை ரிலீவ் செய்ய வேண்டிய மார்னிங் டியூட்டி நர்ஸ் இன்னும் வரவில்லை. அதனால் டியூட்டி நேரம் முடிந்ததும் வீட்டிற்கு செல்ல முடியாத எரிச்சலில் இருந்தார்.

இந்த அம்மா எப்போவும் இப்படித்தாங்க! காலாகாலத்துல டியூட்டிக்கு வர்ரதே இல்ல. கேட்டா வீட்டுல கொஞ்சம் வேலையாயிருந்துச்சு என்கிறாங்க. இவங்களுக்கு மட்டும்தான் வீடு, வாசல் இருக்கா. எங்களுக்கெல்லாம் இல்லையா? சீக்கிரமா டியூட்டி முடிச்சு போயி, புருஷனை, புள்ளையப் பார்க்கணுங்கற ஆசை எங்களுக்கு இருக்காதா; இன்னைக்கு வரட்டும் அந்த அம்மா."

இந்தக் கத்தலுக்கு இடையில்தான் அதுதான் எனக்கும் புரியவில்லை" என்றேன். எங்களுக்குப் புரியாததை புரிய வைத்தார் ஆட்டோ டிரைவர்.

"ஸ்டாக்கெல்லாம் இருக்கும் சார். இங்கல்ல, இங்கு வேலை செய்றாங்கள்ள டாக்டருங்க, நர்ஸுங்க, அவங்கங்க வீட்ல ஸ்டாக் பண்ணி வச்சிருப்பாங்க".


'ஒஹோ! இப்படிகூட ஸ்டோர் ரூம் இருக்கிறதா?" என்று எங்களுக்குள் நினைத்துக் கொண்டோம்.

அன்று ரீரிக்கார்டிங் முடிய இரவு லேட்டாகிவிட்டதால், நண்பர் ஐயப்பன் என்னுடன் வந்து என் ரூமிலேயே படுத்துத் தூங்கிவிட்டார்.

மறுநாள் காலையில், 7 மணி கால்ஷீட் என்பதால் நானும், நண்பர் ஐயப்பனும் ஆறு மணிக்கெல்லாம் எழுந்து, குளித்து விட்டு, மெதுவாக நடந்துசென்று, ஒரு டீயும் குடித்துவிட்டு, அங்கிருந்து ஆட்டோவில் புறப்படலாம் என்று தீர்மானித்தோம்.

பேசிக் கொண்டே வந்த நாங்கள், கிட்டத்தட்ட அந்தத் தாய்-சேய் நல மருத்துவமனைக்கு அருகில் வந்து விட்டோம். அங்கிருந்த ஒரு டீக்கடையில் டீ வாங்கி நின்றபடியே சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். எங்களுக்குப் பின்னால்

# தர்மயுத்தம் 20



நாங்கள் அழைத்துச் சென்ற அந்தக் கர்ப்பிணிப் பெண்ணின் பிரசவம் நடந்தது.

இவர்களைப் பார்த்ததும் நொடியில் எடை போட்டுவிட்டார், இவர்கள் ஏழைகள். எனவே, எரிச்சலுடன் கேட்டார்: "என்னம்மா?"

"புள்ளத்தாச்சிம்மா இடுப்பு வலி தாங்காம கஷ்டப்படறா."

உடனே அந்த நர்ஸ் நக்கலாக, "பிரசவ நேரத்துல எல்லா பொம்பளைங்களுக்கும் இடுப்புவலி வரும்மா. என்னமோ இந்தப் பொண்ணுக்குத்தான் அதிசயமா வர்றமாதிரி சொல்ற சரி, சரி நீ யாரு?"

"என் பொண்ணுதான் இவ."

"புருஷன் பேர் என்ன?"

உடனே அந்த இளம் பெண், புருஷன் பெயரைத் தான் சொல்லக்கூடாது என்ற தமிழ்ப்பண்பாட்டைக் காக்கும் விதத்தில் அம்மாவைப் பார்த்து, "அவர் பேரைச் சொல்லு" என்றார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த நர்ஸ் தனக்குள் முனகிக்கொண்டாள். "இதெல்லாம் ஒண்ணும் கொறச்சல் இல்லை. இதுக எல்லாம் புள்ள பெத்துக்கலைன்னு யாரு அழுதது?"

ஏழைகளுக்கு சேவைசெய்வதற்காகவே திறக்கப்பட்டிருந்த, தாய்-சேய் நல விடுதியில் பணிபுரிந்து சம்பளம் வாங்குகிற அந்த நர்ஸுக்கு, பிள்ளைகள் பெற்றுக் கொள்வதில் உடன்பாடு இல்லையாம்.

வேக, வேகமாக ஒரு சீட்டை எழுதினார். "இந்தா, இந்த மருந்தெல்லாம் வாங்கிட்டு வா" என்று அந்த மூதாட்டியிடம் அந்த சீட்டைக் கொடுத்தார்.

சீட்டைக் கையில் வாங்கிய அந்த மூதாட்டி, திகைத்தபடி நர்ஸையே பார்க்க, "என்னை எம்மா பாக்குற, வெளிய மருந்துக் கடையில போயி இந்த மருந்துகளையெல்லாம் வாங்கிட்டு வா"

மூதாட்டி தயங்கியபடி கேட்டார். "இல்ல, கவர்மெண்ட்டு ஆஸ்பத்திரியில, மாத்திரை, மருந்து, ஊசியெல்லாம் இலவசமா குடுப்பாங்கன்னு சொன்னாங்களே?"

"இலவசமாத்தான் குடுக்கணும். என்ன செய்றது நீங்க வந்த நேரம், எதுவுமே ஸ்டாக் இல்ல. இத வாங்கிட்டு வந்து குடுத்தா, வைத்தியம் பண்றேன். இல்ல, அரசாங்கத்துல இருந்து வ்ந்தபிறகு நீங்க புள்ள பெத்துக்குங்க."

மெதுவாக அந்த மூதாட்டியை வெளியில் அழைத்து, என்னிடமும், நண்பரிடமும் இருந்த மொத்தம் 13 ரூபாயை கொடுத்துவிட்டு, அதற்கு மேல் அங்கு நின்றிருந்தால் வேலைக்கும் லேட்டாகிவிடும், எங்களுடைய நிதி நிலைமையும் வெட்டவெளிச்சமாகிவிடும் என்று புறப்பட்டோம்.

வண்டியில் போகும்போது நண்பர் ஐயப்பன் என்னைக் கேட்டார், "கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில எந்த மருந்தும் ஸ்டாக் இல்லாமலா இருக்கும்?"

இருந்து ஒரு பெண் குரல், "இதில ஒரு சைனா டீ போடுப்பா. அப்படியே ரெண்டு பன்னும் பார்ச்சல் கட்டு".

சைனா டீ என்பது வேறு எதுவும் இல்லை. டிக்காஷன் இல்லாத தண்ணிப் பால். அது சென்னையில் மிகப் பிரபலம். டீ குடித்து உடம்மைப் கெடுத்துக் கொள்ள விரும்பாத சில உடல்நலம் காப்பவர்கள், பாலென்று நினைத்து சைனா டீ என்கிற பால் தண்ணியை குடிப்பது சென்னையில் சகஜம்.

குரல் வந்த திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தபோது, அங்கே அந்த மூதாட்டி நின்று கொண்டிருந்தார். ஏற்கெனவே சுருக்கங்கள் நிறைந்த அந்த முகம், இப்போது சோகமும் நிறைந்து காணப்பட்டது. எங்களைப் பார்த்ததும், லேசாகக் கண்கலங்கினார். "மவராசனுங்கு, சமயத்துல உதவி பண்ணீங்க. எங்களுக்குக் குடுத்து வைக்கலியேப்பா".

புரியாமல் நின்றோம். இதற்குள் சைனா டீயும், பன்னும் ரெடியாகிவிடவே, வாங்கிக் கொண்டு காசைக் கொடுத்து விட்டு, மெதுவாக நடக்க ஆரம்பித்தார்.

"என்ன பாட்டி, உங்க பொண்ணுக்கு குழந்தை பொறந்தாச்சா?" என்றேன்.

அவர் சொன்னார்: "நீங்க அப்படிப் போன பிறகு அங்கிருந்தவங்க எங்கள மனுஷங்களாவே நடத்தல்லப்பா. ஒரு கட்டிலு காலியா இருந்துச்சு. ஆனா, அதை என் பொண்ணுக்குக் குமுக்கல்ல. ஒரு ஓரமா பாயை விரிச்சுப்படுக்க வச்சுட்டாங்க. கட்டில் காலியா இருக்கேன்னு கேட்டோம். கவுன்சிலருடைய சிபாரிசுல வர்ற பொண்ணுக்காக அந்த கட்டில் காத்துகிட்டுருக்குன்னு சொன்னாங்க. அவவலி தாங்காம கத்துனப்பல்லாம் நான் ஓடிப்போயி அவங்கள கூப்பிட்டேன். என்னையும் திட்ட ஆரம்பிச்சுட்டாங்க.

'இந்தாப் பாரும்மா, குழந்தை எப்ப பெறக்கும்னு எங்களுக்குத் தெரியும். இங்கு பார்த்தேயில்ல, எத்தனை பேரு இருக்காங்கன்னு. எல்லாருக்கும் நாங்கதான் வைத்தியம் பண்ணனும். உன் பொண்ணுக்கு மாத்திரம் பக்கத்துல நின்னு பணிவிடை பண்ணனும்னா, எங்கேயாவது பிரைவேட் நர்ஸிங்ஹோம்ல போயி சேத்துக்க. எங்க உயிர எடுக்காதே!"

பகல் பொழுது கழிஞ்சுது. ராத்திரிதான் குழந்தை பொறக்கும்னு சொன்னதனால, அந்த ராத்திரி பொழுது ஆசையோட எதிர்பார்த்துக் காத்திருந்தேன்பா. ராத்திரி வலி அதிகமானதும், என் மகளுக்கு பிரசவம் பாத்தாங்க. என்னை ஒரு ஓரமா போயி நிக்கச் சொல்லிட்டாங்க.

(அனுபவங்கள் தொடரும்)

மா ன ம் க ற் றா ன்

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில் 1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன் தான் பிரீன் 17

அந்நிலையில் டிரீஸி திடீரென்று அவர்களை நிற்கும்படி சொன்னான். என்ன அபாயம் நேர்ந்ததோ என்று அவர்கள் கவலையுற்று நின்றுவிட்டனர். டிரீஸி, "ஒரு குண்டூசி வேண்டும்! கழுத்தில் கட்டியுள்ள 'டை' காற்றில் பறக்கிறது. அதைச் சட்டையோடு சேர்த்துக்குத்துவதற்கு யாரிடமாவது ஒரு குண்டூசி இருக்குமா?" என்று கேட்டான், கொஞ்சம் கூடப் பயமில்லாமல் நடுவீதியில் அவன் எல்லோரையும் நிறுத்தி விட்டதற்காக நண்பர்கள் வருத்தப்பட்டனர். ஆயினும் டிரீஸியின் கவலையற்ற இன்பகரமான தமாஷை யாவரும் அநுபவித்ததிலும் குறைவில்லை! இதுபோல் டிரீஸி தாடி தீப்பற்றி எரியும்போது பீடிக்கு நெருப்புக் கேட்பது வெகு நாள் பழக்கமாய்ப் போய்விட்டது.

கொர்ரியில் தான் பிரீன் முதலானவர்கள் அடிக்கடி பத்திரிகை படிப்பது வழக்கம். அவற்றில் நாக்லாங் சம்பவத்தைப் பற்றிப் பல பொய்யும் புளுகுகளும் புனைந்துரைக்கப்பட்டிருந்தன. வழக்கம் போல் தொண்டர்களுடைய செயலைக் கண்டித்து அறிக்கைகளும் அபிப்பிராயங்களும் வெளிவந்தன. அரசர் பெருமான் தம்மிடம் கூலிக்கு வேலைபார்த்து நாக்லாங்கில் உயிர் கொடுத்தவர்களுடைய பந்துக்களுக்கும் ஐரிஷ்பதில் ஆளுநருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியிருந்தனர்.

கொர்ரியிலிருந்து தொண்டர்கள் ஷன்னான் நதிக்கரையின் வழியாக மீண்டும் லிமெரிக் பகுதிக்குத் திரும்பினார்கள். அங்கு தினசரி ஆற்றில் முழுவதும் ஓய்வெடுத்துக் கொள்வதும் பழைய விஷயங்களையும் புதிய விஷயங்களையும் பற்றிச் சிந்திப்பதுமாகப் பொழுதைப் போக்கி வந்தனர். அவர்களுடைய காயங்களும் விரைவாகக் குணமடைந்து வந்தன. சும்மாயிருக்கும் நேரங்களில் அவர்கள் பிடித்து வந்த மீனுக்கு அளவேயில்லை. சுற்றிலும் இரகசியப் பொலிஸ் தடியடிப் பொலிஸ், பீரங்கிப் பட்டாளம், பற்பல அதிகாரிகள் அனைவரும் சேர்ந்து, அவர்களைப் பிடிப்பதற்காக எள்ளிருக்கும் இடத்தையும் விடாது தேடிக் கொண்டிருந்தனர். அந்த வேளையில் அவர்கள் ஸ்நானமும் பானமும் தவறாமல், மிக்க மன அமைதியுடன் மீன் பிடித்து மகிழ்ந்து வந்தனர்!

தொண்டர்கள் மேற்கு லிமெரிக்கில் இருக்கும்போது பொலிஸாரும் பட்டாளத்தாரும் அவர்களைப் பிடிக்க எத்தனையோ முயற்சிகள் செய்து கொண்டிருந்தனர். அந்தப் பிரதேசம் முழுவதையும் வளைத்துக் கொண்டு, வீடு வீடாகச் சோதனை செய்து வந்தார்கள். தொண்டர்களைப் பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு ஏராளமான பொன் பரிசளிப்பதாக நாடெங்கும் பறை சாற்றப்பட்டு வந்தது. அவர்களுடைய அங்க அடையாளங்களை மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு போடப்பட்டது.

1919ஆம் ஆண்டு கோடை காலத்தில் பிரிட்டிஷ் கவண்மெண்டார் பழைய கிழட்டு ஐரிஷ் சிப்பாய்களையெல்லாம் ஒன்று சேர்த்து புதிய இரகசிய இலாகா அமைத்துப்பலப்படுத்திக் கொண்டனர். அடுத்த இரண்டு வருஷங்களில் அவர்கள் எத்தனை பேர் இந்த உத்தியோகம் பார்ப்பதற்காக உயிரை இழந்தார்கள் என்பதை அக்காலத்துப் பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியவரும். ஐரிஷ் தொண்டர்கள் தங்கள் தேசத்தாரே தங்களைக் காட்டிக் கொடுக்கும் நீசத் தொழிலைச் செய்வதற்கு முன் வந்ததைக் கண்டு சந்தித்த இடத்திலெல்லாம் அவர்களைப் பரலோகத்திற்கு அனுப்பி வந்தனர். அரசின் இரகசிய இலாகாவிலுள்ளவர்கள் தீவிரமாக எதையும் செய்ய முடியாதபடி அந்த இலாகாவையே முறித்து வந்தார்கள்.

அக்காலத்தில் தெருப்புறங்களில் இரகசிய பொலிஸாருடைய பிரேதங்கள் அடிக்கடி கிடப்பது வழக்கம். அவற்றின் கழுத்துக்களிலே சீட்டுக்கள் கட்டப்பட்டிருக்கும். அச்சீட்டுகளிலே 'ஐரிஷ் தொண்டர் படையினரால் தண்டிக்கப்பட்டவர்கள். ஒற்றர்களே எச்சரிக்கை!' என்று எழுதப்பட்டிருக்கும். ஆனால் ஒற்றர்களா இல்லையா என்று சந்தேகப்படக்கூடிய நபர்களுக்கு மட்டும் உயிர்ப் பிச்சை கொடுத்தனுப்பி விடுவதே வழக்கம்.

கடைசியாகத் தொண்டர்கள் மீண்டும் ஷன்னான் நதியைத் தாண்டித் தென் திப்பெரரிக்குச் சென்றனர். அவர்களுக்குச் செலவுக்குப் பணம் இல்லாமல் கஷ்டமேற்பட்டது. பலர் பணம் கொடுக்கத் தயாராயிருப்பினும், அவர்களைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தொண்டர்கள் தங்களைப் போன்ற ஏழைகளுடைய வீடுகளிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தார்கள். பல்லாக் நகர வாசியான இமன ஓடிபீர் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவந்தார். அந்த நண்பருடைய வீட்டில் தான் முன்பு நடனக் கச்சேரி நடந்து. பின்னார் ஸீன் ஹோகன் வெளியேறும்போது கைதுசெய்யப்பட்டான்.

வெகுகாலமாக மறைந்து திரிந்து கொண்டு, தீவிரமான காரியங்களைச் செய்வதற்கு வழியில்லாமல் பொழுதுபோவதைக் கண்டு தான் பிரீன் மனம் வருந்தினான். அவன் ஸோலோஹெட் பக்கிலும், நாக்லாங்கிலும் ஆரம்பித்துக் கொடுத்த காரியங்களைத் தேசத்தார் பின்பற்றி ஆங்காங்கே பெரும் போர் தொடுப்பார்கள் என்று நம்பியிருந்தான்.

சிற்சில இடங்களில் மட்டும் பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டும், உதிரியான பொலிஸாரிடமிருந்து றிவோல்வர்களும் துப்பாக்கிகளும் பறிக்கப்பட்டும் வந்ததே தவிர எங்கும் ஒரேபடியான வேலை நடக்கவில்லை. ஆதலால் மேலும் தீவிரமான காரியத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று தான் பிரீனும் தோழர்களும் முடிவு செய்தனர். டப்ளினுக்குப் போனால் தான் தொண்டர் படையின் நிலையும், தேசமக்களின் அபிப்பிராயமும் நன்கு புலப்படும் என்று அவர்கள் கருதினார்கள்.


அதன் படி றொபின்ஸனையும், ஹோகனையும் வடதிப்பெரரியில் விட்டு விட்டு தான் பிரீனும் டிரீஸியும் இரண்டு சைக்கிள்களை எடுத்துக் கொண்டு டப்ளினுக்குச் சென்றனர்.

டப்ளினில் அவர்கள் ஷனாகனுடைய வீட்டில் தங்கியிருந்தார்கள். ஷானாகன் அவர்களுடைய பழம்பெரும் தோழன். எந்தத் தொண்டர் டப்ளினுக்குச் சென்றாலும் அவருடைய வீட்டுக்குத்தான் செல்வது வழக்கம். தொண்டர் படையின் சேனாதிபதிக்கு உதவியாகக் கடிதப் போக்கு வரத்தைக் கவனித்து வந்த மைக்கேல் கொலின்ஸைக் கண்டு தான் பிரீனும் டிரீஸியும் பல சமயம் விவாதம் செய்தார்கள். டப்ளினில் தங்குவதற்கு அவர்களுக்கு வேண்டிய உதவி செய்வதாய் கொலின்ஸ் வாக்களித்தான். அவ்வுறுதியைப் பெற்றுக் கொண்டு அவர்கள் றொபின்ஸனையும், ஹோகனையும் அழைத்துக்கொண்டு வருவதற்காக மீண்டும் நாட்டுப்புறம் சென்றனர்.

அச்சமயம் தான் பிரீன் ஒரு பாதிரியாரைப் போல வேஷம் போட்டுக் கொண்டிருந்தான். பல புரட்சிக்காரர்கள் பாதிரி வேஷம் பூணுவது அக்கால வழக்கம். அயர்லாந்தில் பொலிஸார் பாதிரிமார்களிடம் பணிவுடன் நடப்பார்கள். ஆனால் புரட்சிக்காரர் பலரும், பாதிரிகளைப் போல் மாறு வேஷம் தரித்து வருகிற விஷயமும் அவர்களுக்குத் தெரியும்.

யாரை உண்மையான பாதிரி என்று யாரைப் போலிப் பாதிரி என்று நம்புவது? அவர்கள் ஒருவரையும் தடுத்துக் கேள்வி கேட்க விரும்பவில்லை. ஏனெனில் உண்மைப் பாதிரியை வழிமறித்தால், ஜனங்கள் மிகவும் கோபமடைவார்கள். போலிப்பாதிரியை வழி மறித்தால் துப்பாக்கிக்குப் பலியாக நேரும்.

டப்ளினில் இருந்தபோது ஒருசமயம் தான் பிரீன் மேனுத் என்ற இடத்திற்குப் போக நேர்ந்தது. வழியில் அவனுடைய சைக்கிளின் ஒரு சக்கரத்தில் காற்று இறங்கி றப்பர் சக்கரம் சிறிது கிழிந்தும் போய் விட்டது. அதை ஒட்டுவதற்கு றப்பர் துண்டும், பசையும் தேவையாயிருந்தன. அவன் சைக்கிள் கடைக்குச் சென்று ஒட்டித் தரும்படி கேட்டான். சிலமணி நேரம் காத்திருந்தால் தான் முடியும் என்று கடைக்காரன் சொன்னான். பக்கத்தில் மேனூத்துக் கலாசாலையிருப்பதாயும், அங்கே இளம் பாதிரிமார்கள் படித்து வருவதாயும், அவர்களிடம்



போனால் ஒட்டித்தருவார்கள் என்றும் தெரிவித்தான். போலிப் பாதிரியான தான் பிரீன் உண்மைப் பாதிரியார்களின் முன் எப்படிப் போக முடியும்? கடைக்காரனிடம் கோபப்பட்டுக் கொண்டு அவன் வெளியேறினான். சைக்கிள் திருத்தப்படாவிட்டாலும் கொஞ்ச தூரங்கூட போவது கஷ்டம். ஆதலால் மேற்கொண்டு எங்கே செல்வதென்று தான் பிரீன் யோசித்தான்.

ஆபத்துக் காலத்தில் பொலிஸாரே தனக்கு உதவி செய்வது வழக்கம் என்பது அவன் ஞாபகத்திற்கு வந்தது. உடனே பக்கத்திலிருந்த பொலிஸ் நிலையத்திற்குச் சென்றான்.

## தமிழில் ப. ராமஸ்வாமி

அங்கு சென்றதும் காவலிலிருந்த பொலிஸ்காரன் முன்னால் ஓடிவந்து 'சலாம்' செய்தான். பாதிரியும் மிகுந்த தாராள சிந்தையுடன் ஆசீர்வதித்து, வந்த காரியத்தைக் கூறினான். உடனே பல பொலிஸாரும் ஓடிவந்து சைக்கிள் சக் கரத்தில் கிழிந்த இடத்தை றப்பரை ஒட்டிக் காற்றடைத்துக் கொடுத்தனர். அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது, பாதிரி நிலையத்துள் சுவரில் ஒட்டப்பட்டிருந்த அச்சிட்ட அறிக்கைகளை யன்னல் வழியாகக் கவனித்து பார்த்தான். அவற்றில் ஒன்றில் பின்கண்டவாறு எழுதப் பட்டிருந்தது.

**பொலிஸ் நிலையம்**

**1000 பவுண் இனாம்**

**அயர்லாந்தில் கொலை செய்த கொலைகாரன் தேவை!**

**டனியல் பிரீன் (தான் பிரீன்)**

**மூன்றாவது திப்பெரரித் தொண்டர் பட்டாளத்தின் தளகர்த்தா என்று அழைக்கப் படுகின்றவர்.**

**வயது 27. உயரம் 5 அடி 7 அங்குலம், சிறிது கபில நிறம். கறுத்த மயிர் (முன்னால் நீண்டிருக்கும்), சாம்பல் நிறமான கண்கள், குட்டையான வளைந்த மூக்கு, தடித்த உருவம், கனம் சுமார் 12 ஸ்டோன் (168 இறாத்தல்), முற்றிலும் க்ஷவரம் செய்யப்பட்ட முகம், கோபமுள்ள 'புல்டாக்' தோற்றம். வேலை செய்துவிட்டு வருகிற கருமான் போன்ற உருவம், தொப்பி நெற்றிவரை இழுத்து மாட்டப்பட்டிருக்கும்.**

**அவரைக் கைது செய்வதற்கு உதவியாகப் 'பொதுஊழிய' இலாகாவைச் சேராத எந்த நபராவது துப்புச் சொல்லும் பட்சத்தில் அவருக்கு மேற்படி பரிசு ஐரிஷ் அதிகாரிகளால் கொடுக்கப்படும். தகவல் எந்தப் பொலிஸ் நிலையத்திலும் கொடுக்கலாம்.**

அந்த அறிக்கையைப் படிக்கும் போது பாதிரி தான் பிரீன் சிறிதும் சிரிக்கவேயில்லை. உள்ளத்தில் தோன்றிய உவகையை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். பிறகு பீலர்கள் செய்த உதவிக்குப் பலமுறை வந்தனம் கூறிவிட்டு, மெதுவாக வெளியே வந்து கம்பி நீட்டினான்.

நாக்லாங் சம்பவத்திலிருந்து அயர்லாந்தில் புரட்சிக்காரர்களுடைய போராட்டம் தீவிரமாகி விட்டது. எங்கு பார்த்தாலும் தொண்டர்கள் ஆயுதங்களுக்காக கொள்ளையிட்டனர். ஊர்காவலுக்காகச் செல்லும் பொலிசார் ஆங்காங்கே தாக்கப்பட்டனர்.

டப்ளின் நகரிலிருந்த இரகசியப் பொலிசார் திருடர்களையும், சூதாடிகளையும், சாதாரண கலகக்காரர்களையும் கண்டுபிடிப்பதை விட்டு, அரசியல் வாதிகளையும் புரட்சிக் காரர்களையும் பின் தொடர்ந்து சென்றனர். அவர்கள் தங்களுடைய துப்பறியும் வேலைக்களுக்காக பழைய திருடர்களையும், குற்றவாளிகளையும் கையாட்களாகச் சேர்த்துக் கொண்டனர்.

(பயணம் ...தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.** 42

# அரங்கம் அந்தரங்கம்

அபூர்வமான சில விருந்துகளில் மட்டுமே நாங்கள் சந்திப்பது வழக்கம்.

பிற நேரங்களில் ஏதாவது தேவை என்றால் கொடுத்து அனுப்பி விடுவார்.

நாராயணசாமி வீட்டுக்குள் நான் நுழைந்தபோது எனக்கு ஓர் அதிசயமும் அதிர்ச்சியும் காத்திருந்தன.

என் கண்ணில் முதன் முதலில் எதிர்ப்பட்டவள், கமலா.

எந்தக் கமலாவின் கதையைச் சுருக்கமாக நான் உங்களுக்குச்சொன்னேனோ, அதே கமலா விரிவான ஞாபகங்களை எழுப்பி விட்டபடி என் கண் முன்னால் நின்றாள்.

அவளது வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் என்னுடைய பங்கு பெரிதாக இருக்கிறது.

அவளுக்குத் திருமணம் ஆவதற்கு முன்பு, அவள் இருந்த வீட்டுக்கு அடுத்த வீட்டில் நான் குடி இருந்தேன்.

எப்போதாவது தன் தோழிகளுக்கோ சுற்றத்தாருக்கோ டெலிபோன் செய்வதென்றால், அவள் என் வீட்டுக்குத் தான் வருவாள்.

என்னிடத்தில் கமலாவுக்கு அன்பு உண்டு.

அன்பு என்பதைவிட, அநுதாபம் என்று சொல்வது பொருந்தும்.

ஒரு விசித்திரமான மனிதனாகவே என்னை அவள் பார்த்திருக்கிறாள்.

அலங்கோலமான ஓர் அறை. அதிலே மூலைக்கு மூலை சிகரெட் துண்டுகள், சில கண்ணாடி டம்ளர்கள், கலைந்து கிடக்கும் படுக்கை, கீழே விழுந்து கிடக்கும் தலையணை, விரித்தபடி திருப்பி வைக்கப்பட்ட புத்தகம்-காலையில் வந்த உடனே அந்த அறையை ஒழுங்குபடுத்துவாள் கமலா.

என்னுடைய புத்தகங்களைக் கேட்டு வாங்கிக் கொண்டு போவாள்.

பாவாடை கட்டிய சிறுமியாகவும், பருவம் வந்த குமரியாகவும் அவளை நான் பார்த்திருக்கிறேன்.

நான் அந்த வீட்டைக் காலி செய்த பிற்பாடு அவளுக்குத் திருமணம் நடந்தது.

அந்தத் திருமணத்திற்குக்கூட என்னால் போக முடியவில்லை.

இப்போது மீண்டும் நாராயணசாமி வீட்டில் அவளைச் சந்திக்கிறேன்.

என்னைக் கண்டவுடனே அவள் கண்களில் இருந்து வந்த கண்ணீர், குறுகிய காலத்திற்குள் அவளின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களைச் சுட்டிக் காட்டிற்று.

நான் எடுத்திருக்கும் அந்த வீடு, குடியிருக்கும் வீடல்ல; எனது கம்பெனி அலுவலகம்.

அப்போதெல்லாம் பெரும்பாலான நேரங்களை அங்கேதான் கழிப்பேன்.

காலையில் நான் குளிக்கும்வரை காத்திருந்து, நான் எழுதிய சிலவற்றை என்னிடம் ஒப்புவிப்பாள்.

இனந்தெரியாத ஓர் அன்பு உணர்ச்சி இருவருக்குமே இருந்தது.

அபூர்வமான சந்திப்புகளில் விளையும் அதிசயமான பந்தங்களுக்கு பூர்வஜென்மமே காரணம்.

வெறும் நடைமுறை நட்பாக இருந்து, பிரிந்த அந்நாளைய நினைவுகள் இப்போது மீட்டுக் கொடுத்தது கமலாவின் சந்திப்பு.

"கமலா!" என்றேன் நான், ஈனக் குரலில்.



"ஐயா!" என்றாள் அவள்.

அவள்கண்களில் இருந்து பொல பொலவென்று கண்ணீர் வடிந்ததை நாராயணசாமி கவனித்தார்.

கற்பகத்திற்கு இது வேறு விதமாகப் பட்டிருக்க வேண்டும்.

அவள் நாராயணசாமியைப் பார்த்து, "நீங்கள் குளியுங்கள்!" என்று அனுப்பினாள்.

என்னைக் கொண்டு போய்த் தனியறையில் உட்கார வைத்துவிட்டு, கமலாவைப் பார்த்து, "கமலா, ஐயாவைக் கவனித்துக் கொள். நான் போய்க் குளித்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியேறினாள்.

நாராயணசாமி வீட்டு வாடிக்கை எனக்கு ஓரளவுக்குத் தெரியும்

## கவியரசு கண்ணதாசன்

சொசைட்டி என்ற பெயரில் அங்கே மது அருந்தும் போது சிலர் பெண்களிடம் தவறாக நடப்பது உண்டு. அப்போது நாராயணசாமியின் அறைக்குள்ளே பெண்களை ஒதுக்கி கொண்டு போவதும் உண்டு.

ஆனால் கமலா அதற்காகவே அங்கே கொண்டு வரப்பட்டாள் என்பதை என்னால் நம்பமுடியவில்லை.

'ஐயாவைக் கவனி' என்ற வார்த்தைக்கு இரண்டு பொருளும் கொள்ளலாம்.

கவுரவமான குடும்பத்தில் ஒரு பொருளும், தவறான குடும்பங்களில் வேறு பொருளும் அதற்கு உண்டு.

எந்தப் பொருளில் கற்பகம் சொன்னாள்?

அறைக்குள்ளே வந்த கமலா அதன் அர்த்தத்தை உரைத்தாள்.

எனக்குக் கற்பகத்தின்மீது கோபம் வரவில்லை. அதிகாரி கமலநாதனைத்தான் உதைக்க வேண்டும் போல் தோன்றிற்று.

அவர் ஏற்படுத்திய சூழ்நிலையினால் தானே கற்பகம் சிக்கினாள்? அந்தச் சிக்கலில் இருந்து விடுபடுவதற்குத் தானே கமலாவைச் சிக்க வைத்தாள்.

கமலா என் காலடியில் உட்கார்ந்தாள்.

அவளைப் பார்க்கப் பார்க்க எனக்கு உயிரே போவது போலிருந்தது.

சமூகத்திலுள்ள பணக்காரர்களுக்குத் தவறு செய்வதே ஒருவகைச் சுகம்.

(அந்தரங்கம் வரும்)

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

—கண்ணதாசன்—

# இளைஞர்களே நாட்டின் ஜீவன்கள்

நாங்கள் மட்டும்தான் படிச்ச ஆக்களெண்டு நினைக்கக் கூடாது மச்சான். நாம சொல்லுறத தொடர்ந்து எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்க மாட்டாங்க. உனது பெயர் இந்திரனெண்டு இருக்கிறதால ஊருக்கு நீதான் ராசா எண்டு நினைக்கக் கூடாது. 'குட்டக் குட்ட குனிபவன் மடையன்' என்பார்களே! எதுவும் அளவுக்கு மீறிப் போகக் கூடாது.



வீரமுனை வானவர்கோன்

இப்ப சந்தி சிரிக்குதே! எத்தனை தரம் சொல்லி இருப்பன் வேணாம்வேணாமெண்டு, எண்ட பேச்சை நீ கேட்டாயா!"

"நேற்றுக் கூட்டத்தில் பேசும்போது நான் அப்படிக் கூறியிருக்கக் கூடாதுதான். மேடைப் பேச்சாளனென்று நான் நினைத்தது தான் தவறு. நானும் பேச்சை மாத்த வேணுமெண்டு முயற்சி செய்யாமலில்லை. மேடையில் ஏறினதும் எல்லாம் மறந்து போகுதே! என்ன செய்யலாம் மச்சான் அருள் எப்படிப் பேசலாமெண்டு நீயாவது புத்திமதி சொல்லிலுடா!" இப்படிக் கவலைப்பட்டு இந்திரன் கேட்பானென்று நான் நினைக்கவேயில்லை.

ஆறு வயதில் இருந்தே கூட்டாளியானவன் இந்திரன். பாடசாலைப் படிப்பு முதல் பின்னேர விளையாட்டு வரை என்னோடு இணைந்தே இருப்பான். அதனால் அவனுக்கும் எனக்குமான நெருக்கம் அதிகரித்தே இருந்தது. இந்திரனை எப்படித் திட்டினாலும், பேசினாலும் என்னை விட்டுப் பிரிந்தே இருக்க மாட்டான். பாடசாலையில் அவனது கணக்குக் கொப்பியை நான் பார்த்து எழுதினால் எனது தமிழ்க் கொப்பியை அவன் பார்த்து எழுதக் கொடுக்க வேண்டும். தமிழ்ப் பாடத்தில் அவனுக்குக் கொஞ்சம் நாட்டம் குறைவுதான். என்றாலும் கணக்கு விடுவதில் சூரன். நான் எப்படியாவது சயிட்ச்சான் வேலையைச் செய்து விட்டு, அவனுக்கு எனது கொப்பிய பார்த்தெழுதக் கொடுக்கவில்லையானால் அவனது முகத்தைப் பார்க்கத் தேவையில்லை. முகம் செக்கச்செவேலென்று சிவந்து விடும். இயற்கையிலேயே சிவந்த உடல்வாகுடையவன் அவன். எனது நிறத்தைப் பார்த்து அடிக்கடி கேலி பண்ணிச் சிரித்துக் கோபமூட்டுவான்.

பட்டப்படிப்புக்காக நான் கல்லூரி சென்று வரும் போது, தெருவில் என்னைக் கண்டால், "வயது போகும் நேரத்தில் படிக்கிறாயா மச்சான்?" எனக் கேட்டுச் சிரிப்பான், அவனின் சைக்கிளில் ஏறி வரும் போது, கல்லூரி நிகழ்வுகள் என்னுடன் ஓடி வரும். அவனும் அச்செதிகளைக் கேட்க ஆவலாக இருப்பான். நான் அவற்றை இந்திரனுக்கு கூறிக் கொண்டே வரும் வழியில் இருக்கும் எனது வீட்டு வாசலில் இறங்கிக் கொள்வேன்.

பாடசாலையில் படிக்கும் காலத்தில் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் துணிச்சலுடன் கலந்து கொண்டு பரிசை இந்திரன் தட்டிச் செல்வான். பேச்சுக்குரிய குரல்வாகு இல்லாவிட்டாலும் பரிசை எப்படியாவது அவனே பெற்று விடுவான். எனக்கும் மேடையில் பேசுவதற்கு ஆசைதான். என்ன செய்வது இப்போது அந்தக்காலம் மாதிரி அரசியற் கூட்டங்கள் நடப்பதில்லையே.

"அருள் நாளைக்கு இளைஞர் கழகத்தில், கூட்டமொன்றுக்கு ஒழுங்கு செய்து என்னையும் பேச வருமாறு அழைத்துள்ளார்கள். 'இளைஞர்கள் இந்த நாட்டின் ஜீவன்கள்' எனும் கருப்பொருளில் தான் பேச வேண்டும் மச்சான். உனக்கும் அழைப்பு வரவில்லையா? வந்தாலும் உனக்குத் தான் பேசவும் தெரியாதே." அமைதியாக இருந்த என்னை திட்டிச் சிந்தனையைத் திசை திருப்பினான் இந்திரன். 'ம் . . . எனக்கும் தான் இன்விட்டேசன் வந்திருக்கு. நான் நிச்சயம் அங்கு போக வேணும் மச்சான் இந்திரன். நாம போகாவிட்டால் பொடியனுகள் மதிக்கவும் மாட்டானுகள். ஏற்கனவே நம்மோடு பொடியனுகள் ஒரு மாதிரி. ஆனா ஒன்று சொல்லுறன் மச்சான்! நீ வாய் இருக்கெண்டு நினைச்ச மாதிரியெல்லாம் கதைச்சு பிரச்சனையைச் சம்பாதிச்சுக் கொள்ளாத. கவுவாளக் கயிற்றைச் சரியாகப் பிடிச்சுப் பேசு. பிறகு கவலைப்பட்டுப் பிரயோசனம் இல்லை மச்சான். எனக்குப் பேசத்தெரியாதென்று சொன்னாய்; அப்படியில்லை மச்சான் எனக்கும் பேசத் தெரியும். அளந்து பேசுவதில்தான் சிக்கல். தேவையில்லாமல் பேசி வம்பில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று தான் பின்னுக்கு நிற்கிறன்."

மேடை அலங்கரிக்கப்பட்டு பேச்சாளர்கள் வரிசையாக அமர்ந்திருந்தனர். பார்வையாளர்களை மண்டபம் நிறைந்துக் கொண்டிருந்தது. குத்துவிளக்கேற்றும் வைபவம் முடிவுற்றதும் பேச்சொலிகள் வானைப் பிளந்தன. "இளைஞர்களே இன்றைய சக்திகள்" என்னும் பொருளில் பேச்சாளர் ஒருவர் உரையாற்றி கரகோஷத்தைப் பரிசாகப் பெற்று அமர இந்திரனின் உரை ஆரம்பமானது.

"இந்த நாடு ஆயுதக் கலாசாரத்தில் சீரழிந்து கொண்டிருக்கின்றது. விடுதலைப் போராளிகளென்றால் என்ன, இராணுவ வீரர்களென்றால் என்ன எல்லோரும் இளைஞர்கள் தானே? இளைஞர்கள் இந்த நாட்டின் ஜீவன்கள் என எனக்குத் தந்த தலைப்புப் பொருத்தமற்றது. "இளைஞர்களே இந்த நாட்டின் தீச்சுச்சிகள்! என்பதே பொருத்தம். இளைஞர்களால் இந்த சமுதாயம் கருகிக் கொண்டிருக்கின்றது. புதிய சமுதாயத்தை உருவாக்க எல்லாரும் முன்வரவேண்டும். என வாய்க்கு வந்தபடி இந்திரன் பேசிக் கொண்டிருந்த போது, பார்வையாளர்கள் மத்தியில் இருந்து கூக்குரல் எழுந்தது. பேச்சை முடித்துக் கொண்டு பின்பும் அங்கே இந்திரன் இருப்பானேயானால், இளைஞர்களால் ஏதும் நடந்தே தீரும்."

அவனை அவசரமாக வெளியே அழைத்துச் சென்று "உன்னைத் திருத்தவே முடியாதா!" வெனக் கேட்டபோது அவனின் முகம் கால் பெரு விரலைப் பார்த்துக் கொண்டிருந்தது. ●

# திறமை

சேர்மன் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் கச்சிதமாகப் பதில் சொல்லி முடித்தான் ராகவன்.

ராகவன் சமர்ப்பித்த தகுதிச் சான்றிதழ்கள் அடங்கிய ஃபைலை மிகவும் நிதானமாகப் புரட்டினார் சேர்மன்.

அவருடைய முகத்தில் ஒரு நிறைவு தெரிந்தது.

இந்த வேலை நிச்சயம் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை ராகவன் மனசுக்குள் சுடர்விட்டது.

அடுத்த விநாடி..

அருகில் இருந்த ஃபோன் அலற, ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார் சேர்மன்.

ஃபோனில் வழிந்தார்.

"ஓகே சேர்..! நீங்க சொன்ன மாதிரியே செய்துடலாம் சேர்... நீங்க சொன்ன பிறகு மறுக்க முடியுமா சேர்? தாங்க் யூ சேர்!"

ஃபோனை வைத்துவிட்டு ராகவனிடம் நிமிர்ந்தார் சேர்மன்.

"மிஸ்டர் ராகவன், இந்த வேலையை உங்களுக்குத்தான் கொடுக்கணும்... இருந்தாலும், மேலிடத்திலிருந்து ஃபோன் பண்ணி சொல்லிட்டார்."

சேர்மன் என்ன சொல்ல வருகிறார் என்பதை ராகவன் உணர்ந்து கொண்டான்.

"புரிஞ்சுகிட்டேன் சேர். மேலிடத்து பிரஷர்.. அவங்களை மீறி நீங்க ஒண்ணும் செய்ய முடியாது. அடுத்த முறை முயற்சிக்கிறேன் சேர்."

மேஜைமீது இருந்த சான்றிதழ்கள் அடங்கிய ஃபைலை நிதானமாக எடுத்துக் கொண்டு எழுந்தான் ராகவன்.

"ராகவன்... இதில் உங்களுக்கு ஒண்ணும் வருத்தம் இல்லையே?"

"வருத்தப்பட என்ன சேர் இருக்கு, என்னதான் தகுதி இருந்தாலும், உங்க இஷ்டத்துக்கு ஒருத்தனை அப்பொயின்ட் பண்ண முடியாதே. இன்னிக்கு இருக்கிற நடைமுறையில் மேலிடத்தை அனுசரித்துத் தானே ஒரு நிர்வாகம் போக வேண்டியிருக்கு!"



அமுதகுமார்

அவனுடைய பதில் சேர்மனை அசத்தியது.

"ராகவன், இந்த வேலை உங்களுக்குத் தான்...! ஏன் அப்படி பார்க்கறீங்க? கொடுக்கப் போற பதவி சிக்கலானது. மேலிடத்தையும் அனுசரித்துப் போகணும். கீழே இருந்து வரக்கூடிய எதிர்ப்புகளையும் சமாளிக்கணும். அதுக்கு ரொம்ப திறமை வேணும். அந்தத் திறமை உங்ககிட்ட இருக்கு."

ராகவன் இன்ப அதிர்ச்சி அடைந்தான்.

# முறைப்பொண்ணு

அந்த திருமணவிழா முடிந்து, உணவு உண்டபின் ஒவ்வொருவராக விடை பெற்றுக் கொண்டு இருந்தார்கள். கடந்த சில தினங்களாகவே என் சகோதரியின் திருமணத்தால் ஒரேவேலை. அதனால்தான் என்னால் அவளோடு ஒரு தடவையேனும் பேசமுடியவில்லை.

இப்போதுதான் கொஞ்சம் ஓய்வாக இருந்தது. என் கண்கள் அவளைத்தேடின.



இணுவில் உத்திரன்

ஆகா! துருதுருவென்ற விழிகள். சிறிய உதடுகள். இரட்டைப்பின்னல். நீண்ட மூக்கு. நிறம் கொஞ்சம் குறைவானாலும், அவள் அழகிதான்.

அந்தத் திருமணத்துக்கு வந்த அனேகரது பார்வையும் அவள் மேல்தான். அவள் தான் என் மாமா மகள். அதாவது முறைப் பொண்ணு.

கடந்த சில வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் மாமாவும், மாமியும், அவர்களது ஒரேபொண்ணும் என் தங்கையின் திருமணத்துக்காக கொழும்பில் இருந்து ஊருக்கு வந்து இருந்தார்கள்.

என்னைப்பார்க்கும் போதெல்லாம் அவள் வெட்கப்பட்டுக் கொண்டே நழுவி விடுவாள். எப்படியாவது அவளோடு பேசிவிடவேண்டும் என நானும் முயற்சி செய்து கொண்டே தான் இருக்கிறேன்.

கன்ஜாடையில் கூட கேட்டுப் பார்த்தேன். 'ம் ம்....... சரிபார்போம். உன்னை நான் விடப்போவதில்லை!' என நினைத்துக் கொண்டேன்.

அப்போது ஆரவாரம் எல்லாம் குறைந்து இருந்தது. முன் பந்தல்பக்கம் பார்த்தேன். அங்கே என் அம்மாவும் மாமியும் கதைத்துக்கொண்டு இருக்க, பக்கத்திலே அவள் இருந்தாள். அவர்களை நோக்கிச் சென்றேன்.

என்னையே உற்று நோக்கிக் கொண்டு இருந்த அவள், உடனே மாமியை பார்த்து கேட்டாள்.

"அம்மா அத்தான் ஏன் என்னையே நெடுக உற்றுப்பார்த்துக்கொண்டு இருக்கிறார்?" என்று. உடனே மாமியும் "அது உன்மேலை இருக்கிற ஆசையில்தான் அப்படிப் பார்க்கிறான்: சரி உனக்கு அத்தானைப் பிடிச்சிருக்கா?" என்று கேட்க உடனே அங்கு இருந்த அனைவரும் சிரித்து விட்டார்கள்.

அவள் வெட்கத்தோடு எழுந்து நகர முயன்றபோது, அவளின் கையை எட்டிப் பிடித்துக்கொண்டேன். அப்படியே அவளைக் கட்டிப்பிடித்து நெற்றியில், உதட்டில், கன்னத்தில் என்று ஒரே முத்த மழையாக பொழிந்து விட்டேன்.

இப்போதுதான் திருப்தியாக இருந்தது. என் ஏழுவயது மாமா மகளை என்னால் வேறு என்னதான் செய்யமுடியும்? ■

# அவன் நினைத்தானா...?

மரகதம் தன் கணவன் கணபதியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அந்த ஒடுக்கமான நாலரை அடிச் சாக்குக் கட்டிலில் தன் ஆறடி உயரத்தை அடக்கி அதனுள்ளே ஆடாமல் அசையாமல் சுருண்டு கிடந்தான்.

அவன் மூச்சமட்டும் அவனுக்கு உயிர் இருப்பதை உறுதிப்படுத்தியது. மரகதமும் கணபதியும் பசியாத உலகில் சஞ்சரித்து மூன்று நாட்களாகி விட்டன.

அவர்கள் அடுப்படியில் பூனை ஒன்று தன்னை மறந்து உறங்கிக்கிடந்தது.

வாசல்பக்கம் காலடி ஓசைகேட்டுத்தன் பார்வையைத்திருப்பினாள் மரகதம். சோர்ந்த நடையுடன் அவள் பிள்ளைகள் கமலனும், ஜோதியும் பள்ளிக் கூடம் விட்டு வந்தனர்.

புத்தகப்பைகளைத்தூக்கி வீசிவிட்டு, தாயின் அருகே மடிகால் போட்டு உட்கார்ந்து இருவரும் ஏககாலத்தில் "பசிக்குதும்மா....!" என்றார்கள்.

மரகதத்தின் கண்களில் அடைபட்டுக் கிடந்த நீர் மடைதிறந்து ஓடியது. தன்முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

"ஏம்மா அழறே?" கேட்டுக் கொண்டே அவள் முகத்தை தன் சின்னஞ்சிறு கையால் திருப்பினான், ஏழுவயதுக் கமலன். "அம்மா காலையில கூட ரீ ஒண்ணும் தரல. ரொம்ப பசிக்குதும்மா!" தன் பிஞ்சுக் கையை நீட்டினாள் அந்த ஐந்து வயது ஜோதி.

மரகதத்தின் தொண்டைக்குள்விம்மல் வெடித்தது. முந்தானையில் முடிந்திருந்த பத்து ரூபாய் நோட்டைக் கமலன் கையில் திணித்து, "பஸ்லின் நானா கடையில ரெண்டு ரீ பன் வாங்கிச் சாப்பிட்டப்புறம் கொஞ்சம் படுத்துக்குங்க!" மரகதம் சொல்லி முடிக்கு முன் தன் பிள்ளைகள் பசியில் பறந்தோடுவதைப் பரிதாபமாகப்பார்த்தாள்.

கணவனை நெருங்கி அவனைக்கையால் அசைத்து எழுப்பினாள் "என்னங்க எழும்பி எதையாச்சும் சாப்பிடுங்க", என்றாள்.

"சாப்பாடு வேண்டாம். சாகிறதுக்கு ஏதும் இருந்தாக்குடு!" கணபதியின் குரல் உடைந்து சிதறியது.

மரகதம் சாக்குக்கட்டில் காலில் முதுகை சாய்த்து உட்கார்ந்தாள். அவள் பார்வை பழுப்பேறித்தொங்கிக் கிடந்த முரளியின் படத்தில் பதிந்தது. அது அவன் கடை முதலாளி மகன் சவுதியிலிருந்து வந்தபோது எடுத்தது.

கணபதி ஒரு சாதாரண தொழிலாளி. பலசரக்குக் கடை ஒன்றில் மூட்டைத் தூக்கிப் பிழைப்பவன்.

அந்தக்கடை வீதி முடியும் மூலையிலே ஆப்பம் சுட்டு விற்று வந்தவள் மரகதம். பல நாட்பழக்கத்தில் அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் விரும்பிக் கல்யாணம் செய்து மூன்றுபிள்ளைகளுக்குத் தாயும் தந்தையுமானார்கள்.

தான் தூக்கும் மூட்டையை தன் பிள்ளைகளும் தூக்கிப் பிழைப்பதை விரும்பாத கணபதி தன்பிள்ளைகளைப் படிப்பித்து ஆளாக்குவதில் தீவிரமாயிருந்தான்.

மூத்தவன் முரளி கருமமே கண்ணாயிருந்து படித்துப் பட்டப்படிப்பை முடித்த போது மரகதமும் கணபதியும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. முரளிக்கு வேலை கிடைத்து விட்டால் மூட்டைதூக்கும் வேலைக்கு 'டாட்டா' காட்டலாம் என்று தனக்குள்ளே மகிழ்ந்தான் கணபதி. மரகதம் ஆப்பச்சட்டிக்கு ஓய்வு கிடைக்கும் என்று நிம்மதிப்பெருமூச்சுவிட்டாள்.

வெகு சீக்கிரம் முரளிக்குக் கொழும்பில் உள்ள பிரபல நிறுவனமொன்றில் கணக்காளனாக வேலை கிடைத்தது.

கமலனும் ஜோதியும் துள்ளிக் குதித்தார்கள். தங்களுடைய ஒட்டுப்போட்ட புத்தகப் பைகளை தூக்கி வீசிவிட்டு, அழகான பைகள் வாங்குவதுபோல் ஆசைப்பட்டு மகிழ்ந்தார்கள்.



ரூபராணி

கணபதி தன் மகனைக் கொழும்புக்கு அனுப்புவதற்குத் தேவையானவற்றை வாங்குவதற்குக் கடை முதலாளியிடம் கடனாக ஒரு தொகையைப் பெற்றான்.

முரளி கொழும்பில் வேலைக்குச் சேர்ந்து வாரம் ஒரு முறை வீட்டுக்கு வந்து போவான். அப்போது அந்தச்சிறிய வீடு சந்தோஷத்தால் நிரம்பி வழியும். வயிறார உண்டு களித்தது அந்தக் குடும்பம்.

மூன்று மாதங்கள் மெதுவாக நகர்ந்தன. வாரமொருமுறை வீட்டுக்கு வந்த முரளி மாதமொரு முறைவரத் தொடங்கினான்.

வீட்டில் ஒட்டுறவில்லாத அவன் நடத்தை கணபதிக்கும் மரகதத்துக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. காரணத்தை அவர்களால்கண்டு பிடிக்க முடியவில்லை.

இப்போ அவன் பணியாற்றும் நிறுவனத்தில் கம்பியூற்றர் நிர்வாகி ஸஜாத் ஹாஜியார் வீட்டில் தங்கியிருப்பதாகச் சொன்னான்.

அங்கு எல்லாவசதிகளும் இருப்பதால் வந்து போகும் செலவைத் தவிர்க்கலாம் என்று கூறினான்.

அவனுடைய குரல் சுரத்தில்லாமல் இருந்தது. வீட்டுக்கு வந்து தேவையறிந்து செலவு செய்து வந்தவன், திடீர் என்று கஞ்சனாக மாறியதைக் கண்ட கணபதியின் நெஞ்சில் ஏதோ ஒன்று முள்ளாய்க் குத்தியது.

கணபதி ஏழையானாலும் மானஸ்தன். கடைசிவரை தன் மகனிடம் கை நீட்டுவதில்லை என்று உறுதி பூண்டான்.

தன் மகனை விடத் தன்முதுகை நம்பினான். கமலனை ஓரளவு படிப்பித்தால் போதும்; அவன் மூட்டை தூக்கியோ கூலி வேலை செய்தோ பிழைக்கட்டும் என்று வெறுப்புடன் கூறினான் கணபதி தன் மனைவியிடம்.

அவள் மனமுடைந்து அழுதாள். அவள் கட்டி எழுப்பியிருந்த கற்பனைக் கோட்டை சரிந்து விழுந்தது.

கொண்டு வந்தாலும் கொண்டு வராவிட்டாலும் தன் பிள்ளையைத் தான் இழந்து விடக்கூடாது என்று அத்தாய்மனம் துடித்தது.

முரளியின் போக்கில் ஏற்பட்ட மாறுதல் அந்தக்குடும்பத்தின் நிம்மதியை வேரோடு அறுத்து விட்டது. முரளி வீட்டுக்கு வருவதை அடியோடு நிறுத்தி விட்டான். முரளிக்கு என்னவோ ஏதோ என்று கலங்கிப் போனார்கள் கணபதியும் மரகதமும்.

வேலையின் நிமித்தம் லாரியில் கணபதி கொழும்புக்குச் சென்றபோது, அங்கு முரளியைக் காணுவான் என்று எண்ணவில்லை. அவன் யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டு வந்தான்.

கணபதி முரளியை நோக்கிச் செல்ல அவனோ தன் தந்தையைக் கண்டும் காணாதவன் போல் கடந்து சென்றான். கணபதியின் மனம் உடைந்து சுக்கு நூறாகியது.

அவன் முரளியை மறக்க முயற்சித்த போது அவனிடமிருந்து வந்த கடிதம் கணபதியைச் சித்திரவதை செய்து சிரித்தது.

அன்புள்ள அப்பா,

நான் இப்பொழுது கொழும்பில் நல்ல நிலையில் இருப்பதைத் தெரிந்தும் என்னை அவமானப்படுத்துவது போல் நீங்கள் நடந்து கொள்கிறீர்கள்.

உங்கள் உடை நீங்கள் 'கூலி' என்பதைத் தெரியப்படுத்துகிறது. அடுத்தவன் பார்வையில் இதற்கு மதிப்பில்லை.

என்னுடைய வருங்காலம் முக்கியம். ஒரு கௌரவமான பெண் நம் வீட்டுக்கு மருமகளாக வர ஒரு போதும் சம்மதிக்கமாட்டாள். இதற்காக இப்போதிருந்தே என் சம்பளப்பணத்தை வங்கியில் போடுகிறேன்.

மகன் முரளி

கடிதத்தைப்படித்து முடித்த கணபதி சாக்குக் கட்டிலில் உண்ண மறந்து மூன்று நாட்களாய்ச் சுருண்டு கிடந்தான். மரகதத்துக்கு அவனை எழுப்புவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. ●



நெருப்பு வலை பின்னி உயிர்களைப் பிழிந்து சாறு குடித்துக் கொண்டிருந்த சூரியச் சிலந்தி உச்சியிலிருந்து சற்றுக் கீழிறங்கியது. வெப்பத் திருடனுக்குப் பயந்து ஒளித்து வைத்திருந்த நிழல்களை மெல்லக் கிழக்குப் புறமாக நீட்டின மரங்கள்.

பெயர் தெரியாப் பட்சிகளின் ஜாலங்களைக் கவனித்தபடி ஒரு வேப்பமரத்தடியில் அமர்ந்திருந்தான் விதேயன். வழக்கம்போலவே கடிகாரத்தின் நாக்குகள் பொய் சொல்லுகின்றன. அவன் அந்த இடத்திற்கு வந்து ஒரு யுகம் ஆனபிறகும் அரைவட்டத்தையே தாண்டியிருப்பதாகக் காட்டுகிறது பெரியமுள். 'முட்களிடையே காலம் நகர்வதைக் காட்டக் கண்டுபிடித்தவன், என்னைப் போலவே யாரோ ஒருத்திக்காகக் காத்திருந்த மகானுபாவனாய்த்தானிருக்க வேண்டும்.'

அருகிலிருந்த கற்களும் சுள்ளிகளும் அவன் அடுக்குதலில் பல உருவங்களை எடுத்துச் சிதைந்து சிதறின. மனம் பல கவிதைகளை எழுதிப் பார்த்துக் கலைத்தது.

"நடந்துவரும் உன் காலடிகளில்தான் என் இதயத்தைச் சேமித்து வைத்திருக்கிறேன். மணல் வெளியில் சிதறிய சோளப்பொரிகளாய் உன் நினைவு.... தாமதமாய் வருவதற்கென உனக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம்... காத்துக் காத்து என் உயிர் தேய்ந்தழிய காரணம் நீ மட்டும்தான்..."

# என் முரட்டுக் கண்ணா!

அதை அழித்துவிட்டு மனது மீண்டும் புதுவரிகளைக் கோர்த்தது.

"உன் மூச்சும் கலந்திருக்கும் இந்தக் காற்று... உன்னை நனைத்த இந்த நதி.... என்றோ உன் பாதம் பட்ட இந்தத் தரை... எங்கே இருந்தாலும் உன்னைப் பார்த்துவிட்ட போதையில் தான் இப்படிப் பைத்தியமாய் அலைகிற மேகங்கள்... அங்கே நீ நடக்கும் கொலுசொலியை விழுங்கிய சிலிர்ப்பில் மயங்கிக் கிடக்கும் இந்த பிரபஞ்ச மௌனம்.... எல்லாவற்றிலும்.... எல்லாவற்றிலும் நீ.....

எப்போது சுந்தரி வரப்போகிறாய்?" தூரத்தில் - வெள்ளைத்தாளில் வரைந்த ஓவியச் சுருக்கெழுத்துப் போல ஒற்றைப்பனை தெரிந்தது.

காற்றோடு பேசுகின்ற மரங்களின் முணுமுணுப்பும், பறவைகளின் இரகசிய உரையாடலையும் தவிர வேறு ஓசையெதுவுமில்லாத தனிமை. விதேயன் மனம் அடுத்த கவிதைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்ட வேளையில் "ஜல் ஜல் ஜல்...."

உயிருக்குள் தேன் பாய்ந்தது. மனம் கட்டை உடைத்துக்கொண்டு கொலுசொலியை நோக்கிப் பாய்ந்தது. அவள் வரும் திசைக்கு தானாகத் திரும்ப முற்பட்ட முகத்தை மூளையால் கடிவாளமிட்டுத் தடுத்தான்.

கொலுசுச் சத்தத்தைத் தொடர்ந்து அவள் வாசனை வந்து சேர்ந்தது. கண்களைத் திருப்பாத போதும் முதுகு, பிடரி, காது நுனிகளிலெல்லாம் குளுமை ஊர்வதை உணரமுடிந்தது.

"களுக்", சிரிப்பைத் தொடர்ந்து ஒற்றை வயலின் நரம்பு சிணுங்கியது.

"ஐயாவுக்குக் கோபம் போல...."

ஜாலக்காரி! அவள் விரும்புகிறபோது நாங்கள் இளித்துக்கொண்டு நிற்க வேண்டும். எங்கள் அவஸ்தைகளெல்லாம் அவளுக்கு ஒரு பொருட்டே அல்ல....

பின்புறமாகக் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தோடு தன் கன்னத்தை உராய்ந்தாள். காதுக்குள் மெல்லக் கிசுகிசுத்தாள்.

"கன நேரம் காக்க வைச்சிட்டனா....?

எவ்வளவு சுலபமாய்க் கேட்கிறாள். முகத்தைக் காட்டி காதுக்குள் கிளுகிளுத்தால், 'நாங்கள் அப்படியே சரணடைந்து கொஞ்ச வேண்டும்' என்ற எதிர்பார்ப்பு. 'ஹ்ஹ்ம்..... அது பலிக்காது பெண்ணே! நீங்கள் பெரிய 'இது'... நீங்கள் வரும்வரை நாங்கள் காத்துக் கிடக்க வேண்டும். வந்தவுடன் நீங்கள் விரும்பியபடியெல்லாம் கொஞ்ச வேண்டும்... பிறகு நீங்களாகவே ஏதோ போனால் போகிறதென்று தருவதை நாங்கள் எடுத்துக் கொண்டு திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டும். ஆசையில் துடிக்கவிட்டுவிட்டு, அம்மாவோ ஆத்தாளோ தேடுவார்கள் போகவேண்டும் என்று பரபரப்பீர்கள். நாங்கள் மேலும் சில நிமிடங்களுக்காகக் கெஞ்ச வேண்டும். அந்தத் துடிப்பை இரசித்த குரூரத் திருப்தியோடு நீங்கள் போய்விடுவீர்கள்.... என்னங்கடி இது...?'

'இன்றைக்கு நீயா நானா? பார்த்துக்கொள்ளலாம் உன் மாய்மாலத்திற்கு மயங்கப் போவதில்லை.' சுந்தரி கழுத்தை மேலும் இறுக்கினாள். ஒரு கையால் மறுகையால் விதேயனின் தலைமயிரைக் கோதி உதடுகளைக் குவித்து மயிர்க்கால்களினூடே ஊதினாள்.

சிலிர்ப்பு அங்கிருந்து ஆரம்பித்து உள்ளங்கால் வரை பயணமானது. உடலைக்கல்லாக்கிவிட வேண்டுமென்று மூளையால் நரம்புகளுக்கு உத்தரவிட்டான்.

அவள் விரும்பியபோது, அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் இசைந்து ஆடவேண்டும். நமது விருப்பங்கள், ஏக்கங்களுக்கு என்ன மரியாதை?

காற்றை ஊதக் குவித்த உதடுகளை கன்னத்தில் மெல்லப் பதித்தாள். நரம்புத் தொகுதியின் மீது மூளை தன் கட்டுப்பாட்டை இழந்தது.

கன்னத்தில் உற்பத்தியான சிலிர்ப்பு இதயம் நோக்கிய பயணத்திலிருந்து, கன்னத்தில் உராய்ந்த உதடுகளை விலக்காமலே, "முனிவருக்குக் கோபம் தீரவில்லையா?" என்று அவள் பேசியதைக் கன்னம் உணர்ந்தது.

அவள் இதழ்களின் ஈரலிப்புச் செய்தியை வாங்கிக் கொண்ட இதயத்திடமிருந்து உடலின் எல்லாக் கலங்களுக்கும் தகவல் பறந்தது.

விதேயனின் மூக்கைத் தன் விரல்களால் திருகிக் கொண்டே "ஹ்க்கும்!" என்று சிணுங்கினாள்.

அவ்வளவு தான். ஆயிரம் துந்துபியின் இரைச்சலில் விதேயன் உடல் நடுங்கியது.

ஆவேசம் கொண்டவனாய் சுந்தரியை இழுத்தணைத்தான்.

"ச்சீ... முரடா!" என்று அவள் திமிறினாள்.

அவனுக்குள் இன்னும் கோபம் பொங்கியது. இதை எதிர்பார்த்துத்தானே என்னை

எழுதுவது

**முழடில்யன்**

உருவேற்றினாள்? பிறகு இதுவும் ஏதோ என்னுடைய தவறு என்பதாகவும், என்னுடைய முரட்டுத்தனத்தைச் சகித்துக் கொள்ளவேண்டிய பெருந்தன்மை தனக்கிருப்பதாகவும் காட்ட நினைக்கிற நீலித்தனம். எரிச்சலில் பிடியைத் தளர்த்தினான். சுந்தரி மடியில் துவண்டு விழுந்தாள்.

படுத்திருந்தபடியே பெருவிரல் நகத்தால் நடுவயிற்றில் மெல்லக் கோடிழுத்தாள். அங்கே உதடுகளைப் பதித்து முகத்தைத் திருப்பி கண்களால் சிரித்தாள்.

## இலக்கிய நயம்

"என் முரட்டுக் கண்ணா!" என்று முதுகுப்புறம் கரங்களால் சுற்றி கட்டியணைத்து முகம் புதைத்தாள். அவனுக்கு ஆயாசமாக இருந்தது.

என்ன பெண்கள் இவர்கள்! விலகியிருப்போமென்றாலும் விடமாட்டார்கள். நெருங்கினாலும் அலட்சியமாய் நகையாடுகிற மிதப்பு வந்து விடுகிறது.

நான் அணைக்கிறபோது தனக்குப் பிடிக்காதது போலவும் எனக்காக விட்டுத்தருவது போலவும் நடிக்க வேண்டும். நான் விலகுகிறபோது என்னைச் சீண்டவும் வேண்டும்.

இந்த புலவி நுணுக்கம் இன்று இப்படியிருந்தாலும், வேறு வேறு வகைகளில் முன்பும் இருந்திருக்கிறது. என்போலப் பலர் அல்லாடியிருப்பது தெரிகிறது.

**'கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீர்' என்று.**

(குறள் : 1313)

கிளையில் மலர்ந்த பூக்களை மாலையாகக் கட்டி நான் அணிந்திருந்தாலும், வேறொருத்திக்குக் காட்டுவதற்காகவே அணிந்திருக்கிறீர் என்று சினம் கொள்வாள்.

**"வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள் யாருள்ளித் தும்மினீர் என்று."**

(குறள் : 1317)

**"தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல் எம்மை மறைத்திரோ என்று".**

(குறள்: 1318)

"யார் உம்மை நினைத்ததால் இப்போது தும்மினீர்?" என்று கேட்டு முதலில் அழுதாள். ஊடல் கொண்டுவிடுவாள் என்று நினைத்து தும்மலை அடக்கிக் கொண்டால், "ஓ! உமக்கு நெருங்கிய யாரோ உம்மை நினைக்கிறார்கள் என்பதை நான் அறியாதபடி மறைக்கிறீரோ?" என்று சண்டைக்கு வருகிறாள்.

**"நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர் யாருள்ளி நோக்கினீர் என்று".**

(குறள் :1320)

அவளது அழகையே வியந்து பார்த்துக் கொண்டிருந்தாலும், "யாருடன் என்னை ஒப்பிட்டு உற்றுப் பார்க்கிறீர்?" என கோபம் கொள்வாள். ■

* **நட்பு பகைமையாவதற்கு சில முக்கியமான காரணங்களைக் கூறுங்களேன்?**

ரா.ப.அரூஸ், கிண்ணியா-03.

சாதாரணர்களாகிய எங்களைப் பொறுத்த வரையில்-'நித்தம் நித்தம் மாறுகின்ற மனம்' வியாபாரத்துறையில் இருப்போருக்கு 'பணம்' விளையாட்டில்- 'வெற்றியும் தோல்வியும் வீரர்க்கழகானாலும் வெற்றி தானே குறி!' அரசியலில் 'இதெல்லாம் சகஜமப்பா!' காதலில், நாமே நமக்குப் பகையைத் தருகின்ற நட்பை உருவாக்கிக் கொள்வதாக சங்கப் பாடல் ஒன்று கூறுகிறது. "... கைதை அம் தண் புனல் சேர்ப்பனோடு செய்தனெம் மன்ற ஓர் பகை தரு நட்பே." போதுமா அரூஸ்?



ரம்பா

# சிந்தியா பதில்கள்

* **நீலன், ரமேஷ், குமார்... அடுத்தது யாராக இருக்குமென்று எதிர்பார்க்கிறீர்?**

இ.அருந்தவச் செல்வம், மட்டக்களப்பு.

ஏப்ரல் வெளியீடு என்ன படம்? என்று கேட்கிறமாதிரி ஆகிப் போச்சு. அடக் கடவுளே! ஒரு நாட்டிலுள்ள மக்களினுடைய தராதரத்திற்கேற்பத்தான் அவர்களது தலைவர்களும் அமைந்திருப்பர் என்று சொல்கிறார்கள். புரிகிறதா, கொலைகளுக்கும் நமது நிலைமைக்கும் யார் காரணமாக இருக்கிறோம் என்று?

❑●

* **சிந்தியா, சமயோசிதம் என்பதற்கு விளக்கம் தேவை?**

ஆர்.பாத்திமா, பேருவளை.

ஆஹா; ஒரு கதை சொல்ல வாய்ப்புத் தந்த பாத்திமா வாழ்க!

இளமையில் வறுமையோடு பசி பட்டினியை அனுபவித்து பெரியவனான பிறகு பல இலட்சங்களைச் சம்பாதித்த வியாபாரி ஒருவன், தன் மரணப் படுக்கையில் இருந்தான். இறக்கும் தறுவாயில்,வழக்கமாக எல்லோருக்கும் வரும் உந்துதல் போல, தனது மகனை அழைத்து அவனும் அறிவுரை கூறத் தொடங்கினான்.

"இதோ பார் மகனே! என் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்கள் இரண்டு; அதாவது நேர்மையும் சமயோசித புத்தியும்தான். அந்த அடிப்படைக் காரணங்கள். வியாபாரத்தில் வாக்குத் தவறாமலிருக்க வேண்டும். விற்பனைப் பொருட்களை குறித்த நேரத்தில் அனுப்புவதாக ஒருவருக்கு நீ வாக்குறுதி அளித்தால், அதனால் என்ன துன்பம் வந்தாலும் சரி, அது உனக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தினாலும் சரி, அந்தக் குறித்த நேரத்தில் தவறாமல் சாமான்களை விநியோகித்துவிட வேண்டும்- இதுதான் நேர்மை என்பது" என்றான்.

"சரி அப்பா! நான் இதை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறேன்" என்ற மகன் தொடர்ந்து கேட்டான்.

"சமயோசித புத்தி என்றால் என்ன என்பதையும் சொல்கிறீர்களா, அப்பா?"

"அது மிகவும் சுலபமான விஷயம் மகனே... அவ்வாறு வாக்குறுதி எதையும் கொடுக்காமலிருப்பதே சமயோசித புத்தியாகும்!" என்றார் தந்தை.

❑●

* **ரம்பாவா, சிம்ரானா, மகேஸ்வரியா மூவரில் யார் கவர்ச்சிப் புயல்?**

க.பரமலிங்கம், வவுனியா.

ஸ்ரீதேவியின் தங்கை ஆளையே காணோம் விட்டு விடுங்கள். மீதி இருவரில் 'புயல் என்ற அடைமொழிக்குப் பொருத்தமானவர் ரம்பாதான். ஆனாலும்... ஆனாலும்... அந்தக் குறுகுறு விழிகள், ஆளை அசத்தும் புன்னகை, வறுமை நிவாரணம் கேட்கும் இடைப்பிரதேசம், தேவைப்பட்ட அளவுக்கு உடைகளையும் இழக்கத் துணியும் தியாக உணர்வு, நடிக்க வேண்டிய இடங்களில் காண்பிக்கிற முதிர்ச்சி... என்று பல்வேறு தகுதிகளிலும் பிரபுதேவா அண்ணனுக்குச் சொக்குப் பொடி போட்டவரே வெற்றிக் கொடி நாட்டுகிறார்.

❑●

* **ரோஜாவிடம் தங்களுக்குப் பிடித்தது?**

வி.புஷ்பராணி, பதுளை.

குஷ்பு. அதாவதுவாசனை.

❑●

* **மரடோனா?**

எம்.எம்.இஸ்மாயில், கல்முனை.

மறக்க முடியாத சாகசங்களை நிகழ்த்திய மந்திரக் கால், மதுப்பழக்கத்தால் பல்லாயிரம் இரசிகர்களை ஏமாற்றிவிட்டது.

❑●

* **விசித்திரத்தைப் பார்த்தீர்களா? தமிழினத்தின் தளபதியாக தந்தை செல்வாவால் காட்டப்பட்ட அமிர்தலிங்கம் துரோகியாகச் சுடப்பட்டார். பதினைந்து பென்ஸ் கார்களும் பல்வேறு வெளிநாட்டுச் சொத்துக்களும் கொண்ட, மிதமிஞ்சிய பணத்தால் ஒரே ஒருமுறையாவது எம்.பி.ஆகிவிட ஆசைப் படும் கொழும்புக் கோமான் எனவும், யாழ்ப் பாணத்தில் நூற்றுக் கணக்கான வாக்குகளைக் கூடப் பெறமுடியாதவர் என்றும் இருந்த குமார் பொன்னம்பலம் 'மாமனிதராக' சுடப்பட்டிருக்கிறார்?**

எஸ்.ரவீந்திரன், வெள்ளவத்தை.

ஸீக் ஃப்ரீட் லென்ஸின் 'நிரபராதிகளின் காலம்' நாடகத்தில் வருகிற ஒரு வரி ஞாபகத்திற்கு வருகிறது. "இன்றைய நமது காலத்தின் மாபெரும் சாதனை இதுதான்: கொள்கைப் பிடிப்பின் பெயராலோ அல்லது ஓர் இலட்சியத்தின் பெயராலோ செய்யப் படும் கொலைகளை நியாயமானது, சட்டத்துக்குப் புறம்பானது அல்ல என்றும், முன்னுக்குப்பின் முரணாக இருந்தாலும் அந்தந்த நேரத்துக்கு அவை சரிதான் என்றும் தொண்டர்கள் கருதுகிறார்கள்.

❑●



சிம்ரான்

* **கேள்வி கேட்பதற்குத்தான் புத்திசாலித்தனம் தேவை. பதில் சொல்வதற்கு அவ்வளவு தேவையில்லை என்கிறேன். சரிதானே சிந்தியா?**

மு.கீதா, கம்பளை.

பதில் சொல்வதற்கு புத்திசாலித்தனம் வேண்டுமா என்று கேட்டால், உங்கள் பதில் சரிதான்.

Regd. as a News Paper at the G.P.O (QD/40/NEWS/99)

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 32

ஆண்டவருடைய திருக்குமாரராக மண்ணுலகில் அவதரித்து மக்களுக்கு இறைவனின் அருள் வாக்குகளையெல்லாம் வழங்கினார். தமக்கிடப்பட்டிருந்த பணிகளை நிறைவேற்றியவராக மீண்டும் அவர் பரலோகம் சென்று ஆண்டவருடன் இணைந்து விட ஆயத்தமானார். மண்ணுலகில் மக்களுடன் ஒரு மானிடனாக வாழ்ந்து வந்த காலத்தை முடித்துக் கொண்டு தன் தந்தையிடம் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் தமது சீடர்களுக்கு வேண்டிய இறுதி உரைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து ஆண்டவனை நோக்கி தனது வேண்டுதல்களைச் சமர்ப்பித்தார். தமது சீடர்களை இறைவனே காத்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் இயேசுபிரானுடைய இறுதி வேண்டுகோள் இவ்வாறு தொடர்ந்தது:

### "உம்மிடம் வருகிறேன்!"

"நான் அவர்களோடு இருந்தபோது நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்து வந்தேன்; நன்கு பாதுகாத்தேன். அவர்களுள் எவரும் அழிவுறவில்லை. மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறும் வண்ணம் அழிவுக்குரியவன் மட்டுமே அழிவுற்றான்.

இப்போது உம்மிடம் வருகிறேன். என் மகிழ்ச்சி அவர்களுள் நிறைவாக இருக்கும்படி நான் உலகில் இருக்கும்போதே இதைச்சொல்கிறேன். உம் வார்த்தையை நான் அவர்களுக்கு அறிவித்தேன். நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல், அவர்களும் உலகைச்சார்ந்தவர்கள் அல்ல. ஆதலால் உலகம் அவர்களை வெறுக்கிறது.

அவர்களை உலகிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று நான் வேண்டவில்லை; தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன். நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை. நீர் என்னை உலகிற்கு அனுப்பியது போல, நானும் அவர்களை உலகிற்கு அனுப்புகிறேன். அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்.

"அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை; அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகிறேன். எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்.

நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன். இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும் நீர் என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல் அவர்கள்மீதும் அன்பு கொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்து கொள்ளும்.

### இயேசு கைதாகிறார்

இயேசுபிரான் ஆண்டவரிடம் தமது இறுதி வேண்டுகோளை விடுத்த பின்னர், தமது சீடர்களை அழைத்துக் கொண்டு கெதரோன் என்ற நீரோடையைக் கடந்து அருகே இருந்த ஒரு தோட்டத்துக்குள் சென்றார்.

இந்தத் தோட்டத்தில் இயேசுபிரான் தமது சீடர்களுடன் பல தடவைகள் வந்துள்ளார். இயேசுபிரானை ஒழித்துக் கட்டச் சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருக்கும் கும்பலை யூதாசு இஸ்காரியோத்து அதே இடத்துக்கு அழைத்து வந்திருந்தான். ஏற்கனவே பல தடவைகள் இயேசுபிரானுடனும் சீடர்களுடனும் யூதாசு இஸ்காரியோத்து இத்தோட்டத்துக்கு வந்திருந்தவன்.

யூதாசுடன் தலைமைக்குழுக்களும் பரிசேயர்களும், இயேசுபெருமானைக் கைது செய்வதற்காக அனுப்பி வைத்திருந்த காவலர்களும் அங்கு வந்திருந்தனர். அவர்கள் பந்தங்களையும் விளக்குகளையும் கொண்டு வந்திருந்தனர்.

இவ்வாறான ஒரு நிகழ்ச்சி நடைபெறும் என்பதை இயேசுபிரான் முன்கூட்டியே அறிந்திருந்தார். தன் முன்னே தீப்பந்தங்களுடன் வந்தவர்களிடம் இயேசுபிரான், "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார். அப்போது அவர்களில் ஒருவன்" நாசரேத்து இயேசுவைத் தேடுகிறோம்!" என்றான்.

"நான்தான்!" என்றார் இயேசுபிரான். இத்தகைய பதிலை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. உண்மையில் தாங்கள் தேடிவந்த இயேசு அவராக இருந்தால், இவ்வாறு துணிகரமாகத் தங்கள் முன்வருவாரோ? என்று சந்தேகம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்களிடம் ஏற்பட்ட தயக்கத்தை அவதானித்த இயேசுபிரான், மீண்டும் அவர்களிடம், "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார். அவர்களும் "நாசரேத்து இயேசுவைத் தேடுகிறோம்!" என்று மீண்டும் கூறினார்கள்.

"நான்தான் நீங்கள் தேடும் நாசரேத்து இயேசு. நீங்கள் என்னைத்தான் தேடுகிறீர்கள் என்றால், இவர்களைப் போகவிடுங்கள்!" என்று தமது சீடர்களைச் சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டார்.

இயேசுபிரானின் சீடர்களுள் ஒருவராக நின்றிருந்த சீமோன் பேதுரு தன்னுடைய இடையில் ஓர் உடைவாளை வைத்திருந்தார் அவ்வாளினை உருவி எடுத்து அங்குவந்திருந்த காவலர்களில் ஒருவன் மீது சுழற்றினார். இதனால் அக்காவலனின் வலக் காது அறுந்து வீழ்ந்தது. இதனைக் கண்ணுற்ற இயேசுபிரான் சீமோன் பேதுருவை முறைத்துப் பார்த்தவராக, "வாளை உறையுள்போடு!" என்று கட்டளையிட்டார். அவரும் தமது வாளை உறையுள் போட்டுக் கொண்டார்.

பேதுருவிடம் இயேசு இவ்வாறு கூறினார். "தந்தை எனக்கு அளித்த துன்பக் கிண்ணத்திலிருந்து நான் குடிக்காமல் இருப்பேனோ?"

'இன்பமோ துன்பமோ, நன்மையோ தீமையோ இறைவனால் மனிதர்களுக்கு இறைவனால் அருளாப்படும்போது அவற்றை நாம் மறுக்க முடியுமா?' இதனை வைத்தே இறைவன் வழங்குவனவற்றை எப்படியும் மனிதர்கள் ஏற்றே ஆகவேண்டியவர்கள் என்பதை இக்கூற்று எமக்கு எடுத்துக் காட்டுகிறதல்லவா..?

இயேசு பிரானைப் பிடித்த காவலர்கள், அவருடைய இரு கைகளையும் பின்புறமாகக் கட்டினார்கள். அவருக்கு முன்னும் பின்னுமாகக் காவலர்கள் சென்றனர். இப்பவனிக்கு முன்னால் பரிசேயர்கள் சிலரும் ஆலயக் குருக்களின் ஆட்களும் சிரித்துக் கும்மாள விட்டவாறு சென்றார்கள்.

இயேசு பெருமானின் சீடர்கள் ஒருபுறமாக ஒதுங்கி நின்று கலங்கிக் கண்ணீர் சிந்தினர். ஒரு கொலைக் குற்ற வாளியையோ கொள்ளைக்காரனையோ இழுத்துச் செல்வது போல் இயேசுபிரான் அக்கொடியவர்களால் அழைத்துச் செல்லப்பட்டார்.

கயபா என்பவர்தான் அப்போது தலைமைக் குருக்கள் பதவியிலிருந்தார். அவருடைய மாமனாரான அன்னா என்பவரிடம்தான் முதலில் இயேசுபிரான் கொண்டுவரப்பட்டார். பின்னர் தலைமைக் குரு கயபாவின் மாளிகைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இயேசுபிரானைப் பின் தொடர்ந்து சீமோன் பேதுருவும் மற்றுமொரு சீடரும் சென்றார்கள்.

பேதுருவுடன் சென்ற சீடர் தலைமைக் குருவுக்குப் பழக்கமுடையவர் என்பதனால் குருவின மாளிகைக்குள தடையின்றிச் சென்றார். ஆனால் பேதுரு மாளிகையின் வாயிலில் நின்று கொண்டார். மற்றச் சீடரோ, காவலர்களிடம் அனுமதி பெற்று மாளிகைக்குள் பேதுருவையும் அழைத்துக் கொண்டு சென்றார்.

மாளிகை வாயிலில் நின்றிருந்த ஒரு பெண், இயேசுபிரானுடைய அருளுரைகளைக் கேட்டபதற்காக தலைமைக் குருக்களால் அனுப்பி வைக்கப்படும் ஒற்றர் குழுக்களில் இணைந்து செல்பவள். சீமோன் பேதுருவைக் கண்டதும்அவரை அடையாளம் கண்டு கொண்டாள். பேதுருவை அணுகி, "நீயும் இம்மனிதருடன் திரியும் கூட்டத்தில் ஒருவன் தானே?" என்று கேட்டாள். ஆனால் பேதுரு 'இல்லை' என்று கூறி மறுதலித்தார்.

# இயேசு பெருமான் கைதானார்



இராஜகுமாரன்

### விசாரணை

தன் முன்னால் குற்றவாளியாக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த இயேசுபிரானைப் பார்த்து தலைமைக்குரு பலவிதமான கேள்விகளைக் கேட்டார். "தொழுகைக் கூட்டங்களிலும் கோவில்களிலும் கூட்டத்தைக் கூட்டி அவர்களுடைய மனங்களை மாற்றுவதுடன், எங்களைப் போன்றவர்களைப் பற்றியெல்லாம் பொய்ப் பிரசாரங்களையும் செய்தவன் நீதானே!" என்று கேட்டார்.

இதற்குப் பதிலாக இயேசுபிரான், "நான் உலகறிய வெளிப்படையாய்ப் பேசினேன். யூதர் அனைவரும் கூடிவரும் தொழுகைக் கூடங்களிலும் கோவிலிலும் தான் எப்போதும் கற்பித்து வந்தேன். நான் மறைவாக எதையும் பேசியதில்லை. ஏன் என்னிடம் கேட்கிறீர்? நான் பேசியதைக்கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் கேட்டுப்பாரும். நான் என்ன சொன்னேன் என அவர்களுக்குத் தெரியுமே" என்றார்.

இயேசுபிரான் இவ்வாறு நேரிடையாகவே தலைமைக் குருவுக்குப் பதிலளித்தமை அங்கிருந்த -குருவுக்குச் சார்பானவர்களுக்குப் பலத்த கோபத்தை ஏற்படுத்தியது. கவலருள் ஒருவன் இயேசு பிரானை அணுகி, "தலைமைக் குருவுக்கு மரியாதையில்லாமல் இப்படியா பேசுகிறாய்?" என்று கூறி இயேசுபிரானுடைய கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 29 விடை:** அப்பத்துண்டைக் கொடுத்தார்

**பரிசு பெறுவோர்:**

1. **செல்வி பி. துஷானி,** டில்லிக்கூல்றி த.வி., லிண்டுல.
2. அ. **அமலராஜன்,** கல்லடி, மட்டக்களப்பு.
3. **ஜே.எம். றிஸ்மி,** ஹாஜியார் வீதி, மருதமுனை-06.
4. **ஜோசப் அருள்சாமி,** திகனை, இராஜவெல.
5. **இ.லிப்னி எஸ்ரோன்,** த.பெ.இல-68, நுகேகொட.

**திருமறை (பு.ஆ) 32** வினா :- **சீமோன் பேதுருவிடம் முன்னர் இயேசு பிரான் என்ன சொன்னார்?**

ஜனவரி 29 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை-பு.ஆ.32-தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# கனடாவில் கந்தசாமியார்

**(காதிலை பூ கந்தசாமியார் கனடாவில் உள்ள தனது உறவினரைப் பார்ப்பதற்காகச் செல்கிறார். கட்டுநாயக்கா விமானத்தில் ஏறி கனடா ரொரன்ரோ விமான நிலையத்தில் வந்து இறங்குகிறார். விமான நிலையத்தை விட்டு வெளியேறுகிறார். கந்தசாமியின் மருமகன் வரவேற்பதற்காக நிற்கிறார்.**

**இலங்கையில் இருந்து கனடாவில் குடியேற வரும் உறவினர்களை வரவேற்பதற்காக எம்மவர்கள் ரொரன்டோ விமான நிலைய மண்டபத்தில் கையில் பூச்செண்டுகளுடன் நிற்பதைக் காண்கிறார். பின் மருமகன் வீட்டில் இருந்து கந்தசாமி தனது நண்பர் கிறீஸ் வீட்டிற்குச் செல்கிறார்.)**

சென்ற வாரத் தொடர்ச்சி............



குடிச்சா வீடு முழுக்க சுருட்டு புகை மணம். வீட்டுக்குள்ள குளிர் வராம வீடு முழுக்க அடைச்சுக் கிடந்தா சுருட்டுப் புகை எங்கபோறது அப்படியிருந்தும் இடைக்கிடை வெளியில சந்திர மண்டலத்திற்கு போற மாதிரி உடுப்புக்களை போத்து முடிக்கொண்டு சின்ன ஒரு ரவுண்ட் இந்தக் குளிருக்கால போய் ஒரு சுருட்டுப் பத்திப்போட்டு வருவன். இப்பிடித்தான் சொன்னா உனக்கு சிரிப்பு வரும் ஒருக்கா றோட்டில வெத்திலையை துப்பி நான் பட்ட கஷ்டத்தை சொல்லுறன் கேளன். இப்படித்தான் மத்தியானம் சாப்பிட்டுப் போட்டு சந்தியில் உள்ள எங்கட தமிழ்க் கடையில வெத்திலை வாங்கி சாப்பிட்டுக் கொண்டு வலு ஜாலியாக றோட்டால நடந்து வந்து கொண்டிருந்தேன். துப்ப வேணும் போல கிடந்தது. அருகில ஒரு லைட் போஸ்ட் (LIGHT POST) ஐ கண்டவுடன் ஊர் ஞாபகத்தில் துப்ப வேணும் போல இருந்தது. அதில நிண்டு துப்பினேன் அங்கால ஒரு வெள்ளைக்காரன் கண்டுபோட்டு ஓடிவந்தான். எனக்கு விஷயம் விளங்கிவிட்டது எல்லாம் பிரச்சனையாகப் போகப்போகுது எண்டு நான் உடனே என்ன செய்தன் தெரியுமோ? ஒரு கையை நெஞ்சிலும் மற்ற கையை (LIGHT POST)லுமாப் பிடித்துக்கொண்டு நெஞ்சை தடவிக் கொண்டு நிண்டன். வெள்ளைக்காரன் நினைத்தான் நான் இரத்த வாந்தியல்லோ எடுக்கிறன் எண்டு அவனுக்கு எங்க தெரியப்போகுது வெத்திலையைப் பற்றி உடனேயே கேட்டான் ARE YOU OK? என்று திருப்பி திருப்பி எண்டு கேட்டான் I AM OK NO PROBLEM என்று நான் சொன்னேன் நல்ல வேளை கொஞ்ச இங்கிலீசு படிச்சபடியா அதில தப்பிறத்தக்கு லேசாய்ப் போச்சுது ஒரு மாதிரி மெல்ல மெல்ல நடந்து போய் திரும்பி பார்த்தன் அவன் என்னையே பார்த்துக் கொண்டு நின்றான். பாவம் கிழவன் என்று நினைச்சிருப்பான் பிறகு என்ன ஓட்டமும் நடையுமாய் வீடு வந்து சேர்ந்திட்டன். அண்டைக்கே நினைச்சிட்டன் றோட்டிலையும் வீட்டிலையும் வெத்திலை சாப்பிட்டா பிரச்சனை எண்டு விட்டுட்டன்.

இதுகளை முதலே கேள்விப்பட்டுப் போட்டுத்தான் ஊரிலை இருக்கைக்கை மகளுக்கு கடிதம் எழுதினனான் நாங்கள் கனடாவுக்கு வரமாட்டோம் என்று விடாப்பிடியாய் நிண்டனான். பொம்பர் அடிச்சா என்ன? செல் அடிச்சா என்ன? செத்தாலும் ஊரிலை தான் சாகிறது எண்ட முடிவோடு இருந்தன். மகன் கனடாவிலை இருந்து கடிதத்துக்கு மேல கடிதம் எழுத என்ட மனிசி அப்பா கனடாவுக்குப் போனா பேரப்பிள்ளைகளோட பொழுதும் போகும் கடைசிக் காலத்திலை யாரு எங்களைப் பார்க்கிறது அவளும் விடாப்பிடியாய் நின்று என்னை ஒரு மாதிரி கனடாவுக்கு கொண்டு வந்து சேர்த்துப் போட்டான்.

ஒரு காலத்திலை என்ன மாதிரி எங்கட நாடு இருந்தது. அந்நிய நாட்டுக்காரன் எங்கடை நாட்டுக்கு போட்டி போட்டுக் கொண்டல்லோ வந்து பிடிச்சவங்கள். அதுதான் அப்ப செல்வம் கொழிக்குது எண்டு எங்கட நாட்டுக்கு தேடி வந்தான். இப்ப நாங்கள் அவங்கட நாடுகளுக்கு ஷெல் பொம் பொழியுது என்று அவங்களை தேடி ஓட வேண்டியதாய் கிடக்குது. எல்லாம் அவன் எழுதிய எழுத்தடா கந்தசாமி.

**கந்தசாமி:- அவனின்ட எழுத்து இல்லை எல்லாம் அவவின்ட எழுத்திலைதான் இருக்குது அவ நினைச்சா எல்லாம் சரியாய் போய்விடும் என்றார் கந்தசாமி.**

**கிறீஸ்:** மகன் ஏதோ கொஞ்சக் காசு முதல் போட்டு மிச்சத்தை வாங்கிய கடன் எடுத்து வீடு வாங்கினவர். கடன் கட்டி முடிய 20 வருடம் செல்லுமாம். அது தான் மகனும் மருமகளுமாக காலையில் எழுந்து வேலைக்குப் போனால் இரவு தான் வீட்டுக்கு வருவீனம். இப்படி அடிச்சுத்தான் வீட்டுக் காசு கட்டுகினம். பாவங்கள் என்ன செய்யிறது இயந்திர வாழ்க்கைதான். நாங்கள் கொழும்பில நிற்கேக்கை மகன் கேட்டவர் வீடு வாங்கப் போறன் எண்டு நானும் வாங்கு எண்டு சொன்னனான். கனடாவில் இருக்குது என்டால் எங்களுக்கும் பெருமைதானே எண்டல்லோ நினைச்சன். இஞ்சவந்து பார்த்தாப்பிறகுதான் கனடாவில் வீடு வைச்சிருக்கிற எங்கட ஆக்கள் படுகிற பாட்டை பார்த்தன். இஞ்ச வந்து குளிருக்கேயும் பனியுக்குள்ளேயும் விழுந்து விழுந்து கஷ்டப்பட்டு உழைக்குதுகள். நாங்கள் கொழும்பில இருக்கேக்கை கனடாவுக்கு போன் அடிச்சு மகனிட்டை தம்பி 50 ஆயிரம் அனுப்பு ஒரு லட்சம் அனுப்பு- விலாசமாக போனிலை சொல்ல அதுகளும் பார்த்துப் பாராமல் மாறிச் சாரி அனுப்பியிருக்குதுகள். இஞ்ச வந்து பார்த்தாப் பிறகல்லோ தெரியுது எப்பிடி கஸ்டப்பட்டு இந்தக் காசை அனுப்பிச்சுதுகள் எண்டு. அதைவிட ஃபோன்பில் எவ்வளவு கட்டியிருக்கினம். கந்தசாமி ஊருக்கு போன பிறகு அங்குள்ள எங்கட ஆட்களுக்கு சொல்லு வெளிநாட்டிலை எவ்வளவோ கஸ்டப்பட்டுதான் எங்கட ஆக்கள் உழைக்குதுகள் எண்டு. (ஆக்ரோசமாக சொன்னார் கிறீஸ்.)

கந்தசாமி உன்னை அதிகம் அறுத்திட்டன் போல கிடக்குது ஏதும் தண்ணி பாவிக்கிறனியோ?

**கந்தசாமி:- இல்லை என்டாலும் சும்மா ஒரு பம்பலுக்கு ஒரு கிளாஸ் அடிப்பன்.**

**கந்தசாமி:- வெத்திலை என்னவும் வைச்சிருக்கிறியோ வந்த நாளிலை இருந்து வெத்திலை போடவில்லை. அதுதான் கேட்டனான்.**

**கிறீஸ்:** உஷ் உஷ் (வாயிலை விரலை வைத்தபடி) சத்தம் போடாதே வெத்திலையும் சுருட்டும் தடைசெய்யப்பட்ட பொருட்கள். இந்த வீட்டிலை இந்த வார்த்தைகள் மகனின்டயும் மருமகளின்டையும் காதிலை கேட்டால் துலைஞ்சன்.

**கந்தசாமி:- ஏன் இப்படி பயப்படுகிறாய்?**

**கிறீஸ்:** இல்லையடாப்பா ஊரிலை என்டால் சாப்பிட்டுப்போட்டு வெத்திலைத் துண்டு போட்டால்தான் சாப்பிட்ட சாப்பாடு செமிச்ச மாதிரி இருக்கும். அந்த வழக்கத்திலை தான் இஞ்சையும் வெத்திலை வாங்கிப் போட்டனான். துப்பவும் இடம் வேணுமே வீட்டில் உள்ள பைப் தொட்டியிலதான் துப்ப வேணும். அது எல்லா இடமும் தெறிச்சு சிவப்பாய் கிடக்குதுதாம் எண்டு மருமகன் மகனிட்ட(COMPLAIN) பண்ணிப் போட்டா. அது ஒரு சின்ன மனஸ்தாபமாய் போச்சுது. சுருட்டையும் குடிச்சா வீடு முழுக்க சுருட்டு புகை மணம்.






## பாடகி



← பொப் இசைப் பாடகி மடோனாவின் 'ஒளிக் கீற்று' (Ray of Light) ஒலி-ஒளிப் பேழை அமெரிக்காவில் 6 விருதுகளை வென்று சாதனை நிலைநாட்டியுள்ளது. 1998ம் ஆண்டுக்கான தலைசிறந்த இசைப்பேழை என்ற விருதையும் சிறந்த இயக்கம், சிறந்த படப்பிடிப்பு, சிறந்த படத்தொகுப்பு, சிறந்த விசேட உத்திகள் ஆகியவற்றுக்கான விருதுகளையும் மடோனாவின் இசைப் பேழை வென்றெடுத்துள்ளது. ஜெர்மனியில் 1999 பெப்ரவரி 24ம் திகதி மடோனா பங்குபற்றிய 41 வது விருது வழங்கும் விழாவில், மடோனா மேடையில் தோன்றிப்பாடுவதை படத்தில் காணலாம். ◘




↓ தர்ம கைங்கரியங்களுக்கு நிதி திரட்டுவதில் சாதனை படைத்தவராகக் கருதப்படும் ஜோன் ஸ்வேர்லிங் டொலர் படுக்கையில் ஆனந்த மாகப் புரளுகிறார். இவர் விளம்பரத்துறை நிர்வாகியாகவிருந்து ஓய்வு பெற்றவர். 1999 ஏப்ரல் 18ம் திகதி இலண்டன் மாநகரில் மரதன் தொடர் ஓட்டம் ஒன்றை நடாத்தியதன் மூலம் 18 கோடி 70 இலட்சம் டொலர் திரட்டினார்.

ஏற்கனவே 1982ம் ஆண்டு சேர் றோஜர் கிப்ஸ் என்பவர் 7 கோடி 69 இலட்சம் டொலர் இதே போன்ற மரதன் தொடர் ஓட்டத்தில் திரட்டினார். ◘




## காசு மேல....



## இருவர்

↗ ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் உலகின் பல பாகங்களிலும் பிறந்து வருகின்றன. முரசில்கூட பல தடவைகள் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் பற்றிய படமும் தகவல்களும் இடம்பெற்றுள்ளன.

ஒட்டிப் பிறக்கும் இரட்டையர்களான சியாமீஸ் இரட்டையர்கள் முன்னெல்லாம் ஒட்டியே வாழ வேண்டிய நிர்ப்பந்தம். காரணம் அப்போது சியாமீஸ் இரட்டையர்களை அறுவைச் சிகிச்சை மூலம் பிரிக்கும் அளவிற்கு மருத்துவ வளர்ச்சியில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை.

முன்பொரு முறை ஒட்டிப் பிறந்த இரட்டையரில் ஒருவர் இறந்துவிடமற்றவர் இறந்த தனது இரட்டைச் சகோதரனுடனேயே வாழ்ந்து சில நாட்களின் பின் இறந்தார்.

ஆனால் இப்போது அப்படியல்ல. மருத்துவ வளர்ச்சி முன்னேறி விட்டது. ஒட்டிப் பிறக்கும் இரட்டையர்களை வெற்றிகரமாகப் பிரித்து விடுகிறார்கள்.

படத்தில் இருக்கும் இரட்டையர்கள் அண்மையில் மொரோக்கோ நாட்டில் பிறந்தவர்கள். வயிற்றுடன் ஒட்டிப் பிறந்த இவர்களுக்கு இதயம் ஒன்றுதான். அதனால் இவர்களைப் பிரிப்பது கடினமான காரியம்.

இன்று வரை ஆரோக்கியமாக இருக்கும் இவர்களைப் பிரிப்பதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன.

(பட உதவி : ஹமீஸ் - கட்டார்)

← உலகில் மிக உயரமான குன்றுகளின் உச்சியில் ஏறியும் மிகத்தாழ்ந்த பகுதியை அடைந்தும் சாதனை படைத்த டேவிட் ஹெம்பிள்மன் அடாம்ஸ் என்பவரின் படம் இது.

உலகின் மிக உயரமான இமயமலை உச்சியை இவர் அடைய முயற்சிக்கவில்லை. எனினும் அமெரிக்க அலஸ்கா மாநிலத்திலுள்ள மக்கின்லி மலையின் உச்சியை ஹெம்பிள்மன் தொட்டிருக்கிறார்.

இது தவிர ஐந்து கண்டங்களிலுமுள்ள பல மலைச்சிகரங்களில் கால் பதித்திருக்கிறார்கள். இச் செயலை 1980ம் ஆண்டுதான் தொடங்கினார்.

இதன் பின்னர் 18 ஆண்டுகளின் பிறகு 1998 மார்ச் முதல் மே மாதம் வரை மற்றுமொரு தோழருடன் வட துருவத்தில் நடந்து அதன் அந்தத்தைத் தொட்டுத் திரும்பினார். இவர் பனி மலைகளில் ஏறும் போது கடுங் குளிரை மட்டுமன்றி அங்கு வாழும் கொடிய விலங்குகளான பனிக் கரடி, பனிச்சிறுத்தை போன்றவற்றின் தாக்குதல்களில் இருந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தும் உயிரைக் காப்பாற்றிக் கொண்ட சம்பவங்களும் உள்ளன. ◘




## பாய்ச்சல்



## 5 வது பிறந்தநாள் வாழ்த்து

**செல்வி வினிற்றா ராஜசிங்கம்**

12.01.2000

சுழிபுரத்தைச் சேர்ந்த ராஜசிங்கம், ஜெயவாணி தம்பதியினரின் செல்வப் புதல்வி **வினிற்றா** தனது ஐந்தாவது பிறந்ததினத்தை **12.01.2000** அன்று கனடாவிலுள்ள North york நகரில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, குட்டித் தங்கை ரோஸ், பாட்டி, அத்தைமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான், கொழும்பிலுள்ள தாத்தா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்கா, அண்ணாமார், தங்கச்சிமார், தம்பி, சுவிஸிலுள்ள மாமா, மாமி, டென்மார்க் மாமா, மாமி, மச்சாள், மச்சான் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சாமி அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*தகவல் தி. ராஜசிங்கம், கனடா.*